Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் – 28 | விலை – 30 ரூபா

செய்தி : 021 493 0000 விளம்பரம் : 021 493 1111

சுடர் :35 கதிர் :41 மார்கழி 21 ஆம் நாள் திங்கட்கிழமை 06 ஜனவரி 2020 வள்ளுவர் ஆண்டு 2050




# கூட்டமைப்பு எம்.பிக்களை கூண்டோடு கைது செய்க!

## கடும்போக்கு சிங்கள அமைப்பு கோத்தாவுக்கு 'ஐடியா'

**கொழும்பு, ஜனவரி 6**

**நாட்டைப் பாதுகாக்கும் ஒற்றையாட்சியை எதிர்த்தும், நாட்டைப் பிளவுபடுத்தும் சமஷ்டியை வலியுறுத்தியும் கருத்துக்களைத் தெரிவித்துவரும் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு உடனடியாகக் கைதுசெய்து சிறையில் அடைக்க வேண்டும். இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் நவ சிங்கள ராவய அமைப்பின் பொதுச்செயலர் மாகல்கந்தே சுதந்த தேரர்.**

23 >






## ரஞ்சனுக்கு பிணை

கொழும்பு, ஜன. 6

அனுமதிப் பத்திரம் புதுப்பிக்காத துப்பாக்கியையும் 127 துப்பாக்கி ரவைகளையும் வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட

23 >

## கடல் அலையில் ஒருவர் சாவு

பருத்தித்துறை, ஜன. 6

வடமராட்சி பருத்தித்துறை முனைக் கடலில் நீராடச் சென்ற ஒருவர் கடல் அலையால் இழுத்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி பன்னங்கண்டியைச்

23 >

## கிணற்றுக்குள் மூதாட்டியின் சடலம்!

வவுனியா, ஜன. 6

வவுனியா மகாறம்பைக்குளம் புளியடியில் கிணற்றுக்குள்ளிருந்து அன்னலட்சுமி (வயது-85) என்ற மூதாட்டி சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த மூதாட்டியை

23 >

## திடீரெனக் கை விட்ட இ.போ.ச அந்தரித்து அலைந்த பயணிகள்

### பணியாளரைக் கைது செய்ததால் யாழ்.பஸ்நிலையத்தில் நேற்று பரபரப்பு



விரிவு பக்.23

## கடற்படை மீது தாக்குதல் நாயாறில் இருவர் கைது!

நாயாறு, ஜன. 6

முல்லைத்தீவு நாயாறில் அமைந்துள்ள கடற்படைத் தளத்துக்குள் மதுபோதையில் நுழைய முற்பட்டதோடு, கடற்படையினரையும் தாக்கினர் என்ற குற்றச்சாட்டில் 2 பேரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரி

23 >

## போராட்ட வலி உணர்ந்த தலைமைகளே தேவை

### சுரேஷ் இடித்துரைப்பு



முல்லைத்தீவு, ஜன. 6

"ஐக்கிய தேசியக் கட்சியினுடைய முகவராகச் செயற்படக்கூடிய சுமந்திரன் போன்றோர் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்குவதாக இருந்தால் தமிழர் பிரச்சினை எங்கே போய் முடியும்?

04 >

## அதிவேகம் பறித்தது உயிரை!



முறிகண்டி, ஜன. 6

முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முறிகண்டியில் நேற்று இரவு 8.45 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

04 >

## குமார் இருந்திருந்தால் தமிழருக்கு விடிவு !

### இப்படிச் சொல்கிறார் செ.கஜேந்திரன்

வவுனியா, ஜன. 6

"குமார் பொன்னம்பலம் உயிருடன் இருந்திருந்தால் தமிழர்களுக்கான விடிவு சாத்தியமாகியிருக்கும்" இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலருமான செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நினைவு உதைபந்தாட்ட போட்டி வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று இடம்பெற்றது.

23 >

## கூட்டமைப்புக்காகவா புதிய சட்டவுரைவு?

### சம்பிக்க கேள்வி

கொழும்பு, ஜன. 6


தேர்தல் வெட்டுப்புள்ளி 5 வீதத்திலிருந்து 12.5 சதவீதமாக அதிகரிக்கப்படுமானால் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 21 ஆக அதிகரிக்க கூடும். ஐக்கிய தேசியக் கட்சியின் திருமதி விஜயகலா மகேஸ்வரன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அங்கஜன் ஆகியோ

04 >

# அபிவிருத்தியில் அக்கறை அரசியல் தீர்வில் அசமந்தம்

## கோத்தாவின் உரை குறித்து ரணில் விக்கிரமசிங்க விமர்சனம்





**கொழும்பு, ஜன. 6**

**புதிய ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில் அபிவிருத்தி தொடர்பில் அதிக கரிசனை செலுத்தப்பட்டுள்ளது. ஆனால், அரசியல் தீர்வு தொடர்பில் எந்த வித அக்கறையும் செலுத்தப்படவில்லை. இது தொடர்பில் எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வுகளில் நாம் சுட்டிக்காட்டுவோம். இவ்வாறு முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

புதிய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் கொள்கை விளக்க உரை நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

அதன்பின்னர் அங்கு புதிய ஜனாதிபதிக்கும் முன்னாள் பிரதமருக்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றது. இந்த இரண்டு விடயங்கள் தொடர்பில் வினவியபோதே முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டு மக்களின் ஜனநாயக ஆணைக்கு மதிப்பளித்து புதிய ஜனாதிபதி செயற்பட வேண்டும். ஜனநாயக விழுமியங்களுக்கு ஒவ்வாத நடவடிக்கைகளில் அவர் ஈடுபடக்கூடாது. மூவின மக்களையும் அவர் அரவணைத்துப் பயணிக்க வேண்டும். சிங்களம், தமிழ், முஸ்லிம் என்று இன ரீதியிலும், மத ரீதியிலும், மொழி ரீதியிலும் அவர் வேறுபாட்டைக் காட்டக் கூடாது.

நாட்டின் அபிவிருத்திகளால் மூவின மக்களும் பயனடைய வேண்டும். அதேவேளை, அரசியல் தீர்வும் காணப்பட வேண்டும். பிரிக்க முடியாத ஒருமித்த நாட்டுக்குள் அதியுச்ச அதிகாரப் பகிர்வுடன் மூவின மக்களும் ஏற்கும் தீர்வே வேண்டும் - என்றார். (ஒ.5,22)

## சிலை திறப்பு

அச்சுவேலி, ஜன. 6

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் நிறுவுநர் செவாலியர் சிற்றம்பலம் ஆபிரகாம் காடினரின் உருவச் சிலை திறப்பு விழா இன்று திங்கட்கிழமை கல்லூரியில் முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலய பங்கு மக்கள் மற்றும் பாடசாலை சமூகத்தின் அனுசரணையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சஞ்சீவ் காடினரும், மதிப்புறு விருந்தினராக இறையியல் பேராசிரியர் கலாநிதி அருட்தந்தை. எஸ்.ஜே.இமானுவேல் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-ந-422)

## சுதந்திர நாளில் கொடி ஏற்றுங்கள்

*மஹிந்த கோரிக்கை*

கொழும்பு, ஜன. 6

பாதுகாப்பான தேசம் - வளமான நாடு என்ற் கருப்பொருளின் கீழ் 72ஆவது சுதந்திர தினத்தை சம்பிரதாயப்பூர்வமாக கொண்டாட அரசு முடிவுசெய்துள்ளது.

72ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் நிகழ்வை ஏற்பாடு செய்ய நியமிக்கப்பட்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சரவை உபகுழு அதற்கான ஏற்பாடுகளை செய்துவருவதுடன், இந்தக் குழு ஒன்றுகூடி ஏற்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்தது.

சுதந்திர தின அணிவகுப்பில் பங்கேற்பாளர்களின் எண்ணிக்கையை கடந்த ஆண்டைவிட 30 சதவீதத்தால் குறைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், ஒவ்வொரு வீட்டிலும் தேசியக் கொடியை ஏற்றி, ஒரே நேரத்தில் ஒரு மரத்தை நட்டு வைக்குமாறும் இதன்போது பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளார். (ஒ,5,24)

## வயிற்றிலிருந்து ரூ. 58 மில்லியன் மீட்பு



கொழும்பு, ஜன. 6

கட்டுநாயக்க விமான நிலையத்தில் பொதி வண்டிகள் செலுத்தும் சேவையில் ஈடுபடும் 'போட்டர்' ஒருவரது வயிற்றில் கட்டப்பட்டிருந்த நிலையில் 58 மில்லியன் ரூபா பெறுமதியான தங்க பிஸ்கட்டுகளை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

நேற்று அதிகாலை சுங்க அதிகாரிகள் தங்கத்தைக் கைப்பற்றியுள்ளதுடன் அந்தத் தங்கத்தின் எடை 6.5 கிலோகிராம் எனவும் மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம் சுனில் ஜயரத்ன தெரிவித்தார்.

மேற்படி நபரின் செயற்பாடுகளில் சந்தேகம் வெளிப்பட்ட நிலையில் சுங்க அதிகாரிகள் அவரைச் சோதனைக்குள்ளாக்கியுள்ளனர். எவரும் கண்டுபிடிக்க முடியாத வகையில் அவர் தங்க பிஸ்கட்டுகளை தன் வயிற்றில் இறுகக் கட்டிக்கொண்டுள்ளார்.

விமான சேவை பணியாளர் தங்க பிஸ்கட்டுகளை விமான நிலையத்துக்கு வெளியில் கொண்டு செல்ல முயற்சித்த போதே கைது செய்யப்பட்டுள்ளார். கைப்பற்றப்பட்ட தங்க பிஸ்கட்டுகளை அரச உடமையாக்குவதற்கும் சம்பந்தப்பட்ட ஊழியருக்கு தண்டனை பெற்றுக்கொடுப்பதற்கும் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுனில் ஜயரத்ன மேலும் தெரிவித்தார். (ஒ,5,24)

## கோத்தாபயவின் திமிர் இனவன்முறைக்கு தூபம்

***எச்சரிக்கிறார் விக்ரமபாகு***



கொழும்பு, ஜன. 6

கோத்தாபய ராஜபக்ஷவின் சிங்கள பௌத்த பேரினவாத நடவடிக்கைகள் மிகக் கேவலமானவை. இந்த நாடு சிங்கள - பௌத்த மக்களுக்கே உரியது என்ற திமிருடன் அவர் செயற்படுகின்றமை மீண்டும் இன வன்முறைக்கே வழிவகுக்கும். இவ்வாறு நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலர் பேராசிரியர் விக்ரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

'உதயன்' பத்திரிகைக்கு நேற்று வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. சர்வாதிகாரப் போக்கில் செயற்படுகின்றமையை அவரின் கொள்கை விளக்க உரை தெட்டத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.


அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தையும், 13 ஆவது திருத்தத்தையும் இல்லாதொழிக்கும் வகையில் தனது சர்வாதிகாரத்தைப் பலப்படுத்த கோத்தாபய முயற்சிக்கின்றார். இதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கவே முடியாது.

அதேவேளை, சர்வதேச நாடுகளுடனும் சர்வதேச அமைப்புகளுடனும் அவர் முட்டிமோதுகின்றார். சுவிஸ் நாட்டின் மீது அவர் அநாவசியமான முறையில் கைவைத்துள்ளார். மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கின்ற அதற்காகக் குரல் கொடுக்கின்ற சுவிஸ் நாட்டுடன் கோத்தாபய முட்டிமோதுகின்றமை எமது நாட்டுக்குப் பெரும் அவமானம்.

தமிழ்பேசும் மக்களைப் புறக்கணிக்கும் வகையில் - அவர்களைப் பழிவாங்கும் வகையில் அவரின் ஒவ்வொரு நடவடிக்கைகளும் அமைந்துள்ளன.

ஜனாதிபதியின் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியாலும் பலமான எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தொடர முடியாத துர்ப்பாக்கிய நிலைமை காணப்படுகின்றது. அந்தக் கட்சிக்குள் உருவாகியுள்ள உட்கட்சி முரண்பாடுகளே அதற்குக் காரணம். மேலும், ஐக்கிய தேசியக் கட்சியை இனவாதப் பாதையில் பயணிக்க வைக்கும் முயற்சியில் இனவாத நிலைப்பாடுடைய பிரிவினர் திரைமறைவில் செயற்பட்டு வருகின்றமையையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கோத்தாவின் சர்வாதிகாரத்துக்கு - அராஜக நடவடிக்கைகளுக்கு முடிவுகட்ட நாட்டிலுள்ள முற்போக்கு சக்திகள் அனைத்தும் ஓரணியில் திரள வேண்டும் - என்றார். (ஒ,5,22)



## மீண்டும் சோதனை

வவுனியா, ஜன. 6

வவுனியா ஈரப்பெரியகுளம் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக பொலிஸார் வீதித் தடையை ஏற்படுத்தி, சோதனை நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியுள்ளனர். பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே, இந்தச் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இதற்கமைய, கண்டி நெடுஞ்சாலை ஊடாக செல்லும் வாகனங்களை மறித்து தீவிர சோதனை நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். பயணிகளின் பொதிகளும் ஸ்கானர் இயந்திரத்தைக்கொண்டு சோதனைக்குட்படுத்தப்பட்டன. (ஒ.5)

## வழிபாடு

*ஏழாலை, ஜன. 6*

யாழ். மாவட்டத்தில் சர்வமத வேலைத் திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டு புதிய வருடத்தை முன்னிட்டு, பௌத்த மத வழிபாடுகள் கடந்த வியாழக்கிழமை யாழ். நாகவிகாரையில் நடைபெற்றன.

நாட்டு மக்கள் அனைவருக்கும் சமாதானம், சாந்தி, சௌபாக்கியம் வேண்டி இந்த வழிபாடு நடத்தப்பட்டது. (க)

## சுமதிபால ரிட் மனு தாக்கல்

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் பிறப்பித்த உத்தரவை செல்லாது என அறிவிக்க வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் திலங்க சுமதிபால மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் முன்னாள் தலைவரான திலங்க சுமதிபாலவுக்கு இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தின் செயற்பாடுகளில் ஈடுபட கடந்த அரசில் விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்த ஹரின் பெர்னாண்டோ தற்காலிகத் தடை விதித்தார்.

இந்த ரீட் மனு ஊடாக திலங்க சுமதிபால, முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் பிறப்பித்த உத்தரவு செல்லாது என்று நிராகரிக்க நீதிமன்றத்திடம் கோரிக்கைவிடுத்துள்ளார். (ஏ)

## முதியவர் காயம்

*சாவகச்சேரி, ஜன. 6*

ஏ9 வீதியைக் கடக்க முயன்ற 67 வயது முதியவர். இ.போ.ச. பேருந்துடன் மோதுண்டார். அதில் காயமடைந்த முதியவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த விபத்து நேற்று முன்தினம் மீசாலைச் சந்தியில் இடம்பெற்றது.

மீசாலை காளி கோவிலடியைச் சேர்ந்த முதியவரே விபத்தில் காயமடைந்தார். (க-9)



# சர்வாதிகாரத்துக்கே திருத்தம் வழிகோலும்

### - ஜே.வி.பி. கவலை

*கொழும்பு, ஜன. 6*

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் கொள்கைப் பிரகடன உரையில் நாட்டுக்கு அத்தியாவசியமான பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. ஆனால் அரசமைப்பில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவிப்பதானது சர்வாதிகார போக்குக்கு வழிவகுக்கும் காரணியைப் போன்றுள்ளது. இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் கொள்கைப் பிரகடனஉரை தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாடாளுமன்ற சுதந்திரத்தை வரையறுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான முன்னோடியாகவே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் கொள்கைப் பிரகடன உரை அமைந்துள்ளது.

நிறைவேற்றதிகார முறையை மேலும் ஸ்திரமுடையதாக்கி சர்வாதிகார ஆட்சிக்கு செல்லவே முயற்சிக்கின்றனர். இந்த முயற்சிகளுக்கு மக்கள் விடுதலை முன்னணி ஒருபோதும் இடமளிக்காது.

அதேவேளை அரசு நாட்டுக்கு நன்மை தரும் வகையில் ஏதேனும் நடவடிக்கைகளை முன்னெடுத்தால் அதற்கு எமது முழுமையான ஆதரவை வழங்குவோம்.

அதேபோன்று நாட்டுக்குப் பாதகமான முடிவுகள் எடுக்கப்பட்டால் அவற்றுக்குக் கடும் எதிர்ப்பை வெளியிடுவோம்.

நாட்டுக்காக ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட கொள்கை பிரகடனத்தை ஏற்றுக் கொள்கின்றோம். எனினும் அதில் கூறப்பட்டுள்ள சில விடயங்களை ஏற்றுக் கொள்ள முடியாது. அவ்வாறான விடயங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டுவதற்கு நாடாளுமன்றத்தில் எமக்கும் வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

எவ்வாறிருப்பினும் கட்சி மற்றும் இன, மத பேதமின்றி அனைவரும் ஒன்றிணைந்து நாட்டுக்கான சேவையை தொடர்ச்சியாக முன்னெடுத்துச்செல்ல வேண்டும்.

இந்த பயணத்தின் போது அரசாங்கத்தின் தவறுகள் சுட்டிக்காட்டப்படும் அதேவேளை நல்ல விடயங்களை ஊக்குவிப்பதற்கும் முன்வருவோம். - என்றார். (ஏ)

# ராஜபக்ஷவின் தனிநபர் பிரேரணை ஏற்புடையதல்ல

### இராதாகிருஷ்ணன் எம்.பி தெரிவிப்பு

*யாழ்ப்பாணம் ஜன. 6*


நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ஷவினால் தனி நபர் பிரேரணையாகக் கொண்டு வரப்படவுள்ள 21ம் 22ம் இலக்கத் திருத்தச் சட்ட மூலம் சிறுபான்மை கட்சிகளை பொறுத்தவரையில் ஏற்புடையதாக இல்லை. இதற்கு நாங்கள் எங்களுடைய முழுமையான எதிர்ப்பை நாடாளுமன்றத்தில் தெரிவிக்க இருக்கின்றோம் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும் முன்னாள் அமைச்சருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அட்டனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

இது ஒரு தனி நபர் பிரேரணையாக இருந்தாலும் கூட இவ்வாறான பிரேரணைகளை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. அவர்களுடைய நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் என்பது பாதுகாக்கப்பட வேண்டும் என்பது தான் சிறுபான்மை கட்சிகளுடைய எதிர்பார்ப்பாகும்.

எங்களுடைய பிரச்சினைகளை முக்கியமாகப் பேசக்கூடிய இடமாக இருப்பது நாடாளுமன்றம். எனவே நாடாளுமன்றத்தில் எங்களுடைய



அங்கத்துவத்தை பாதிக்கின்ற வகையில் கொண்டு வரப்படும் எந்த வொரு சட்டமூலமாக இருந்தாலும் அதனை நாங்கள் முழுமையாக ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

மலையகத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணி கடந்த காலங்களில் பல்வேறு விடயங்களை சாதித்திருக்கின்றது.

எனவே இதற்குக் காரணமாக அமைந்த எங்களுடைய நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்திற்கு பாதிப்பு ஏற்படும் என்று சொல்லப்படுகின்ற பொழுது அதனை ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

இந்த இரண்டு சட்ட மூலங்களும் சிறுபான்மை மக்களுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

ஏற்கனவே இருந்த சட்டமூலத்தின் படி 5 வீதமான வாக்குகள் பெற்றுக்கொண்டால் ஒரு நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொள்ள முடியும் என்ற நிலையில் இன்று 12.5 வீதமாக அதிகரிக்கப்படுகின்றமையானது சிறுபான்மை மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

எனவே எந்தக் காரணம் கொண்டும் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

அதேநேரத்தில் ஜனாதிபதியுடைய அக்கிராசன உரையின் போது அவர் தெரிவித்திருந்த கருத்து கூட சிறுபான்மை மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகவே இருக்கின்றது.

எனவே எதிர்காலத்தில் இவ்வாறான சட்டமூலங்களை நாடாளுமன்றத்தில் கொண்டு வருகின்ற பொழுது சிறுபான்மை கட்சிகள் அனைத்தோடும் கலந்தாலோசித்து அவர்களை பாதிக்காத வகையில் இந்த சட்டமூலங்கள் கொண்டு வரப்படுமாக இருந்தால் அதற்கு ஆதரவாக நாங்கள் எங்களுடைய முழுமையான ஆதரவை வழங்கத் தயாராக இருக்கின்றோம். மறைந்த சந்திரசேகரனின் புதல்வியான அனுஷாவின் தேர்தல் பிரவேசம் குறித்து கருத்து தெரிவித்த அவர் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் மூவர் மாத்திரமே போட்டியிடலாம்.

எனவே அனுஷா சந்திரசேகரன் போட்டியிட வாய்ப்பில்லை. அவர் தனித்து போட்டியிடுவதாக இருந்தால் அது அவரின் உரிமை. கட்சியில் இருக்கலாம். வெளியிலும் செல்லலாம். யாருக்கும் தடை இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ந)

## நுவரெலியாவில் புதிய பல்கலை!

*கொழும்பு, ஜன. 6*

நுவரெலியாவில் புதிய பல்கலைக் கழகமொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சர் பந்துல குணவர்த்தன, நேற்று முன்தினம் நுவரெலியா சததென்ன வனவியல் பூங்காவுக்குக் கண்காணிப்புப் பயணம் மேற்கொண்டிருந்தார்.

நுவரெலியாவில் அமைந்துள்ள சததென்ன பூங்காவே பல்கலைக்கழகமாக தரம் உயர்த்தப்படவுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள பிள்ளைகளின் கல்வித் தரத்தை உயர்த்துவதாகவும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்பைப்பெற்றுத்தருவதாகவும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ தேர்தல் காலத்தில் வாக்குறுதி அளித்தார்.

அந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் இங்கு பல்கலைக் கழகம் அமைக்கப்படவுள்ளது என்று அங்கு அவர் குறிப்பிட்டார். (ஏ)

## போராட்ட...

ஆகவே மாற்றம் அவசியம், மாற்றத்தினூடாக சரியான தலைமைகள் தெரிவு செய்யப்படவேண்டும். அந்தத் தலைமைகள் போராட்டத்தின் வலியை உணர்ந்தவர்களாக இருக்கவேண்டும்"இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு தண்ணீரூற்றுப் பகுதியில் கட்சிப் பணிமனையை நேற்றுத் திறந்து வைத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி கோத்தாபய சிங்கள மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டதால் பெரும்பான்மையின மக்களின் ஆணையை மதிக்கவேண்டும் என்று கூறுகின்றார். வடக்கு கிழக்கிலுள்ள மற்றொரு தேசிய இனமான தமிழ்த் தேசிய இனம் இன்னொரு ஆணையைக் கொடுத்திருக்கின்றது.

எமது இனம், மொழி, நிலம் என்பன காப்பாற்றப்படவேண்டும். எமக்கான உரிமைகள் கிடைக்கப்பெற வேண்டும். அதிகாரங்கள் பிரித்துக் கொடுக்கப்படவேண்டும். நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். இதற்காகவே தமிழ் மக்கள் வாக்களித்துள்ளனர்.

நட்டினுடைய ஜனாதிபதி , வெறுமனே சிங்கள மக்கள் கொடுத்த ஆணையை மாத்திரமல்ல அவருக்கு எதிராக இருந்தாலும் தமிழ் மக்கள் வழங்கிய ஆணையையும் அவர் மதிக்கவேண்டும்.

காலத்துக்கு காலம் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண குழுக்கள் உருவாக்கப்படுகின்றன, ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்றன. ஆனாலும் அவற்றை நடைமுறைப்படுத்தும் திராணி சிங்களத் தலைவர்களுக்கு இருப்பதில்லை.

ஆனால் கோத்தாவின் தலைமை எல்லாவற்றையும் தூக்கி எறிந்துள்ளது. நாட்டில் இனப் பிரச்சினையே இல்லை. அபிவிருத்தியை முன்னெடுத்தால் போதும் என்று கூறுகின்றது. அரசிடம் கையளிக்கப்பட்டு சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றி நாம் கேட்கின்றோம். நேர்மைத் திறனான அரசு என்றால் இதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளாக 16பேர் நாடாளுமன்றம் சென்றாலும், சிவசக்தி ஆனந்தன் தவிர ஏனைய 15பேரும் என்ன செய்தார்கள்? ஆளும் கட்சியுடன் இணைந்து செயலாற்றினார்கள். ஆளும் கட்சியைப் பாதுகாத்தார்கள். ரணிலும், மைத்திரியும் தங்களுக்கு இடையிலான கயிறிழுத்தல் போட்டியைப் பார்த்தார்களே தவிர தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் கிஞ்சித்தும் அக்கறை கொள்ளவில்லை.

ரணில் அரசு கவிழ்ந்தபோது நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தவர் சுமந்திரன். ஆனால் வழக்குத் தொடரவேண்டியவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினர். ஜனநாயகத்துக்குப் பாதிப்பு எனவே வழக்குத் தொடரப்பட்டதாக சம்பந்தன் சொன்னார். ஜனநாயகத்தைக் காப்பாற்றுகின்றோம் என்று சொல்கின்றவர்கள், மாறாக தமிழ் மக்களுக்கு எதைச் செய்தார்கள்.

புதிய அரசமைப்பை ஒருபுறம் வைத்தாலும்கூட, தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற, அரசியல் கைதிகள் விடுதலை, காணி விடுவிப்புகள் எனப் பல்வேறு பிரச்சி னைகளை தீர்த்து வைத்திருக்கலாமே?

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல கோரிக்கைகளை எம்மிடம் முன்வைக்கும் என்று பயந்தேன். ஆனால் அவர்கள் எதனையும் முன்வைக்கவில்லை' என்று ரணில் விக்கிரமசிங்க தனது கட்சி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினருக்கு கூறியதாக அறிந்தேன். இவ்வாறானதொரு தலைமையையே நாம் கொண்டிருக்கின்றோம்.

தற்போது மீண்டும் ஒரு தேர்தல் வரப்போகின்றது. அதற்கான ஆசனப் பங்கீடுகளைச் செய்து முடித்திருக்கின்றனர். மீண்டும் எமது பலத்தை எமது மக்களுக்கு நிரூபிப்போம் என்று கூறப்போகின்ற னர். பலத்தை நிரூபித்து இதுவரையில் எதைச் செய்தார்கள், எதுவும் செய்யவில்லை.

அரசியலிலும், அபிவிருத்தியிலும் இதுவரை கூட்டமைப்பு என்ன செய்தது என்று பட்டியலிட்டுக் காட்டட்டும். புதிய அரசமைப்பு நிறைவேற்றப்படாவிட்டால் பதவி துறப்பதாக சுமந்திரன் தெரிவித்திருந்தார். ஆனால் இன்று வரை அதனை அவர் செய்யவில்லை. சுமந்திரன் தனது சட்டத் திறமைகளை தமிழ் மக்களுக்கு காட்ட முயல்கின்றார். அவர் ஒரு பிரபல சட்டத்தரணி, ஆனால் சிறந்த தலைவர் இல்லை.

தொடர்ந்தும் நாம் பாரம்பரியம் என்று சொல்லிக்கொண்டு தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்து க்கு வாக்களித்தால் தமிழ் மக்கள் பின்னடை வுக்குள் சென்றுவிடுவார்கள்.

இன்று தமிழ் மக்களிடம் எஞ்சியுள்ள விடயம், தமிழ்த் தேசியம் மட்டுமே. அந்த தேசியம் என்ற விடயத்தையும் தமிழ் மக்களிடமிருந்து அகற்றி, அழித்து விடவேண்டும் என்பதில் சுமந்திரன் உறுதியாக இருக்கின்றார். கட்டாயமாக ஒரு மாற்றம் தேவை. அந்த மாற்றத்துக்காக, கடந்த இரு வருடங்களாக நாங்கள் முயற்சித்து வருகின்றோம்.

அந்த அடிப்படையில் தான் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் கட்சியை ஆரம்பித்திருக்கின்றார். தமிழ் மக்கள் கூட்டணி, எங்களது கட்சி(ஈ.பி.ஆர்.எல்.எப்), தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய பலர் இணைந்து ஒரு தமிழர் ஐக்கிய முன்னணி என்ற அமைப்பை உருவாக்கியிருக்கியிருக்கின்றோம்" என்றார். (ஒ.5,246)

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 16 | 05 |
| ... | ... |
| 06 | 01 |
| ... | ... |
| 1940 | 2020 |



### இராசையா குலமணிதேவி

சுன்னாகம் தெற்கு, சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா குலமணிதேவி நேற்று **(05.01.2020)** ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா அன்னமுத்து ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் செல்வராசா, சிவபாலசுந்தரம், குமாரசிங்கம், மல்லிகாதேவி, நிர்மலாதேவி, ஆகியோரின் அன்பு சகோதரியும் காலஞ்சென்ற இரவீந்திரன் மற்றும் நடராஜா (கனடா), பத்மினிதேவி (கனடா), பத்மநாதன் (கனடா), செல்வராணி (பொன்மலர்-சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வாமதேவி (கனடா), மகேஸ்வரி (கனடா), இந்திரகுமார் (கனடா), அனுசாம்பிகை (கனடா), தியாகலிங்கம் (தலைவர், யாழ் மாவட்ட கமக்கார அமைப்புக்கள் அதிகாரசபை) ஆகியோரின் அன்பு மாமியாரும் கிருசாந், தனுசன், சிவசாந், திவாகர், அஸ்வின், திசான், சுரேகா, சுதர்சன், நவநீதன், லக்சனா, லக்சன் (கனடா), தாரணன் (Mega Phama (Pvt) Ltd), தாருஜன் (பனை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்), சோபிதா (தேசிய கல்வியியற் கல்லூரி- வவுனியா), சிவசுதன் ஆகியோரின் பேர்த்தியும் லதுசனின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பழைய பொலிஸ் நிலைய வீதி,**
**சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.**

**தகவல்:**
**க. தியாகலிங்கம் (மருமகன்)**

**தொடர்பு:- 021 224 0038, 077 696 4814**

## கூட்டமைப்புக்...

ருக்கு அரசியல் செய்ய முடியாத சூழ்நிலை உருவாகும் என்றும் ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச்செயலர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பு கெஸ்பெவ பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

பொதுத் தேர்தலின்போது அரசியல் கட்சியொன்றோ அல்லது சுயேச்சைக் குழுவொன்றோ செல்லுபடியான மொத்த வாக்குகளில் 12.5 வீதத்தை பெற்றால்தான் ஓர் ஆசனம் என்ற நிலை முன்பிருந்தது. இந்த நடைமுறை சிறு கட்சிகளுக்கு சிக்கல் என்பதால் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவுடன் பேச்சு நடத்தி 12.5 சதவீதத்தை 5 சதவீதமாக குறைப்பதற்கு அஷ்ரப் நடவடிக்கை எடுத்தார்.

இந்த நிலையில் தேர்தல் வெட்டுப் புள்ளியை மீண்டும் 12.5ஆக அதிகரிக்கும் நோக்கில் அரசமைப்பு திருத்தச் சட்டவரைவு தனிநபர் பிரேரணையாக முன்வைக்கப்பட்டுள்ளது. இதன்படி கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் மட்டுமே சிறுகட்சிகளுக்கு வெற்றி வாய்ப்பு உள்ளது. ஏனைய மாவட்டங்களில் ஓர் ஆசனத்தைக் கூட பெற முடியாத நிலை ஏற்படும்.

மக்கள் விடுதலை முன்னணி, ஜாதிக ஹெல உறுமய உட்பட மேலும் சில கட்சிகளுக்கு காட்டுக்கு போக வேண்டிய நிலை தான் ஏற்படும். சிறுபான்மையினக் கட்சிகளுக்கு கடிவாளம் போடும் வகையில்தான் மேற்படி சட்டவரைவு கொண்டுவரப்பட்டுள்ளதாக சிலர் கூறிவருகின்றனர்.

ஆனால், இந்தச் சட்டவரைவு நிறைவேறினால் பிரதான இரு கட்சிகளுக்கு வடக்கு, கிழக்கில் ஓர் ஆசனத்தைக்கூட கைப்பற்ற முடியாத நிலை ஏற்படும். விஜயகலா மகேஸ்வரன், அங்கஜன் ஆகியோருக்கு தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற முயாத நிலை ஏற்படும். மறுபுறத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 15 இல் இருந்து 21 ஆக அதிகரிக்கக் கூடும். அதைச் செய்வதற்காகவா இந்தச் சட்டவரைவு கொண்டு வரப்பட்டுள்ளது, என்று கேள்வி எழுப்பினார் சம்பிக்க. (ஒ.5,44)

## அதிவேகம்...

சாந்தபுரத்தைச் சேர்ந்த சுப்பையா தர்சன் (வயது-20) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

ஏ-9 வீதியில் வேகமாகப் பயணித்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியது. சம்பவம் முறிகண்டி பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் கூறினர். (ஒ.5,6,35)

## பழைய மாணவர் சங்கம்
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி
**Old Student's Association**
J/CHAVAKACHCHERI HINDU COLLEGE

T.P:-021 227 0350
021 227 0351
Fax:-021 227 0350
E-mail:-chavahindu@gmail.com
Web:-W.W.W.chc.sch.lk

### பொதுக்கூட்டம் - 2020

- காலம்:- 19.01.2020 ஞாயிறு
- நேரம் :- காலை 9.00 மணி
- இடம் :- கல்லூரி பிரதான மண்டபம்

மேற்படி எமது சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் 19.01.2020 ஞாயிறு காலை 9.00 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் அனைத்துப் பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**செயலாளர்**
**பழைய மாணவர்சங்கம்**

**தலைவர் - அதிபர்**
**யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை)**

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 . 08 . 1991



மறைவு 29 . 12 . 2017

கடந்த 29.12.2017 இறையடி சேர்ந்த

### அமரர் லக்ஷன் கீர்த்திகா
(விவசாய போதனா ஆசிரியர், கிளிநொச்சி)

கண்ணீரின் பிரளயத்தில் தவிக்கவிட்டு
இரண்டாண்டு சென்றுவிட்டீர்
வேர் அறுந்த விருட்சமாய்
விழுது இழந்து தவிக்கின்றோம்
எமன் உங்களில் பாசம் வைத்து
அழைத்து விட்டான் – நாங்களோ
எது செய்வதென்று தெரியாமல் தவிக்கின்றோம்.

கந்தசாமி வீதி, மீசாலை மேற்கு,
மீசாலை.
(CS/30436)(11,17)
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 - 08 - 1953



மறைவு 05 - 01 - 2020

### திருமதி யோகராணி (பேபி) கந்தசாமி

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகராணி (பேபி) கந்தசாமி 05.01.2020 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தசாமியின் அன்பு மனைவியும் யதுகரனின் அன்புத் தாயாரும் கௌதமியின் அன்பு மாமியும் கிரிசாரிகாவின் அன்புப் பேர்த்தியும் நாகலட்சுமி (பிரான்ஸ்), விஜயலட்சுமி, திருச்செல்வம் (டைமன் ஸ்ரோர்ஸ்), அருட்செல்பம் (A.T.C) சோதிநாதன் (பிரான்ஸ்) செல்வராணி, றஞ்சி ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி தனநாயகி, பேரின்பநாதன்( பிரான்ஸ்), உதயகுமார் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (06.01.2020) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் மத்தியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(CS 30441)
தகவல்: **குடும்பத்தினர்**
0771135023

# சிங்களவர்கள் இனி முட்டாள்கள் அல்லர்



## பிரதமர் மஹிந்த

கொழும்பு, ஜன. 6

இந்த நாட்டில் சிங்களவர்கள் முட்டாள்கள் என்று கூறிய யுகம் கடந்த நவம்பர் 16ஆம் திகதியுடன் முடிவடைந்து விட்டது. இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ் தெரிவித்தார்.

'சிங்கள பௌத்த மக்களே நாட்டில் வாழும் ஏனைய இனங்கள் மற்றும் மதங்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துகின்றனர்' எனவும் அவர் குறிப்பிட்டார்.

'ஆட்சி மாற்றத்துக்கு பௌத்த சங்க சபையினர் தலைமையேற்றதை நான் புதிதாகக் கூறவேண்டியதில்லை. பௌத்த சங்க சபையினரின் வரலாற்று சிறப்புமிக்க பொறுப்பு உச்சளவில் நிறைவேற்றப்பட்டது என்பதை மட்டும் நான் கூறவேண்டும். பௌத்த சாசனம், சிங்கள இனம், நாட்டின் ஒருமைப்பாடு ஆகியவற்றை பாதுகாப்பது உட்பட அனைத்தும் ஒன்றோடு ஒன்று பிணையப்பட்டவை. சிங்கள பௌத்தர்கள் பாதுகாக்கப்பட்டால் மட்டுமே ஏனைய மதங்களின் சுதந்திரம் நாட்டில் பாதுகாக்கப்படும் என்பது எமது வரலாற்றில் தெளிவாகக் காணக்கூடிய ஒன்று' என்றார். (ஒ.5,22)

### விற்பனையாளர் தேவை
யாழ்ப்பாணம் ரவுணில் உள்ள புத்தகசாலைக்கு ஆண்/பெண் விற்பனையாளர்கள் உடன்தேவை.
(CS/30...)(11,17)
**072 287 5625/ 011 576 5331**

### வேலையாள்கள் தேவை
கொக்குவிலில் இயங்கும் புத்தக கடை ஒன்றிற்கு வேலைக்கு பெண்கள் தேவை. அருகில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
**தொடர்பு:- 077 748 0357**

### இணுவில் கந்தசுவாமி கோயில்
## விசேட பொதுக்கூட்டம்

காலம் : - 19.01.2020 ஞாயிறு முற்பகல் 10.00 மணி
இடம் : - மேற்படி ஆலய இளம் தொண்டர் சபை மண்டபம்

**விடயங்கள்:**
1. 2015 வாக்காளர் இடாப்பில் இருந்து உபய மாற்ற விண்ணப்பம் தொடர்பானது
2. குறித்த இடாப்பில் இறந்த இரட்டைப் பதிவுக்குரிய அடையாளம் காணப்படாத பெயர்கள் தொடர்பானது.

- குறித்த வாக்காளர் இடாப்பின் அங்கத்தவர்கள் மட்டும் தவறாது பங்குபற்றவும் மேற்குறித்த விடயங்கள் மட்டும் ஆராயப்படும்.

(cs. 145384) (13,17)
**தலைவர்,**
**தர்மகர்த்தாசபை**

## இறை அருளால் இலவச திருமணம்

இராஜமாணிக்கம் SMT அறக்கட்டளை மூலம் ஒன்றே குலம் ஒருவனே தேவன் எனும் கோட்பாட்டுக்கு இணங்கி சாதி சமய வேறுபாடுகளின்றி அனைத்து மக்களும் ஒன்று சேர்ந்து வாழ்வதற்கு வழிகாட்டும் ஓர் நிகழ்வாகும். தாய் தந்தையரை இழந்து நிர்க்கதியாகி நிற்கும் இறைவனின் குழந்தைகளுக்கு திருமணம் செய்ய இறையருள் கை கூடியுள்ளது. ஒவ்வொரு வருடமும் ஆறு திருமணங்கள் நடைபெறவுள்ளன. இதற்கு முன்னோடியாக இவ்வருடம் திருமணம் செய்ய நிட்சயித்துள்ளோம். வைகாசி மாதம் நடக்கும் இரவு திருமண விழாவில் கலந்து கொள்ளும் அனைத்து அன்புள்ளங்களுக்கும் கல்யாண சாப்பாடு வழங்கப்படும்.

- மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- ஆறு திருமணங்களும் பெரியோர்களால் மஞ்சல்கயிற்றில் தாலி எடுத்து கொடுக்க ஒரே மேடையில் தமிழ் சம்பிரதாய முறைப்படி திருணம் நடைபெறும்.
- திருமணத்திற்கான பட்டுப்புடவை, வேட்டி சால்வை, மஞ்சல்கயிற்றில் ஒரு பவுண் தாலியுடன் வீட்டிற்கான சமையல் பாத்திரங்களும் வழங்கப்படும்.
- இறைவனின் குழந்தைகளுக்கு சாத்திர பொருத்தம் தேவையில்லை.
- மாற்று திறனாளிகள் ஏற்கனவே திருமணம் நிட்சயித்திருப்பின் இருவரது புகைப்படத்துடன் நேரில் வரவும்.
- திருமணம் செய்ய ஆர்வம் உள்ளவர்கள் 02.02.2020 ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணியிலிருந்து 12.00 மணிவரை பாதுகாவலருடன் நேரில் வாருங்கள்.

**இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம்,**
வீடியோ கலாமினி, அச்சுவேலி.
தொ.பே: 077 305 3080

# பொதிகளில் மும்மொழி

கொழும்பு, ஜன. 6

பொருள்களின் பொதிகள் அனைத்திலும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் பொறிக்கப்பட்ட வர்ணகுறி அச்சிடப்படுவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது.

நுகர்வோர் விவகார ஆணைக்குழுவின் ஊடாக இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் நடைமுறையாகும் வகையில் வர்த்தமானி வெளியாகியுள்ளது.

இதன்படி பொருள்களின் அதிகபட்ச சில்லறை விலை, தயாரிப்பு எண், காலாவதி திகதி, தயாரிப்பு திகதி, நிறை அல்லது அளவு, இறக்குமதி செய்யப்பட்ட நாடு அல்லது உற்பத்தி செய்யப்பட்ட நாடு என்பன பொறிக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்தமாக இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் மீண்டும் பொதி செய்யப்படும் திகதி அல்லது மொத்தமாக பொதி செய்யப்பட்ட பொருள்கள் மீண்டும் தொகுக்கப்படும் திகதி குறிப்பிட வேண்டுமெனவும் நுகர்வோர் விவகார ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஒ,5)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்தில் வைக்கப்படுவார்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 08.09.1947
உதிர்வு 18.12.2019

அமரர்
### யோகேஸ்வரி அப்பையா
திதி – 06.01.2020
(சுவர்க்க வாயில் ஏகாதசி)

புன்முறுவல் காட்டியே முகமன் செய்யும் வடிவம்
சுறுசுறுப்புடன் சுயமாக உதவிடும் சுதந்திர உருவம்
போகாதே நின் நிழலாடும் நினைவுகள்
பேசிய மொழிகள் அடி மனதின் அந்தகாரமாய்
மறந்தே தான் நீங்கள் போனீர்களோ – அம்மாவே
உம் கனிவு கொண்ட நிஜங்கள்
இங்கு நிஜமற்றுப் போகவில்லை
வருவீர் என்று காத்திருப்போம்
வரமாய் அதை கேட்டிருப்போம் அம்மாவே

"அம்பிகை வாசம்"
புலோலி தென்மேற்கு, புலோலி.
**குடும்பத்தினர்.**
021 226 4280

### வரவேற்கின்றது மருத்துவ சங்கம்

கொழும்பு, ஜன. 6

கடந்த அரசின் காலத்தில் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத ஒழிப்பு சட்டத்தை (சி.ரி.ஏ.) புதிய அரசு மீளப் பெற்றமைக்காக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நன்றி தெரிவித்துள்ளது. (ஒ,5,24)

## மரண அறிவித்தல்



## திருமதி செல்வலட்சுமி சுந்தரம்

### (AKS) சாவகச்சேரி

கொல்லங்கலட்டி. தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும். சாவகச்சேரியினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வலட்சுமி சுந்தரம் கடந்த **(04.01.2020)** சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூதப்பிள்ளை. கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான கந்தையா. செல்லம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பிரபல தொழிலதிபர் A.K சுந்தரம் (A.K.S) அவர்களின் அன்பு மனைவியும் இராசலிங்கம். பரமேஸ்வரன். சர்வேஸ்வரன் (ஈசன்). தயாளினி ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசநாயகி. சுபந்திரா. காலஞ்சென்ற கேதீஸ்வரி. Dr. செந்தில்குமரன் (தேசிய வைத்தியசாலை. கொழும்பு) ஆகியோரின் அருமை மாமியாரும் விஜயயாழினி (வலயக் கல்வி அலுவலகம். தென்மராட்சி). சுபேந்திரன்- கல்யாணி (UK). சுரேகன்- அபிலாஜினி (UK). நர்த்தனா (MOH OFFICE கண்டாவளை). கோகுலராஜ். கஸ்தூரி. ரக்ஷயன். ரக்ஷயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சிவபாக்கியம். காலஞ்சென்றவர்களான தங்கம்மா. காசிநாதர். கனகநாயகம் மற்றும் செல்வநாயகம். வைரவநாதன் (UK). வைத்தியநாதன். பரமேஸ்வரி. சண்முகநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் A.K சபாரத்தினம். A.K துரைரத்தினம். நாகரத்தினம். காலஞ்சென்ற A.K. இராசையா ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை **(07.01.2020)** செவ்வாய்க் கிழமை காலை **8.00** மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை **10.00** மணயளவில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**"இலட்சுமி பவனம்"**
**கட்டுக்காணி வீதி, சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**இராசலிங்கம் - மகன் 077 328 8767 , பரமேஸ்வரன்- மகன் 077 314 6038**
**சர்வேஸ்வரன்-மகன் 077 110 2935, தயாழினி-மகள் 077 777 7583**

## மரண அறிவித்தல்

பிறப்பு
05 ... 01 ... 1945



இறப்பு
05 ... 01 ... 2020

## மயில்வாகனம் கிருஷ்ணபிள்ளை

இணுவில் மேற்கை பிறப்பிடமாகவும். கற்பகப்பிள்ளையார் வீதி. உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் கிருஷ்ணபிள்ளை நேற்று **(05.01.2020)** ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் செல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணராஜா (பிள்ளையார்). பூபதி தம்பதிகளின் மருமகனும் சந்திரயோகினி (சந்திரா) அவர்களின் பாசமிகு கணவரும் கயேந்திரன் (கயன்- சுகாதார சாரதி. யாழ் போதனா வைத்தியசாலை). செந்தூரன். கோகிலன் (சுவிஸ்). ஜனார்த்தனி (தாதிய உத்தியோகத்தர்- தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பிறேமிகா. ஜெயந்தா. சுகிர்தா. அனுஜன் ஆகியோரின் மாமனாரும் தம்பிஜயா. பரமானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் மதுசன். நிதுசன். அபிசன். கிருஷ்ணிகா. யதுஷிகா. யஸ்மீரா. லிதுசன். டிரோசன். திக்சிதா ஆகியோரின் பாசமிகு பேரனும் இந்திராணி சிதம்பரநாதன். இந்திரகுமார் (இந்திரன்). காலஞ்சென்ற ரவிகுமார் (ரவி) மற்றும் சிவகுமார் (சிவா). செல்வகுமார் (ராசன்). செல்வயோகினி சண்முகநாதன். கிருஷ்ணகுமார் (குமார்). கமலாதேவி. இராசயோகநாயகி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(06.01.2020)** திங்கட்கிழமை பிற்பகல் **2.00** மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் உரும்பிராய் வடக்கு இருளன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கற்பகப்பிள்ளையார் வீதி,**
**உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொடர்பு:- 021 205 4645**

## மரண அறிவித்தல்



## திருமதி சரஸ்வதி இரத்தினம்

வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும் இல.332C. ஸ்கந்தபுரத்தை நிரந்திர வாழ்விடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி இரத்தினம் 04.01.2020 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும் இரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான அன்னப்பிள்ளை, செல்லமுத்து. தம்பிமுத்து. தங்கம்மா, நல்லபிள்ளை, கனகம்மா மற்றும் அருந்ததி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான அன்னமுத்து. நல்லபிள்ளை, இளையபிள்ளை. இராசையா. இராசம்மா, செல்லத்துரை. பாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் கந்தசாமி (விசுவமடு). மகேந்திரராஜா (ஹொலண்ட்). மன்மதராஜன் (லண்டன்). சிறீதரன் (லண்டன்). ஸ்ரீரதி (லண்டன்). இறஞ்சினிதேவி (கோட்டைகட்டியகுளம்). கிரிதரன் (வாதரவத்தை). பேரின்பநாதன் (ஹொலண்ட்). விக்னேஸ்வரி (பிரான்ஸ்). விக்னேஸ்வரன் (ஜேர்மன்). தயாபரன் (ஜேர்மன்). வனஜா (ஸ்கந்தபுரம்) ஆகியோரின் அன்புத் தாயாரும். புவனேந்திரன் (லண்டன்). உதயசூரியன் (லண்டன்). காலஞ்சென்ற ரோகினி. மகேஸ்வரன் (லண்டன்). மல்லிகாவதி (பஞ்சுசோலை அரைக்கும் ஆலை. கிளிநொச்சி). சுபாசினி (லண்டன்). மோகனராணி (லண்டன்) ஆகியோரின் பெரியதாயாரும். காலஞ்சென்ற சித்திவிநாயகி மற்றும் செல்வகுமாரி. யோகவதி. இந்திராகாந்தி. புஸ்பலதா. கோவிந்தராஜா. சத்தியமூர்த்தி. திரவியம். சைலா. கலாவிநாயகி. யோகரத்தினம். விஜேந்திராதேவி. யுவராசன் ஆகியோரின் மாமியாரும் மோகனவதனி. இந்துமதி. தாரணி. காலஞ்சென்ற யோகேஸ்வரன் மற்றும் மதியழகன். உதயகாந்தன் ஆகியோரின் பெரியமாமியாரும். சபேசன். காலஞ்சென்ற சந்திரலேகா. சிவரூபன். சாரங்கா. நிருஜன். யசோபன். மிதுனன். சுபாஸ்திகா. மாதுமை. திருவரங்கன். கதீசன். சஜீதா. லயன்சன். சியூசன். ஜேன்சன். பவித்ரா. நிரோஜ். நிஜானா. கிருஸ்ணலதா. சுஜீபா. சுஜீதரன். நித்திலா. சிந்துபா. சுகன்ஜா. விதுபா. விபுஷன். கரிஷன். சானுஜன். சரண்ஜன். சுஜீபன். யுஜண்சன். பாணுஜா. வினோஜா. கோபிகா. தர்சா. விதுஜன். பிரவீன். ருஷித். சபிஷன். பிருஷன். கிருஷன். அஜிஷா. மிதுஜன் (அக்கராயன் மகாவித்தியாலயம். உயர்தர மாணவன், விஞ்ஞானப் பிரிவு). புவிந்தா (அக்கராயன் மகா வித்தியாலயம்). நிவேத். நிவேதா. நிருதன். நிதர்ஷியா. நிருஷா. வினுஜன். வினுஷியா. மகீபன். நிரோஜன். யோதிகா. லேத்திகா. தரணிகா. எசோபிதன். மதுஷா. மதுஷன். மதுஷனா. தட்சனா. யனுசன். டக்சன் ஆகியோரின் பேர்த்தியாரும் கஜிந்தன். சாகித்தியன். சாணக்கியன். ஆதித்தியன். ஆர்மிகா. அனிருத். அஸ்வின். வாருணன். யஸ்மின். கோவர்த்தனா. அகஸ்ரியா. அபிநிஹா. அட்விகா. அத்சயன். அகர்வின். பியோனா. ஆருசி. தருஸ். கஜினன். கபினன். கபின். சர்வேஸ். யாநிவி. யஸ்வின். அரிஸ்வின். அஞ்சனா. இனியா. அனன்யா. அர்ச்சுனன். தீரன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ( 07.01.2020) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக ஸ்கந்தபுரம் பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## விற்பனைக்கு

தண்ணீர் பவுசர் விற்பனைக்கு உண்டு.

070 229 7216

## Personal Class

த னி யா | தரம் 03 முதல் O/L வரையான மாணவர்களுக்கு அனைத்து பாடங்களும் & A/L மாணவர்களுக்கு பௌதீகவியல், இரசாயனவியல், பொருளியல், வணிகக்கல்வி உட்பட அனைத்து பாடங்களும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். | கு மு வா

076 339 6417

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111

## நாஹறா மருத்துவ நிலையம்

எலும்புகள் தீவிர பாதிப்புக் கொண்ட வாதம், முழங்கால் வீக்கம் மாற்றமுடியாத புண்கள், அல்சர், உடற்பருமன், நீரிழிவு, குழந்தையின்மை : முழுமையான தீர்வு

077 321 2740

வங்கி முன்லேன்
சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி (ஜெகபதி வீடு)
மானிப்பாய்.

(CS 304289)(4.17)

## வீடு வாடகைக்குண்டு

திருநெல்வேலிக்கு அருகில் 6 அறைகள், 2 வரவேற்பறையும் சகல வசதிகளும் உள்ள வீடு வாடகைக்கு உண்டு.

076 998 0837

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் சந்தியில் இருந்து 500m தூரத்தில் (ஆடியபாதம் வீதியில்) 1½ பரப்புக்காணியில் அமைந்துள்ள விசாலமான வீடு பல்கலைக்கழகச் சூழலில் விற்பனைக்குண்டு.
தரகர்கள் தேவையில்லை

077 400 4033

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட தபாற்கந்தோர் வீதியில் மானாவளை ஒழுங்கை கெருடாவிலில் பயன்தரு மரங்களுடன் கூடிய 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தரகர்கள் தேவையில்லை

077 524 3328

## விற்பனைக்கு

முதிரை மரத்திலான பாவித்த கதிரைகள், யன்னல் Frame, இரும்பு Grill என்பன விற்பனைக்குண்டு.

புலோலி பருத்தித்துறை

தொடர்புகளுக்கு: 077 879 2559

## NEW CHEMISTRY WORLD Group Classes

2020 - Paper Classes
2021 - Inorganic & Paper class
2022 - ஆரம்பம் 09.01.2020

புதிய பாடத்திட்டத்துக்கான இரசாயனவியல் நூல்களும் விற்பனையாகின்றன.

ஆசிரியர் சு.சுரேஸ்குமார்
BSc (Hons) PGDE
077 555 9028

(C30365)(11.17)

## பணியாளர்கள் தேவை

நீர்வேலி இராசவீதியில் இயங்கிவரும் சுப்பர் மார்க்கெட்டுக்கு பின்வரும் வேலைகளுக்கு ஆண், பெண் பணியாளர்கள் தேவை

- பொருள்கள் அடுக்குதல்/ காட்சிப்படுத்துதல்
- காகிதாதிகள் விற்பனையாளர் (Stationary)
- பலசரக்கு பொருள்கள் விற்பனையாளர் (முன் அனுபவம்)

மேற்குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கு பின்வரும் தகைமைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

- க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி
- வயது 19-40
- முன் அனுபவம் இருந்தால் நன்று

*குறிப்பு:-* கோப்பாய் பிரதேசசபை எல்லைக்குள் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-077 339 6639, 077 723 4041

**P.S.M மெகா குறோசரீஸ்**

இராசவீதி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
[பொன் செல்வமகால் திருமண மண்டபத்திற்கு கிழ்]

## 26ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சங்கரப்பிள்ளை நமசிவாயம்**
(அம்பிகா டிஸ்பென்சரி - சாவகச்சேரி)

மண்ணில்
22.08.1937

விண்ணில்
06.01.1994

எங்கள் குடும்பத் தலைவரே!
நீங்கள் பகிர்ந்து கொண்ட
அன்பு அறம் ஆற்றல் அனுபவங்களில்
நாங்கள் வாழ்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
நுணுவில் சிதம்பர விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.
(IN/12211)(11,17)

குடும்பத்தினர்.

## 26ஆம் ஆண்டு நினைவலைகள்

வருடங்கள் பல சென்றாலும்
உங்கள் நினைவுகளுடன் என்றும் வணிகர்கள்

மண்ணில்
22 . 08 . 1937



விண்ணில்
06 . 01 . 1994

**அமரர் சங்கரப்பிள்ளை நமசிவாயம்**
(முன்னாள் தலைவர் - சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்
முன்னாள் உரிமையாளர்- அம்பிகா பார்மசி - சாவகச்சேரி)

மன்றச் சேவைக்கென வந்து அமரத்துவமடைந்த அமரரின் நினைவு நாளும் நினைவுக்கூட்டமும் இன்று (06.01.2020) திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு மன்ற அலுவலகத்தில் உள்ள அமரரின் நினைவு மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் இந்த நிகழ்வில் அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்பாக வேண்டிக் கொள்கின்றோம்.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.

(CS 22114)(4.17)

# நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

## அமரர் சின்னத்தம்பி சுந்தரலிங்கம்

(முன்னாள் இரசாயனவியலாளர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்)



தோற்றம்
25.02.1936

மறைவு
09.12.2019


எமது வாழ்விற்கு வளம் பல சேர்த்து, ஆலோசகராய் வழிகாட்டியாயிருந்து, பேரன்பிற்கும் பாசத்திற்கும் பாத்திரமாயிருந்து இறுதிவரை சுறுசுறுப்புடன் சமூகப் பணியாற்றிக் கொண்டிருக்கையில் ஆறாத் துயரில் எம்மைத் தவிக்க விட்டு இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் விபத்தின்போது வைத்தியசாலையில் மனிதநேயத்துடன் சேர்ப்பித்த வீரசிங்கம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினர் மற்றும் முச்சக்கரவண்டிச் சாரதிகள், தகவல் வழங்கி உறுதுணையாய் உடனிருந்த உறவினர்கள், அவசியமான மருத்துவ சேவைகளை வழங்கிய வைத்திய நிபுணர்கள், தாதியர்கள் மற்றும் வைத்தியசாலைச் சமூகத்தினர், இறுதிக் கிரியைகளில் பங்குபற்றி பதாகைகள் மூலம் அஞ்சலி செலுத்திய மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மற்றும் வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலய சமூகத்தினர், அத்துடன் இரங்கலுரையாற்றியோர் கண்ணீரஞ்சலிப் பிரசுரங்கள் மற்றும் மலர் வளையங்கள் மூலமாகவோ அஞ்சலி செலுத்திய, இறுதிக் கிரியைகளில் நேரடியாகக் கலந்துகொண்டோ தொலைபேசி, மின்னஞ்சல், லங்காசிறி, முகநூல் மற்றும் ஏனைய சமூக வலைத்தளங்கள் மூலமாகவோ துயராற்றிய உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலுள்ள பெரியோர்கள், முன்னாள் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்கத்தினர், தமிழ் அரசியற் சமூகத்தினர், உற்றார் உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 2020.01.06 ஆம் திகதி திங்கட்கிழமையாகிய இன்று காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் 2020.01.08 ஆம் திகதி புதன்கிழமை பகல் 11.00 மணியளவில் மீசாலையிலுள்ள அன்னாரின் பிறந்த இல்லத்திலும் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

**குறிப்பு:** இந்த அழைப்பை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் தனிப்பட்ட அழைப்பாகக் கருதி ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**பிள்ளைகள்**
**(அமெரிக்கா)**

**குடும்பத்தினர்**
**புத்தூர் வீதி, மீசாலை வடக்கு.**



# பிரச்சினைகளே வாழ்க்கைக்கு புத்துணர்ச்சி

அது ஒரு அழகிய கிராமம். அங்குள்ளவர்களுக்கு மீன் மிகவும் பிடித்த உணவு.
அவர்கள் மீன் உணவை விரும்பிச் சாப்பிட, படகெடுத்து சில கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள கடற்பகுதிக்குச் செல்வார்கள். அங்கிருந்து திரும்பி வர இரண்டு நாள்களாகிவிடும்.
அக்குறிப்பிட்ட இடத்தில் கிடைக்கும் மீன்கள்தான் மிகவும் ருசியானதாக இருக்கும்.
ஆனால், மீன்பிடித்ததும் கொண்டு வர இரண்டு நாட்களாகி விடுவதால் அவற்றின் சுவை குறைந்துவிடும்.
மீனவர்கள் கையோடு, ஐஸ்கட்டிகளைக் கொண்டு சென்று அதில் பதப்படுத்திக் கொண்டு வந்தார்கள். ஆனாலும், மக்களுக்கு திருப்தி இல்லை.
இப்பொழுது மீனவர்கள், ஒரு சிறு தண்ணீர் தொட்டி ஒன்றைச் செய்து, அதில் மீன்களைப் பிடித்துப் போட்டுக் கொண்டு வந்தனர்! ஆயினும், அத்தனை பெரிய கடற்பரப்பில் நீந்திக்கொண்டிருந்த மீன்கள், சிறிய தண்ணீர்த் தொட்டியில் இரண்டு நாட்களாக சோம்பிக் கிடப்பதினால் மீனின் சுவை குன்றிப் போவதாக மீண்டும் குறை!
யோசித்த மீனவர்கள் புதிதாக ஒரு யோசனை செய்தார்கள்.
குட்டிச் சுறா மீன் ஒன்றைப் பிடித்து அந்தத் தொட்டிக்குள் விட்டார்கள்.
இந்தச் சுறாவிடமிருந்து தப்பிப்பதற்காக... அந்த மீன்கள் எல்லாம் அந்தத் தொட்டிக்குள் ஓய்வின்றி வேக வேகமாக நீந்திக் கொண்டே இருந்தன.
இப்பொழுது இரண்டு நாள்கள் கழித்து வந்த அந்த மீன்கள் முன்னெப்போதையும் விட மிகவும் சுவையாக இருந்தது.
வாழ்க்கையும் இப்படித்தான்.
சுறுசுறுப்பாக ஓடிக்கொண்டே இருக்க வேண்டும். பிரச்சினைகள் என்கிற சுறாக்கள் இருந்தால் தான் வாழ்க்கை என்ற மீன் சுவையானதாக இருக்கும். பிரச்சினைகள் இல்லாவிட்டால் நாம் ஓட மாட்டோம், சோம்பிக்கிடப்போம்.

**சுறுசுறுப்பாக ஓடி வாழ்க்கையை சுவையானதாக மாற்றுவோம்!**

# விடுகதைகள்

1. மொட்டைப்பாறையில் மூடிய கண்கள் மூன்று. அது என்ன?
2. மஞ்சள் போர்வை போர்த்தி மறைந்திருப்பான் வெள்ளையன். கொஞ்சம் போர்வை களைந்தால் கொதிக்கும் நீரில் விழுவான். யார்?
3. மழையின் முன்னும் பின்னும் மாயா ஜாலம் காட்டும். அது என்ன?
4. மழையில் நனையும். வெயிலில் காயும். வெளியில் மலரும். வீட்டில் சுருங்கும். அது என்ன?
5. மண்ணுக்குள்ளே இருக்கும் மாயாண்டி. உரிக்க உரிக்க தோல். அது யார்?
6. மரமோ ஒன்று. கிளைகளோ பன்னிரண்டு. இலைகளோ முப்பது. அது என்ன?
7. மாட மாளிகையில் வசிப்பான். மன்னனுமல்ல. கூட கோபுரத்தில் இருப்பான். கொற்றவனுமல்ல. அது யார்?
8. மாமியார் மேல் மருமகள் உருண்டு உருண்டு விளையாடுகிறாள். அவர்கள் யார்?
9. மீன் பிடிக்கத் தெரியாது. ஆனால் வலை பின்னுவான். அது யார்?

**விடை :**

1. தேங்காய்
2. நெல்; அரிசி
3. வானவில்
4. குடை
5. வெங்காயம்
6. வருடம், மாதம், நாட்கள்
7. மாடப்புறா
8. அம்மி; குழவி
9. சிலந்தி

## ஊக்கமது கைவிடேல்!

நல்ல பயனைத் தருஞ்செயலே
நாளும் செய்து வரவேண்டும்
இடர்கள் பலவே தோன்றிடினும்
எதிர்த்துப் பலபேர் நின்றிடினும்
தடைகள் பலவே நேர்ந்திடினும்
தளரா ஊக்கம் வேண்டும்
ஊக்கம் உடையான் இறுதியிலே
உறுதியாக வெற்றிடுவான்
ஆக்கம் அடைவான் இன்பமெல்லாம்
அடைவான் என்றார் சான்றோரே

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்
ஒன்றியம் பெருமையுடன் வழங்கும்
மாபெரும் தமிழ்விழா – 2019



தமிழமுதம்
"மொழிதனைக் கடையும் இளையவர் பயணம்"
08.01.2020
மு.ப 08.05
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான வளாகம்

தலைமை
ந.திவாகரன்
தலைவர் மாணவர் ஒன்றியம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

முதன்மை விருந்தினர்
பேராசிரியர் இ.விக்னேஸ்வரன்
மேனாள் துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நிகழ்ச்சி நிரல்
மாபெரும் கலை கலாச்சார
எழுச்சிப் பேரணி
காலை 8.05 மணி முதல் காலை 9.00 மணி வரை
சங்கிலியன் அரங்கு
காலை 9.00 மணி முதல் மாலை 1.30 மணி வரை
பண்டாரவன்னியன் அரங்கு
மாலை 2.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை



# வைகுண்ட ஏகாதசி

## விரதத்தின் மகிமை

இ.உமணகேனன்

> வைகுண்ட ஏகாதசியன்று விரதம் இருப்பவர்கள் இறந்த பின்னர் நேரடியாக வைகுண்டம் செல்வார்கள். அவர்களுக்கு மறுபிறப்பே இல்லை என்று பக்தர்கள் மத்தியில் நம்பப்படுகின்றது. மேலும் மாதந் தோறும் அனுஷ்டிக்கும் அனைத்து ஏகாதசி நாள்களிலும், உண்ணா நோன்பு இருந்து பெறும் பயனை வைகுண்ட ஏகாதசியன்று இருக்கும் ஒருநாள் விரதத்தால் பெறலாம் எனக் கூறப்பட்டுள்ளது.

இந்துக்களின் மிக முக்கிய விரதங்களில் ஒன்றாக வைகுண்ட ஏகாதசி விரதம் கருதப்படுகிறது. வைகுண்ட ஏகாதசி விரதம் பக்தியிலும், புண்ணியத்திலும் சிறந்த ஒன்றாக விளங்குகின்றது. வைகுண்ட ஏகாதசி விரதம் அனுஷ்டித்தால் அனைத்து தீவினைகளும் களைந்து போகும் என்பது ஐதீகம்.

இந்த விரதத்துக்குப் பாவத்தைப் போக்கும் சக்தி உண்டு. அஸ்வமேத யாகம் செய்த பலனை ஏகாதசி விரதத்தால் பெற முடியும். முப்பத்து முக்கோடி தேவர்களும் அனுஷ்டிக்கும் விரதம் இது என்று சிவபெருமான் பார்வதிதேவிக்கு ஒருமுறை விளக்கினார்.

வைகுண்ட ஏகாதசியன்று விரதம் இருப்பவர்கள் இறந்த பின்னர் நேரடியாக வைகுண்டம் செல்வார்கள். அவர்களுக்கு மறுபிறப்பே இல்லை என்று பக்தர்கள் மத்தியில் நம்பப்படுகின்றது. மேலும் மாதந்தோறும் அனுஷ்டிக்கும் அனைத்து ஏகாதசி நாள்களிலும், உண்ணாநோன்பு இருந்து பெறும் பயனை வைகுண்ட ஏகாதசியன்று இருக்கும் ஒருநாள் விரதத்தால் பெறலாம் எனக் கூறப்பட்டுள்ளது. இதனால் இது சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

வரலாற்றுப் புகழ்மிக்க பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயம் இலங்கையின் புகழ்பெற்ற விஷ்ணு ஆலயம் ஆகும். இங்கு ஸ்ரீ மத் நாராயணன் கூர் வடிவில் அவதரித்து பக்தர்களைக் காத்து அருள் புரிகின்றார்.

இவ்வாலயத்தில் கொண்டாடப்படும் அனைத்து உற்சவங்களும் மிகப் பிரதிசித்தி பெற்றவை. அந்த வகையில் மார்கழி மாதத்தில் கொண்டாடப்படும். வைகுண்ட ஏகாதசி உற்சவம் மிகச் சிறப்பு வாய்ந்தது. இதன் முக்கிய நிகழ்வான சொர்க்க வாசல் திறப்பு இன்று 6 ஆம் திகதி நிகழ்வுள்ளது.

மார்கழி மாத உற்சவம் கடந்த 29 ஆம் திகதி கொடியேற்றத்தடன் ஆரம்பமானது. அதிகாலை 3.30 மணிக்கு பெருமாளுக்கு அபிஷேக ஆராதனைகள் ஆரம்பமாகும். அதிகாலை 5 மணிக்கு சொர்க்கவாசல் திறக்கப்படும். இதன் போது திருமாலின் இருப்பிடமாகக் கருதப்படும் வைகுண்டத்தில் கதவுகள் திறக்கப்படுவதாக நம்பப்பபடுகின்றது. அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று முற்பகல் 11 மணியளவில் நாராயணன் தேரில் ஆரோகணிப்பார். இத்தகைய சிறப்புக்களைப் பெற்ற தினத்தில் அடியாளர்கள் ஸ்ரீமத் நாராயணனை மனமுருக வழிபட்டு எல்லாச் சிறப்புக்களையும் பெற்று மறுமையில் வைகுண்ட வாழ்வைப் பெற பிரார்த்திக்கின்றோம்.

*கட்டுரையாளர்:*
*விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்.*

# பலன்கள் அதிகம்

காரை எம்.பி அருளானந்தன்

இந்துப் பெருமக்களால் பெரு முக்கியத்துவத்தோடு அனுட்டிக்கப்படும் விரதம் வைகுண்ட ஏகாதசி விரதம். மார்கழி மாதம் தனித்துவமான மாதம். மங்கலமாதம். மார்கழி மாத சுக்ல பஷத்தில் வருகின்ற ஏகாதசிக்கு வைகுண்ட ஏகாதசி என்றும் பெயர் குறிப்பிடுகின்றனர்.

மந்திரத்துக்குகாயத்திரி முக்திக்கு காசி, விரதத்துக்கு ஏகாதசி என்று வைகுண்ட ஏகாதசி விரதத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். ஏகாதசி விரதங்களை பக்தி சிரத்தையுடன் கடைப்பிடிப்பவர்களுக்கு மனம் தூய்மை பெறும்.

புண்ணியம் சேரும். பக்தி பெருகும். தூய வாழ்க்கை அமையும் என்பது ஐதீகம். மூன்று கோடி ஏகாதசி விரத காலங்களைக் கடைப்பிடித்த பலனை வைகுண்ட ஏகாதசியைக் கடைப்பிடிப்பவர்கள் பெறுவார்கள் என்றும் கூறுவர்.

வருடத்தில் வருகின்ற ஏகாதசி விரத காலத்தைக். கடைப்பிடிக்க முடியாதவர்கள் வைகுண்ட ஏகாதசி விரதத்தைக் கடைப்பிடிக்கலாம். வைகுண்ட ஏகாதசியை மோட்ச ஏகாதசி என்று பத்ம புராணம் அழகாக விவரிக்கின்றது. தவிர மார்கழி மாதம் முழுவதும் கிருஷ்ண பரமாத்மாவின் நாமங்களைச் சொல்லி வருவதன் ஊடே வைகுண்ட ஏகாதசியின் பலனைப் பெற்றுக் கொள்ளலாம். ஆக இக் காலத்தில் பக்தி சிரத்தையோடு இருந்து விஷ்ணு பகவானை வழிபாடு இயற்றி அவனருளைப் பெற்று இன்புற்றிருப்போமாக.



# போதை அச்சுறுத்தும் அரக்கன்

அ.நிசாந்தினி
மெய்யியல்துறை,யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

சமகால மானிட சமூகம் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்ற பிரச்சினைகளுள் போதைப்பொருள் பாவனை என்பது எதிர்கணியப் பெறுமானங்களை உள்ளடக்கிய ஒரு தீவிர பிரச்சனையாக இனம் காணப்பட்டுள்ளது.

போதைப்பொருள் பாவனை என்பது தனியாள் சம்மந்தப்பட்ட விவகாரமாக ஆரம்பித்து நாளடைவில் சமூகத்திற்குரிய பிரச்சனையாகப் பரிணாமம் பெற்றுவிடுகின்றது. போதை என்றால் என்ன? அதன் விபரீதம் எப்படிப்பட்டது? என்பதை அறியாமலே போதைப்பாவனையில் மானிட சமூகம் ஈடுபடுகின்றது.

போதை என்பது தன்னிலை மறக்கச் செய்தல், உடல் உளப் பாதிப்புக்களை ஏற்படுத்தல் என்பதாகும். போதையைப் பயன்படுத்தியவன் தனது அறிவை இழக்கின்றான், மயங்குகிறான், உடல் பலவீனமடைகிறது. அதன்பின் எந்தவொரு விடயத்தையும் அறியாமல் இருக்கின்றான். போதைப் பொருளுக்கு மானிட சமூகம் அடிமையாவதற்குப் பல்வேறு காரணிகளைக் குறிப்பிட்டுக் கூறலாம். குடும்பப் பிரச்சினை, போட்டிச் சூழலுக்கு முகம் கொடுக்க முடியாமை, சகபாடிகளின் தொடர்பு போன்றன அவற்றுள் சில.

### தனிநபர் பிரச்சினையல்ல

போதைப்பொருள் பாவனையானது ஒரு தனிமனிதனின் சொந்த விடயமல்ல. அதன் விளைவு குறித்த நபரை மட்டுமன்றி அவரைச் சூழவுள்ள நபரையும் பாதிக்கின்றது.

இன்று இடம்பெறுகின்ற குடும்ப வன்முறைகள், சூழலியல் வன்முறைகள், கிராமங்களுக்கு இடையிலான மோதல்கள் என்பனவற்றுக்குப் போதைப்பொருள் பாவனையே முதன்மைக் காரணம் என்று அறியப்படுகின்றது. தவிர, ஒவ்வொரு சமூகத்திற்கும் உரிய பண்பாட்டு விழுமியங்கள், நியமங்கள், நெறிமுறைகள் போன்றவற்றினைச் சீரழிக்கின்றது.

### அச்சுறுத்தும் புள்ளிவிவரம்

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் பிரகாரம் இலங்கையில் சுமார் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் போதைப் பொருளுக்கு நிரந்தரமாக அடிமையாகியுள்ளதாக தேசிய போதைத் தடுப்புச் சபை எச்சரித்துள்ளது. குறிப்பாக, இளைஞர்களிடையே இப்பாவனை சடுதியாக அதிகரித்திருப்பதை அது சுட்டிக்காட்டியுள்ளது. கடந்த ஒருசில வருடங்களில் சிறுவர்களிடத்தில் குறைந்திருந்த போதைப்பொருள் பாவனை மீண்டும் நாட்டில் தலைதூக்கி வருவதாகவும் புகைத்தல் மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபை தெரிவித்துள்ளது. எனவேபோதைப் பொருள் பாவனையில் இருந்து விடுபட மக்கள் மத்தியில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் இறுக்கமாக முன்னெடுக்கப்பட வேண்டும். துண்டுப் பிரசுரங்கள், விழிப்புணர்வுத் தெரு நாடகங்கள், உள ஆற்றுப்படுத்தல் நடவடிக்கைகள் என்பவற்றை மேற்கொள்வதன்மூலம்போதைப்பொருள்பாவனையில் இருந்து இந்தச் சமூகத்தை விடுவிக்க ஓரளவாவது எத்தனிக்க இயலும்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பழிவாங்கலே அதிகாரத்தின் முதல் தெரிவு

இலங்கையை போர்த்துக்கேயர் கைப்பற்றிய போது அமைக்கப்பட்ட கோட்டைகளில், தூக்கு மேடை உயர்ந்த இடத்தில் `அமைக்கப்பட்டிருக்கும். கோட்டைக்குள் இருப்பவர்களும், வெளியே இருப்பவர்களும் மிகத் தொலைவில் நின்றாலும், தூக்கு மேடை அவர்களின் கண்ணில் பட்டே தீரும். தமக்கு எதிராகக் கலகம் செய்ய முனைவோரை எவ்வித விசாரணையுமின்றி, இந்தத் தூக்குமேடையில் ஏற்றி, அவர்களது சடலங்களைத் தூக்குக் கயிற்றில் இருந்து அகற்றாது அப்படியே பல நாட்களுக்கு தொங்கவிடுவது போர்த்துக்கேயரின் பாணி. இதன்மூலம் அவர்கள் தங்களுக்கு எதிராகச் செயற்படுவோரை உளவியல் ரீதியான அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கி, அவர்களின் போராட்டங்களை மழுங்கடித்தனர். இப்படி பகிரங்கமாக எதிரிகளுக்கான தண்டனைகளை வழங்குதல், பழிவாங்குதல் என்பன அன்று முதல் இன்று வரை அதிகார வெறி கொண்ட பல ஆட்சியாளர்களின் விருப்பத்துக்குரிய தெரிவாக இருக்கின்றது.

இதே வழியில், தமது பழிவாங்கும் படலத்தைப் பகிரங்கமாகவே செய்வது ராஜபக்ஷாக்களின் 'ஸ்டைல்'. முன்னைய அவர்களின் அதிகாரக் காலத்தின் போதும் இப்படித்தான் அவர்கள் எதையும் ஒளிப்பு, மறைப்பின்றி தமக்கு எதிரானோரைப் பழிவாங்கி, அனைவரையும் அச்சத்தின் பிடிக்குள் வைத்திருந்தார்கள். இப்போதும் , அதே பாணியையே அவர்கள் கையில் எடுத்திருக்கிறார்கள். கோத்தாபய ராஜபக்ஷ , ஜனாதிபதியாகப் பதவியேற்று வெறும் 7 வாரங்கள் கடப்பதற்கிடையில், எதிரணியைச் சேர்ந்த 3 எம்.பிக்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். முதலில் சம்பிக்க ரணவக்க, பின்னதாக ராஜித சேனரத்ன, இப்போது ரஞ்சன் ராமநாயக்க.

கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றில் தனது அக்கிராசஉரையின்போது, நாட்டை அபிருத்திப் பாதைக்கு அழைத்துச் செல்லப்போவதாக தனது 'சுபீட்சத்தின் இலக்கு' கொள்கை அறிமுகம் செய்த கோத்தாபய, உரையின் இறுதியில் "இலங்கையரை சர்வதேசரீதியில் கௌரவமான பிரஜைகளாக மாற்றுவதே தனது இலக்காகும்" என்று சொல்லியிருந்தார். ஆனால் அப்படிச் சொன்ன சூடு ஆறுவதற்கிடையில் ரஞ்சன் ராமநாயக்கவை கைது செய்து, இலங்கையின் ஜனநாயகத்தை சர்வதேசத்தின் முன்னால் இன்னொரு முறை தலைகுனிய வைத்திருக்கிறார் ஜனாதிபதி கோத்தாபய. இத்தனைக்கும் ரஞ்சன் ராமநாயக்க செய்த குற்றம், அவரின் துப்பாக்கிக்கான அனுமதியை நீட்டித்திருக்காமை தான்.

ரஞ்சன் ராமநாயக்கவின் கைதை, கோத்தாபயவின் குணத்தை அறிந்திருந்த சகலரும் ஏற்கனவே எதிர்பார்த்திருந்தார்கள். தேர்தல் காலத்தின் போது யாரெல்லாம், கோத்தாபயவுக்கு எதிரான காய்களைப் பலமாக நகர்த்தினார்களோ அவர்களைத் தரவரிசைப்படுத்தி ஒவ்வொருவராக சிறைக்குள் தள்ளிக் கொண்டிருக்கிறார் கோத்தாபய. அந்தத் தரவரிசையில் முதலிரு இடங்களையும் பிடித்திருந்த சம்பிக்க, ராஜித ஆகியோரை சிறை செய்து சிலவாரங்கள்பொறுத்து மூன்றாமிடத்தில் இருந்த, தேர்தல் பரப்புரைகளின் போது கோத்தாபய போன்று கிண்டலடிக்கும் மிமிக்ரி செய்த ரஞ்சன் ராமநாயக்கவையும் தூக்கியிருக்கிறார்கள்.

கைது செய்யப்பட்ட மூவரும் அடுத்தடுத்த நாட்களில் பிணை பெற்று வந்து விட்டாலும், இந்தக் கைதுகள் கோத்தாபயவுக்கு எதிராகத் தேர்தல் காலத்தில் முன்னின்று செயற்பட்டவர்களை, 'அடுத்தாகச் சிறை செல்லப்போவது நானா?' என்ற உளவியல் அச்சத்துக்குள் தள்ளிவிடும். சாம, தான , பேத, தண்ட வழிகளில் , ராஜபக்ஷாக்களின் விருப்பத்துக்குரிய முறையான தண்ட வழிமுறை, இனியும் பலர் மீது பாயலாம். அத்தோடு இனிவரும் காலங்களிலும், கோத்தாபயவுக்கோ,அரசுக்கோ எதிராகச் செயற்பட்டால் எப்படியும் பழிவாங்கப்படுவோம் என்ற மனப்பயத்தால் பீடிக்கப்பட்டு, மெல்ல மெல்ல எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கைவிடவும் கூடும். அதைத்தான் அவர்களும் எதிர்பார்க்கிறார்கள்.

# லஞ்சம் பெறும் இடத்தில் வைத்து கைவிலங்கு!



### சிறப்பு நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு, ஜன.6

**அரச நிறுவனங்களில் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக வரும் பொதுமக்களிடம் இலஞ்சம் பெறும் நபர்களை அதே இடத்தில் வைத்துக் கைது செய்யும் சிறப்பு நடவடிக்கை அரசால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

மேல் மாகாணத்தைக் கேந்திர நிலையமாகக் கொண்டு, இதற்கெனப் பொலிஸ் பிரிவு ஒன்று செயற்பட்டு வருகின்றது என்றும், அதற்கு மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவர் தலைமை அதிகாரியாகச் செயற்படுகின்றார் என்றும் கூறப்படுகின்றது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைவாகச் செயற்படும் இந்தப் பிரிவில் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் சிலரும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

பொது மக்களிடம் இலஞ்சம் பெறுவதான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படும் பல நிறுவனங்கள் தொடர்பில் அரசுக்குத் தற்போது தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் அவை தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)



### நீதிமன்றிலுள்ள வழக்கின்
# சான்றுப் பொருளை மோதியது டிப்பர்

தலைமன்னார், ஜன. 6

மன்னார் நீதிமன்றம் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த வழக்கின் சான்றுப் பொருளான வாகனத்தை, டிப்பர் வாகனம் ஒன்று மோதிச் சேதப்படுத்தியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட டிப்பர் வாகன சாரதி பின்னர் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட் டார்.

கடந்த புதன்கிழமை இந்தச்சம்பவம் இடம்பெற்றது.

போதைப் பொருள் கடத்தப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும்குறித்த வாகனம் மீதே டிப்பர் மோதியது என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்துப் பற்றி நீதிமன்றப் பதிவாளர் மன்னார் பொலிஸில் முறைப்பாடு செய்தார். டிப்பர் வாகனச் சாரதி கைது செய்யப்பட்டார்.

மன்னார் நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜாவிடம் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டார்.

அவர் சார்பில் முற்பட்ட சட்டத்தரணி செ.டினேசன் பிணையில் விடுமாறு கோரினார். சந்தேக நபர் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டுஆள் பிணைகளில் விடு விக்கப்பட்டார். வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (சு-60)

# மின்தடை!

யாழ்ப்பாணம், ஜன. 6

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை கிளிநொச்சி மாவட்டத்தில் மல்லாவியிலிருந்து கல்விளான் வரை, ஒட்டறுத்த குளத்திலிருந்து பாண்டியங்குளம் ஊடாக மூன்று முறிப்பு வரை, துணுக்காயிலிருந்து தென்னியங்குளம் வரை, பிள்ளையார் அரிசி ஆலை, ஆலங்குளம் இராணுவ முகாம், 653ஆம் படைப்பிரிவு இராணுவ முகாம், மொடர்ன் அரிசி ஆலை ஆகிய இடங்களிலும், வவுனியா மாவட்டத்தில் கூமாங்குளம் கிராமம், பகல அளுத்வத்த கிராமம், சாளம்பைக்குளம் ஆகிய இடங்களிலும், மன்னார் மாவட்டத்தில் ரைசலிலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படைமுகாம், தலை மன்னார் மருத்துவமனை,கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் திருமதி அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

# சிவப்பு எச்சரிக்கை

ஏழாலை,ஜன.6

வலி. வடக்குப் பிரதேசத்தில் நீண்டகாலமாகத் துப்புரவு செய்யப்படாத காணிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள காணிகளை 14 நாள்களுக்குள் துப்புரவு செய்ய வேண்டும். இல்லையெனில் அந்தக் காணிகளின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று வலி. வடக்குப் பிரதேச சபை, தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவினர் இணைந்து அறிவுறுத்தியுள்ளனர்.

வலிவடக்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் பல காணிகள் பற்றைகள் வளர்ந்து டெங்குத் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடிய வகையில் காணப்படுகின்றன.

அந்தக் காணிகளைத் துப்புரவு செய்யுமாறு பல முறை அறிவித்தும் துப்புரவு செய்யப்படாத நிலையிலேயே, சிவப்பு எச்சரிக்கை அறிவித்தல் காணிகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (சு-39)

# யாழ். பல்கலையில் தமிழியல் மாநாடு!

யாழ்ப்பாணம், ஜன.6

"வரலாற்றுப் போக்கில் தமிழியல் ஆய்வுகள்" எனும் தொனிப்பொருளில், அனைத்துலக தமிழியல் மாநாடு, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர். ம. இரகுநாதன் தலைமையில் இரண்டு நாள்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெறும்.




எதிர்வரும் 10 ஆம், 11ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் மாநாடு இடம் பெறும்.

இந்த மாநாட்டில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரி, பேராசிரியர் க. கந்தசாமி, சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி கலாநிதி க. சுதாகர் ஆகியோர் கலந்து கொள்வர்.

முதன்நாள் நிகழ்வுகளின் காலை நிகழ்வுகள் 8 மணிக்கு ஆரம்பமாகும். தொடர்ந்து மாலை நிகழ்வுகள் பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகி முதல் நாள் நிகழ்வுகள் மாலை 5 மணிக்கு நிறைவுறும். இரண்டாம் நாள் நிகழ்வுகளின் காலை நிகழ்வு 8.30 மணிக்கு ஆரம்பமாகும். மாலை நிகழ்வுகள் பிற்பகல் 2மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 3.30 மணிக்கு நிறைவுறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-21)

## பொதுஅறிவுப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வு




யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ்ப்பாணம் பெனின்சுலா றோட்டறிக் கழகத்தால் யாழ். மாவட்ட பாடசாலைகளில் தரம் 6 முதல் 13 வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கிடையில் 4 பிரிவுகளாக நடத்தப்பட்ட பொது அறிவு போட்டிப் பரீட்சையின் பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் அனுமதியுடன், இரட்ணம் பவுண்டேசன் நிறுவனத்தின் அனுசரணையில் யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இந்தப் பரிசளிப்பு இடம்பெற்றது.

நிகழ்வில் பாடசாலை மற்றும் மாவட்ட மட்டத்தில் வெற்றிபெற்ற மாணவர்கள் சான்றிதழ்கள் மற்றும் வெற்றிக்கிண்ணங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக சட்டம் மற்றும் மனித உரிமைகள் நிலையத்தின் மனித உரிமைகள் தொடர்பான கல்விப்பிரிவின் இணைப்பாளர் கலாநிதி அ.சுதாகரன் மற்றும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளரும் எந்திரவியல் பொறியியலாளருமான ஜெ.ஜோய் மாதவன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (ம-ந)

## கட்டுரைப்போட்டி

யாழ்ப்பாணம், ஜன.6

சர்வதேச சிங்க சமாஜங்களின் இணையம்- பிராந்தியம் 306ஏ 02 வருடந்தோறும் நடத்தும் போதைப்பொருள் தொடர்பான கட்டுரைப்போட்டி இந்த வருடமும் நடத்தப்படவுள்ளது.

26 ஆவது வருடமாக நடத்தப்படும் இந்தப் போட்டியை தெஹிவளை வடக்கு சிங்க சமாஜம் பொறுப்பேற்றுள்ளது. இந்தப் போட்டியில் 15 வயது தொடக்கம் 19 வயதுக்குட்பட்ட சகல பாடசாலை மாணவர்களும் பங்கேற்கலாம்.

ஆக்கங்கள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் ஏற்றுக் கொள்ளப்படும். கட்டுரைகள் யாவும் பிராந்திய இணைப்பாளர், சர்வதேச சிங்க சமாஜங்களின் இணையம் பிராந்தியம் 306A2, 12/3, பிரான்சிஸ் வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06 எனும் முகவரிக்கு எதிர்வரும் 31ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

'எமது குறிக்கோள்-போதையற்ற இலங்கை' எனும் தலைப்பில் கட்டுரைகளை எழுத முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜன.6

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் 2020 ஆண் ஆண்டுக்கான எழுத்தாளர் ஊக்குவிப்புச் செயற்திட்டம் (நூல் கொள்வனவு) மற்றும் தேசியக் கையெழுத்துப் பிரதிப்போட்டி ஆகியவற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இலக்கியத் துறை சார்ந்த கலைஞர்கள் போட்டிகளுக்கான விண்ணப்பப் படிவங்களை பிரதேச செயலக கலாசாரப்பிரிவில் பெற்றுக்கொள்ளலாம் என்று நல்லூர் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

****

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் கல்வி முதுமாணிப்பட்ட நிகழ்ச்சி திட்டத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக்கற்கைநெறிக்குவிண்ணப்பிக்க விரும்புவோர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் கல்வியியல் இளமாணி பட்டத்தைப் பெற்றிருக்க வேண்டும். அல்லது இளமாணிப்பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டமேற்கல்வி டிப்ளோமாவில் சித்தியடை ந்திருத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து எதிர்வரும்15ஆம்திகதிவரைவிண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விவரங்களை உதவிப் பணிப்பாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும். (க)

## பொதுக் கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

ஏழாலை, ஜன.6

அல்வாய் மனோகரா சன சமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும், நிர்வாகத்தெரிவும் நிலைய மண்டபத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறும். அனைத்து அங்கத்தவர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (க-39)

## கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு

யாழ்ப்பாணம் ஜன.6

இளவாலை கிராமத்தைச் சேர்ந்த 25 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன. இளவாலைக் கிராமத்தைச் சேர்ந்த மறைந்த மனுவேற்பிள்ளை அவர்களின் 10வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு இந்தக் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

மனுவேலுப்பிள்ளையின் பிள்ளைகளின் நிதிப்பங்களிப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இளவாலை மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த 50



மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன. (ந-222)

## 45,000 மாணவருக்கு இம்முறை அனுமதி!

கொழும்பு, ஜன.6

45 ஆயிரம் மாணவர்களை அரச பல்கலைக் கழகங்களில் இணைத்துக் கொள்வதற்குத் தீர்மானி க்கப் பட்டுள்ளது என்று உயர்கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதேவேளை, திறந்த பல்கலைக் கழகங்களில் சுமார் ஒரு இலட்சம் மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும், அடுத்த வாரமளவில் இது தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் இலகுவில் வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொள்ளும் பட்டப்படிப்புக்கு மேலதிகமாக மாணவர்களை இணைத்துக்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (எ-22)

# தேர்தலின் பின்னர் தலைவர் மாறுவார்

## பிரசன்ன கிண்டல்



**கொழும்பு, ஜன.6**
**நாட்டில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் படுதோல்வியைத் தழுவிய பின்னர் ஐக்கிய தேசியக் கட்சிக்குப் புதிய தலைவர் ஒருவரை நியமிக்க நேரிடும்.**

இவ்வாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். எட்டாவது நாடாளுமன்றத்தின் 4ஆவது கூட்டத் தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பங்கேற்றிருந்தார். அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாடாளுமன்றத்தில் எமக்கு பெரும்பான்மை கிடையாது. த.தே.கூ, முஸ்லிம் கட்சிகள் எமக்கு எதிராகவே உள்ளன. எதிர்வரும் பெப்ரவரி 28ஆம் திகதிக்கு பின்னர் நாடாளுமன்றத்தை கலைக்க வாய்ப்புள்ளது. அடுத்த தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்று ஜனாதிபதியின் கொள்கைகளை செயற்படுத்துவோம். அதற்கான செயற்றிட்டங்களை தற்போதே முன்னெடுக்க ஆரம்பித்துள்ளோம்.
அரசின் நல்ல முன்னெடுப்பு களுக்கு ஒத்துழைப்பதாக ஐ.தே.க கூறினாலும் பின்னர் அதனை சிதைக்கும் செயற்பாடுகளையே மேற்கொள்ளும். அதேவேளை ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாச, சண்டையிட்டு எதிர்க் கட்சி தலைவர் பதவியையும் பெற்றுள்ளார்.
நாடாளுமன்றத் தேர்தலில் படுதோல்வியடைந்த பின்னர் ஐ.தே.கவிற்கு புதிய தலைவர் ஒருவரை தேட வேண்டிய நிலைமை ஏற்படும்-என்றார். (எ)





# பள்ளத்தில் பாய்ந்தது வான்

## சாரதி மாயம்

ஹட்டன் ஜன.6
ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹட்டன் கொழும்பு பிரதான வீதியில் வான் ஒன்று பள்ளத்தில் பாய்ந் துள்ளது.
ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியில் ரதன் வூட்லண்ட் பசார் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை ஐந்து மணியளவில் வீதியை விட்டு விலகி தொலைபேசி கம்பத்தில் மோதி வான் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. குறித்த வானைச் செலுத்திய சாரதி தலைமறைவாகியிருக்கிறார் என ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த வான் பள்ளத்தில் பாய்ந்த உடன் சாரதி இறங்கி வானை பூட்டி விட்டு வீதியில் இறங்கி ஹட்டன் பக்கமாக நடந்து சென்றார் என சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.
குறித்த நபர் சுமார் ஒரு மணித்தியாலம் வரை எந்த வித தகவலும் வழங்காததால் பொலிஸார் மத்தியில் பல்வேறு சந்தேகங்கள் தோற்றுவித்துள்ளன. வான் சாரதி போதையில் வாகனம் செலுத்தினாரா? அல்லது சட்ட விரோத பொருள்கள் ஏதும் குறித்த வானில் உள்ளனவா? அல்லது வேறு ஏதும் காரணங்களினால் தலைமறைவாகினாரா? போன்று பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளன. குறித்த வானில் காணப்படும் வாகன அனுமதி பத்திரம் மற்றும் பொது மக்களின் தகவல்களின் அடிப்படையிலும் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக ஹட்டன் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.
குறித்த வான் பற்றைகளில் சிக்கியிருப்பதனால் பள்ளத்தில் வீழ்வதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் சாரதியில்லாததனால் அதனை தடுப்பதோ மீட்டு எடுப்பதோ சிக்கலாக காணப்படுவதாக பொது மக்கள் தெரிவித்தனர். (ந)

# மன்னாருக்கு மஹிந்த விஜயம்

## தேர்தல் ஏற்பாடுகள் பற்றி ஆராய்வு

மன்னார், ஜன. 6
இலங்கைத் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய மன்னார் மாவட்டதேர்தல்திணைக் களத்துக்கு நேற்றுமுன் தினம் சனிக்கிழமை திடீர் விஜயம்செய்தார்.
கடந்த வருடம் இடம் பெற்ற ஜனாதிபதி தேர்தல் தொடர்பான அறிக்கைகள் மற்றும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாகவும் தேர்தலோடு பணியாற்றிய அதிகாரிகளைச் சந்திக்கும்முகமாகவும்இந்தவிஜயம் அமைந்தது என்று தெரிவிக்கப்பட்டது.
ஜனாதிபதி தேர்தலின் போது மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பான முழுமையான அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பாகவும் அதனை முழுமைப் படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது என்று தெரிவிக்கப் பட்டது.
நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தல் தொடர்பான விவரங்களையும் அது தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. சந்திப்பில் மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஜெனிற்றன், மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்க மற்றும் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (த-56)





## கற்றல் உபகரணங்கள் கையளிப்பு


மன்னார்,ஜன.6
அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி தலைவரின் கல்விக்கான வேலைதிட்டத்தினூடாக மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.
மன்னார்,புதுக்குடியிருப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கே இந்த உதவி கடந்த வெள்ளிக்கிழமை மன்னாரில் வைத்து வழங்கப்பட்டது. நிகழ்வில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ரிப்கான் பதியுதீன், மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் முஜாஹிர், இளைஞர் சேவை பணிப்பாளர் முனவ்வர் ஆகியோர் கலந்து கொண்டு உதவிகளை வழங்கினர். (ஐ-56)

# நினைவு தினம் அனுஷ்டிப்பு

திருகோணமலை ஜன.6
ஆயுதப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஐந்து மாணவர்களின் நினைவு தினம் கடந்த வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.
2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி ஆயுதப்படையினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட ஐந்து மாணவர்களின் 14 ஆம் ஆண்டு நினைவு தினம் கடந்த வெள்ளிக்கிழமை திருகோணமலை காந்தி சதுக்க முன்றிலில் அனுஷ்டிக்கப்பட்டது.
தமிழ்த்தேசியக்கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் மாகாணசபை உறுப்பினருமாகிய எம்.கே. சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் கட்சியின் தேசிய அமைப்பாளர் சில்வஸ்டர் பிரசார செயலாளர் ஜனா மற்றும் ரெலோ அமைப்பின் நிர்வாகச் செயலாளர் நித்தியானந்தம் உட்பட தமிழ்த் தேசியக்கட்சியின் உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வு நடந்த போது இராவணா சேனை அமைப்பின் ஆதரவாளர்களும் அந்த இடத்தில் நின்று நிகழ்வை அவதானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)



# கழிவுகள் அகற்றும் பொறிமுறையில்லை



## விவரங்கள் ஆராய்வு

*யாழ்ப்பாணம்,ஜன.6*

**யாழ் மாவட்டத்தில் யாழ். மாநகர சபை உட்பட 3 நகர சபைகள், 13 பிரதேச சபைகள் உட்பட 17 உள்ளூராட்சி சபைகள் இயங்கி வருகின்ற போதும், இது வரையில் திண்மக் கழிவு, கழிவு நீர், மலக்கழிவு மற்றும் மிருகங்களின் கழிவு, மருத்துவமனைக் கழிவுகள் தொடர்பில் போதுமான முகாமைத்துவப்பொறி முறை இல்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.**


வரலாற்றில் என்றுமில்லாதவாறு கடந்த வருடம் இறுதியில் யாழ். மாவட்டம் டெங்கு உயிர்கொல்லி நோயாகப் பரிணமித்ததுடன், சிறுவர் முதல் பெரியோர் வரை பாதிக்கப்பட்டனர்.

குடாநாட்டுக்கழிவு முகாமைத்துவம் சீர் அற்ற நிலையில் உள்ளமை தொடர்பில் மாவட்டச் செயலர் நா. வேதநாயகன் கவனம் செலுத்தியுள்ளார். அதற்கமைவாக ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளின் கழிவகற்றும் பொறி முறை தொடர்பில் தீவிரக் கவனம் செலுத்தியதுடன், அவற்றின் விபரங்களைத் தனித்தனியாகவும் கோரியுள்ளார்.

யாழ்.மாநகர சபையால் நாளாந்தம் 105 மெற்றிக் தொன்னுக்கும் மேற்பட்ட கழிவுகள் கல்லுண்டாய் வெளியில் கொட்டப்பட்டு வருகின்றன. இதனைவிட நல்லூர், சுன்னாகம், மானிப்பாய், சுழிபுரம், மற்றும் வடமராட்சி. தென்மராட்சி கழிவுகளும் எவ்வித பொறிமுறையும் இன்றி அகற்றப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனை விட ஹோட்டல் , கடைகள் வீடுகளில் இருந்து தினமும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பெறப்படும் மலக்கழிவுகள், கழிவு நீர் என்பனவும் கல்லுண்டாய் வெளியை நிரப்பி வருகின்றன.

இவ்வாறு கடந்த 20 வருடங்களுக்கு மேலாக கழிவகற்றும் திட்டம் குறித்து உயர்மட்டத்தில் ஆராயப்பட்டு வருகின்ற நிலையிலும், முறையான பொறிமுறை திட்டம் வகுக்கப்படாத காரணத்தால் யாழ். மாவட்டம் டெங்குத் தாக்கத்துக்கு ஈடுகொடுக்க முடியாத அளவுக்குப் பேரிடர்களைச் சந்தித்தது. இந்த வருடமும் உள்ளூராட்சி சபைகள் முறையான திட்டத்துக்குள் பொருத்தமான பொறிமுறைக்குள் வராத பட்சத்தில் பெரும் இடர்களை எதிர்காலத்தில் சந்திக்க வேண்டிய சூழ்நிலையேற்படும் என்று சுகாதாரப்பகுதியினர் எச்சரித்துள்ளனர். (க-50)



# வீடு மீது தாக்குதல்

*யாழ்ப்பாணம்,ஜன.6*

அச்சுவேலி பத்தமேனி பகுதியில் உள்ள வீடொன்றின் மீது நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வீட்டிலே மூவர் மாத்திரம் இருந்த நிலையில், இரவு 9.30 மணி அளவில் திடீரென்று உட்புகுந்த குழுவினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

வீட்டின் கண்ணாடிகள், முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள் என்பவற்றை உடைத்து சேதப்படுத்தியுள்ளனர். கன்ரர் வாகனத்தில் வந்த குழுவினரே தாக்குதல் நடத்தினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (க-26)





## மின்கம்பத்தில் மோதி

# கப் வாகனம் விபத்து சாரதி தப்பி ஓட்டம்

வவுனியா,ஜன. 6

சட்டவிரோதமாக மரங்களைக் கடத்திச்சென்ற 'கப்' ரக வாகனம் மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது. அதனையடுத்து வாகன சாரதி வாகனத்தைவிட்டுத் தப்பி ஓடியுள்ளார் என்று ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் நேற்று அதிகாலை 4 மணியளவில் ஓமந்தை எ9 வீதி கள்ளிக்குளம் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

அந்த வாகனத்தில் மரக்குற்றிகள் காணப்படுகின்றன. அவை சட்டவிரோதமாகத் தறிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டவையாகவே உள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் மின்கம்பம் சேதமாகிச் சரிந்தது. அதனால் மின் கம்பிகள் அறுந்து தொங்குகின்றன. அந்தப் பகுதிக்கான மின்விநியோகம் தடைப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் விசாரணை நடத்தினர். மின்சார சபையினர் மின்விநியோகத்தைச் சீர்செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (து-110)



# 35 லட்சம் ரூபா சிகரெட்டுகளுடன் இருவர் கைது

கொழும்பு, டிசெ.6

கட்டுநாயக்க விமான நிலையத்தில் 35 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய சட்ட விரோத சிகரெட்டுகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் காலை 5.30 மணியளவில்சுங்கஅதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்ட சோதனைகளின்போதேசந்தேகநபர்கள்கைது செய்யப்பட்டனர் என்று சுங்கத் திணைக்களஊடகப்பிரிவுதெரிவித்துள்ளது.

அபுதாபியிலிருந்து கட்டுநாயக்கவுக்கு வந்த யூஎல் 208 என்ற விமானத்தில்வந்த 28 மற்றும் 38 ஆகிய வயதுடைய இலங்கையர்கள் இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்துகைப்பற்றப்பட்ட 287 சிகரெட்பெட்டிகளிலிருந்து 59 ஆயிரத்து 980 சிகரெட்டுகள்மீட்கப்பட்டுள்ளன. (எ)



# ஈரோஸ் அமைப்பின் இளையோர் மாநாடு

வவுனியா,ஜன.6

ஈரோஸ் அமைப்பின் இளையோர் மாநாடு வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.

எதிர்காலத்துக்கான இளைஞர்கள் என்ற தொணிப்பொருளில் ஈரோஸ் அமைப்பின் தலைவர் எஸ்.துசியந்தன் தலைமையில் நகரசபை கலாசார மண்டபத்தில் மாநாடு நடைபெற்றது.

இனிவரும் காலங்களில் இளைஞர்கள் அரசியலுக்குள் உள்ளவாங்கப்பட வேண்டும். பொருளாதார மேம்பாடுகளை எவ்வாறு கிராம மட்டங்களிலிருந்து கொண்டு செல்வது போன்ற கருத்துக்கள் மாநாட்டில் பரிமாறப்பட்டன.

மாநாட்டில் அமைப்பின் தேசிய அமைப்பாளர் மாணிக்கம் ஜெகன், மற்றும் அமைப்பின் மேல்மட்ட உறுப்பினர்கள், வடக்கு கிழக்கைச் சேர்ந்த அமைப்பின் இளைஞர்கள் கலந்து கொண்டனர். (க-110)

# சிறு மாற்றத்துடன் 'நிறைவான கிராமம்'

மூளாய், ஜன. 6

அரசு அறிமுகப்படுத்திய 'நிறைவான கிராமம்' (சபிறிகமக்) என்ற சமூகமட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை சிறு மாற்றத் துடன் நடைமுறைப்படுத்தும்படி பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

டிசெம்பர் 6ஆம் திகதி அபிவிருத்திச் சுற்றறிக்கைப்படி இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ள விடயத்தை யாழ்ப்பாண மாவட்டச் செயலர், பிரதேச செயலகங்களுக்கு அறிவித்துள்ளார்.

தற்போதைய புதிய எண்ணக்கருவின் படி மக்கள் பங்களிப்புடனான கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட் டம் என்பதன் அடிப்படையில் அமையும் என்று கூறப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையிலேயே இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும்படி அமைச்சு மாவட்ட செயலர்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (து-121)

# கண்ணாடிக்குப் பணமின்றி பார்வையிழக்கும் மாணவர்

## தென்மராட்சியில் இந்த அவலம்



சாவகச்சேரி, ஜன. 6

**பார்வைக் குறைபாடுள்ள பாடசாலை மாணவர்களில் பெரும்பாலானோர் மூக்குக் கண்ணாடி வாங்குவதற்குப் பணம் இல்லாததால் கண்ணாடி இல்லாமலேயே தொடர்ந்தும் கல்விகற்று வருகின்றனர் என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது. கண்ணாடி தேவைப்படுவோரில் 82 வீதமான மாணவர்கள் இந்தநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்றும் இது அவர்களின் கண் பார்வையை மேலும் இல்லாமல் செய்யும் நிலையை ஏற்படுத்தவுள்ளது என்றும் மருத்துவ அதிகாரி எச்சரித்துள்ளார்.**

தென்மராட்சியில் சுகாதாரத்திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் பாடசாலைகளில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் பங்குபற்றலுடன் கண் மருத்துவர்கள் மாணவர்களின் பார்வை தொடர்பில் சோதனை செய்திருந்தனர். 'விஷன் 2020' திட்டத்தில் இந்தச் சோதனையை பல பாடசாலைகளில் அண்மையில் நடத்தினர். அதன்போது பல மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடி அணியவேண்டிய நிலைமையை மருத்துவர்கள் பாடசாலைத் தரப்பினருக்கும் மாணவர்களுக்கும் எடுத்துக்கூறியிருந்தனர்.

தென்மராட்சியில் பாடசாலைகளில் நடத்திய கண் பரிசோதனைகளில் 250 மாணவர்கள் மூக்குக் கண்ணாடி அணியவேண்டும் என்பது தெரியவந்தது. அந்த மாணவர்களுக்கு இது பற்றித் தெரிவிக்கப்பட்டது.

எனினும், அவர்களில் 18 வீதமான மாணவர்களே தமது குடும்பத்தினரின் உதவியுடன் மூக்குக் கண்ணாடி பெற்று அணிகின்றனர். ஏனைய 82 வீதமான மாணவர்கள் மூக்குக்கண்ணாடி அணியவில்லை. காரணம், அதற்கான நிதி அவர்களிடமில்லை என்பது தெரியவந்துள்ளது.

மூக்குக் கண்ணாடிகள் அணியாமல் மாணவர்கள் தொடர்ந்து கற்றலில் ஈடுபடும்நிலை நீடிக்குமாயின் பல மாணவர்கள் பார்வையை இழக்கும் அபாயம் ஏற்படும். இதைத் தவிர்க்க முடியாது. மனித உடலில் கண்பார்வை மிகஅவசியம் என்பதை சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை.

எனவே நாட்டில் உள்ள பரோபகாரிகள், புலம்பெயர் நாடுகளில் தொண்டு நிறுவனங்களை நடத்துவோர், சமூகப்பொறுப்பில் அக்கறையுடன் செயற்படுவோர் மாணவர்களின் எதிர்காலத்தைக் கவனத்திற்கொண்டு பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவிபெற்று அவர்களின் எதிர்காலம் சிறக்க வழிசெய்யவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்குப் புகையூட்டல் இயந்திரம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினர் இவற்றை வழங்கியிருந்தனர். இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி சு.சுதோக்குமார் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

**கர்ப்பிணிக் பெண்கள்**

பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண்கள் பிரசவ காலத்தில் அத்தியாவசியப் பொருள்களைப் பயன்படுத்துவர். ஆனால், அத்தகைய அத்தியாவசியப் பொருள்கள் இல்லாமல் அவர்கள் சிரமப்படுகின்றனர் என்பதை அவதானிக்கமுடிகிறது.

எனவே தாராள மனமுள்ள அனைவரும் பொருளாதார நிலையில் பின்தங்கி வாழும் கர்ப்பிணிகளுக்கு பிரசவ வேளையில் பயன்படுத்தும் பொருள்களைச் சுகாதார மருத்துவ அதிகாரி பணியக அலுவலர்கள் மூலமாகக் கையளிக்க முன்வரவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்த விடயம் தொடர்பில் தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் கவனம் செலுத்தியுள்ளது. மாணவர்களுக்கும் கர்ப்பிணித் தாய்மாருக்கும் உதவிகள் வழங்குவது தொடர்பாக புலம்பெயர் நாடுகளிலுள்ள கழகத்தின் கிளைகளுக்கு அறிவித்து நிதி கிடைப்பின் உதவிகள் செய்ய கழகம் தயாராக உள்ளது என்று கழகத்தின் செயலர். யோ.ஜெயக்குமார் தெரிவித்தார். (கு-9)

## தென்னம் கன்றுகள் நடுகை

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வட பிராந்திய ஊழியர் தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டில் அல்லைப்பிட்டியில் 35 தென்னங்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன. பசுமைப் புரட்சி எனும் செயற்றிட்டத்தின் ஊடாக யாழ்ப்பாண பொறுப்பதிகாரி திருமதி சு.தாரகாவின் ஒழுங்கமைப்பில் யாழ்ப்பாண மாவட்டப் பொறியியலாளர் நா.இளஞ்செழியன் தலைமையில் கன்றுகள் நடுகை செய்யப்பட்டன. தொடர்ந்தும் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நீரேந்து பிரதேசங்களான வேம்பிராய் மற்றும் வல்லிபுரம் ஆகிய பகுதிகளிலும் தென்னங்கன்றுகள் நடுகை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வழிகாட்டலுடன் ஓவியம் வரையலாம்

பொது வீதிகள், இடங்களில் ஓவியர்கள் ஓவியங்கள் வரைந்து வருகின்றனர். அவ்வாறு நாட்டை அழகுபடுத்த விரும்புவோர் கலாசார அலுவல்கள்திணைக்கள அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு குறித்த அலுவலர்களின் வழிகாட்டல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று யாழ்ப்பாணமாவட்ட கலாசார அலுவலர் ஆர்.கிருஸ்ணகுமார் தெரிவித்துள்ளார்.

சுவர் ஓவியங்களைப் பொது இடங்களில் வரைந்து அழகுபடுத்தும் வேலைத் திட்டம் நாடுமுழுவதும் இடம்பெறுகின்றன. ஏ9 வீதி நாவற்குழி அரச களஞ்சிய வெளிப்பகுதியில் சுவர் ஓவியங்கள் வரைதல்நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாவற்குழியில் இந்தச் சுவர் ஓவியங்களை கலாசாரப் பிரிவின் வழிகாட்டலின் கீழ் ஓவியக்கலைஞர் வி.பிரபாகரன் (குகன்) தானாகவே முன்வந்து இலவசமாக 6க்கும் மேற்பட்ட ஓவியங்களை வரைகின்றார். இவர் மட்டுமன்றி, ஓவியர்கள் யாழ்பாண மாவட்டத்தில் பல இடங்களில் ஓவியங்கள் வரைந்து அழகுபடுத்துகின்றனர். (கு-39)

# பலம் காட்டியது தமிழ் அரசு

மன்னார், ஜன. 6

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் 70ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி கட்சியின் இளைஞர்கள் சுமார் 50 பேர் கட்சிக் கொடிகளுடன் முல்லை நகரை நேற்றுமுன்தினம் வலம் வந்தனர்.

கட்சியின் ஆண்டுவிழாவைக் கொண்டாடும் விதத்தில் தமிழ் அரசுக் கட்சியின் முல்லை மாவட்ட அமைப்பாளர்களால் இது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. யாழ்ப்பாண தமிழ் அரசுக் கட்சியின் மகளிர் அணியினர் முல்லை தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் அணி மற்றும் மகளிர் அணியினருடன் கட்சியின் ஆதரவாளர்கள் உறுப்பினர்கள் என சுமார் 500க்கும் அதிகமானவர்கள் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். (கு-213)



# தமிழ் அரசை வீழ்த்த முடியாது

## கூறுகின்றார் ரவிகரன்



முலலைத்தீவு, ஜன. 6

தமிழ் அரசுக் கட்சி தமிழ் மக்களின் அபிலாசைகளை ஏற்றுச் செயற்படுவதனாலேயே இவ்வளவு ஆண்டுகள் தொடர்ந்து சிறப்பாக செயற்பட்டுவருகின்றது. தமிழ் அரசுக் கட்சி எப்போதும் வெற்றிபெற்றுக்கொண்டே இருக்கும், இந்தக் கட்சியை எப்போதும் வீழ்த்தவே முடியாது. என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் 70ஆம் ஆண்டு நிறைவு விழா முல்லைத்தீவு நகரிலுள்ள கரைதுறைப்பற்று பிரதேச சபைக் கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

ருந்தினர்களின் வரவேற்புடன் நிகழ்வு ஆரம்பித்து தமிழ் அரசுக் கட்சிக் கொடி ஏற்றப்பட்டது. மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து விருந்தினர்களின் உரைகள் இடம் பெற்றன.

அதில் உரையாற்றுகையில் ரவிகரன் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு கிழக்கில் தமிழ் மக்களால் அளிக்கப்பட்ட வாக்குகள் தெற்கைத் தோற்கடித்திருக்கின்றன.

தமிழர்கள் கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை மறந்துவிடவில்லை. குறிப்பாக இளைய சமூகம்கூட கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களையும், கடந்த காலங்களில் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனஅழிப்பையும் மறந்துவிடவில்லை.

கோத்தாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலராக இருந்து, நடத்திய கொத்துக்குண்டு, பல்குழல், ஷெல் தாக்குதல்கள், அவருடைய காலங்களில் இடம்பெற்ற அட்டூழியங்கள் எவற்றையும் எமது மக்கள் மறந்துவிடவில்லை.

அதனையே கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் உணர்த்தியுள்ளன.

எனவே தமிழ் மக்களுக்கு நிரந்தரத் தீர்வு கிட்டும்வரை தொடர்ந்து போராடுவோம். என்றார்.

நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான சோ.சேனாதிராசா, வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான து.ரவிகரன். கமலேஸ்வரன் மற்றும் பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், கட்சியின் உறுப்பினர்கள், தொண்டர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (கு-246)

# ‘பப்ளிக்’ பண்ணாதீர்கள்

## கட்சி உறுப்பினர்களிடம் ரணில் கோரிக்கை




**கொழும்பு, ஜன.6**

**ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவப் பிரச்சினைக்குக் கூடிய விரைவில் தீர்வு காணப்படும் என்று அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க அந்தக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ளார்.**

கடந்த 2ஆம் திகதி நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடர் ஆரம்பிப்பதற்கு முன்னர் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் ரணில் இந்த விடயத்தைக் கூறினார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தக் கூட்டத்தில், பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா, ஹரீன் பெர்ணான்டோ மற்றும் அஜித் பீ.பெரேரா ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் தொடர்பில் கேள்வி எழுப்பினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதற்குப் பதிலளித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க இவ்வாறுகூறியுள்ளார். இந்தப்பிரச்சினையைச் சிறந்த முறையில்தான் தீர்த்து வைப்பேன் என்றும், இந்தப் பிரச்சினை தொடர்பாக ஊடகங்களில் கதைப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்டுக் கொண்டார் என்று அந்தக் கட்சித் தகவல்கள் தெரிவித்தன. (எ)



## ஏழை மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்

வவுனியா, ஜன. 5

வவுனியா மாவட்டத்தில் 3 ஆயிரம் ஏழை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களைக் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சுமார் 10க்கும் மேற்பட்ட கிராமங்களுக்குச்சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் இவற்றை வழங்கினார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கிராமமட்ட இணைப்பாளர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ரிப்கான் பதியுதீன், மக்கள் தொடர்பு அதிகாரி மீரா முகைதீன், பிரத்தியேகச் செயலர் சகீன், நகரசபை உறுப்பினர்களான அப்துல்பாரீ , முகமது லரீப் ஆகியோர் கலந்துகொண்டனர் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (த-110)



இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடக்குப் பிராந்திய அலுவலகத்தில் 2020ஆம் ஆண்டுக்கான உறுதிமொழி எடுக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. தொடர்ந்து அலுவலக வளாகத்தில் வடக்குப் பிராந்திய முகாமையாளர் எஸ்.சிவதரன் மரக்கன்றுகளையும் நடுகை செய்தார். (க-17)

## கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

வவுனியா ஜன.6

ஓமந்தையில் வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. வவுனியா ஓமந்தை சமுர்த்தி உத்தியோகஸ்தர் றைஸ்டீன் அவர்களின் கோரிக்கைக்கு அமைவாக இந்தக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

தந்தையை இழந்து மிகவும் வறிய நிலையில் உள்ள 20 மாணவர்களின் கற்றல் நடவடிக்கையைச் சிறப்பாக மேற்கொள்வதற்கு இலகுவாக அவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்களைப் புத்தாண்டு தினத்தில் தவலோசனின் நிதிப்பங்களிப்புடன் வெளிச்சம் அறக்கட்டளையின் ஊடாக வழங்கப்பட்டன. (ந-222)



## உலர் உணவு பொதிகள் கையளிப்பு

ஏழாலை,ஜன.6

ஏழாலை தெற்கு மயிலங்காடு பகுதியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 29 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. மயிலங்காடு வாழ் சுவீஸ் ஒன்றியத்தின் நிதியுதவி யுடன் இளைஞர் நற்பணி மன்றத்தினரால் இந்த உதவிகள் கடந்த வாரம் வழங்கப்பட்டன. (ஐ-3[illegible])

## தேர்தலுக்கு வியூகம் வகுக்கிறது சு.கட்சி

கொழும்பு, ஜன.6

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அனைத்து அமைப்பாளர்களையும் நாளை கொழும்புக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடக்கவுள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கட்சி போட்டியிடும் முறை, சிறிலங்கா பொதுஜன பெரமுனவுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள உடன்படிக்கை ஆகியன தொடர்பாக இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதைத் தவிர தேர்தல்கள் குழுவொன்றை அமைக்க வேண்டும் என்று அனைத்துத் தொகுதிகளுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்றும், அதன் முன்னேற்றம் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் கூறப்படுகின்றது. (எ)

## உலக தமிழ் பண்பாட்டு மையம் ஊடாக பல்வேறு சேவைகள்

*யாழ்ப்பாணம் ஜன.6*

உலகத் தமிழ் பண்பாட்டு மையம் விரைவில் பல்வேறு சேவைகளை வடக்கில் முன்னிறுத்தி சேவை செய்ய திடசங்கற்பம் பூண்டுள்ளது.

இந்தச் செயற் திட்டங்களை ஒருங்கிணைந்த அடிப்படையில் முன்னெடுக்க அனைவரது ஒத்துழைப்பும் மிக அவசியம் தேவை. இவ்வாறு யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீடாதிபதியும் உலகத் தமிழ் பண்பாட்டு மையத்தின் தலைவருமான பேராசிரியர் தி. வேல்நம்பி தெரிவித்தார். உலகத் தமிழ் பண்பாட்டு மையத்தின் நிர்வாக மற்றும் எதிர்கால அபிவிருத்தி தொடர்பான கூட்டம் அண்மையில் மாவிட்டபுரம் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்றது. உலகத் தமிழ் பண்பாட்டு மையம் அண்மையில் நலிவுற்ற மக்களுக்கும், புற்று நோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கும் கேட்டல் கருவிகளை வெளிநாட்டவர்களின் ஒருங்கிணைந்த நிதிப்பங்க ளிப்பில் வழங்கியிருந்தது.

இதே போல வடக்கில் பாடசாலை மாணவர்களின் கல்வி, கலை,கலாசார மற்றும் சமூக நல அபிவிருத்தி சார்ந்த விடயங்களை முன்னிறுத்திச் செயற்பட பெரு ஆர்வம் கொண்டுள்ளது. விருப்பம் உள்ளவர்கள் மாவிட்டபுரத்தில் உள்ள தலைமைக் காரியாலய நிர்வாகச் செயலாளர் சோ. செல்வரட்ணம் அவர்களுடன் தொடர்பு கொண்டு (0770 682365) படிவங்களைப் பெற்று சேர்ந்து கொள்ளலாம். விரைவில் வடக்கு மாகாணத்தை மையப்படுத்தி பாடசாலை மட்டத்தில் விவாத மற்றும் வினாடி வினாப் போட்டிகளை நடத்த எண்ணியுள்ளோம். இதனை ஊடகம் வாயிலாக முன்னிறுத்திச் செயற்படுத்துவதுடன் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு சிறப்புப் பரிசில்கள் வழங்கவும் திட்ட மிட்டுள்ளோம்-என்றார். (ந-50)

# தோற்கடிக்க திரளுங்கள்!

## மங்கள அழைக்கிறார்

*கொழும்பு, ஜன.6*

ஜனாதிபதியின் எல்லையற்ற நிறைவேற்றதிகாரத்தை மீண்டும் வலுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படவிருக்கும் முயற்சிகளை கட்சி பேதங்களைக் கடந்து, ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தோற்கடிக்க வேண்டும்.



இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடரைக் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, 'சுபீட்சத்தின் நோக்கு' என்ற கொள்கைப் பிரகடனத்தை சபையில் முன்வைத்து தனது அக்கிராசன உரையை ஆற்றினார். அதன்போது தற்போதைய அரசியலமைப்பில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டியது அவசியமாகும் என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை நீக்குவதாக ஏற்கனவே ஜனாதிபதி கூறியிருந்த நிலையிலேயே அக்கிராசன உரையிலும் அரசியலமைப்பில்திருத்தங்களை ஏற்படுத்துவது அவசியம் என்ற கருத்தை வலியுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர அவருடைய டுவிற்றர் பக்கத்தில் மேற்கண்டவாறு பதிவிட்டிருக்கிறார்.

அதில், ஓர் அரசமைப்பு சூழ்ச்சிக்கான வருடமாக 2020 அமையப்போகின்றதா? ஜனாதிபதியின் எல்லையற்ற நிறைவேற்று அதிகாரத்தை மீண்டும் ஏற்படுத்தி வலுப்படுத்தும் விதமாக மேற்கொள்ளப்படவிருக்கும் முயற்சியை கட்சி பேதங்கள் அனைத்தையும் கடந்து, ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தோற்கடிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

## நாடாளுமன்றத் தேர்தல் என்றதும்

# தொப்பி பிரட்டுகிறார் பிரபா கணேசன்



"கடந்த தேர்தலில் கோத்தாபயவுக்கு வாக்களிக்குமாறு நான் கூறியிருந்தேன். எனினும், கோத்தாபய, மஹிந்த, சஜித் பிரேமதாஷ அனைவருமே இனவாதிகள்தான். எவருமே தமிழருக்கான தீர்வைத் தங்கத் தட்டில் கொண்டுவந்து தரப்போவதில்லை. எல்லோரும் சிங்கள இனவாதிகள்தான்" என்று தற்போது கூறுகின்றார் ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவர் பிரபா கணேசன்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு சுதந்திரபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் பாடசாலை மாணவர்களுக்குப் புத்தகப் பைகள் வழங்கும் நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தலில் கோத்தாபயவின் வெற்றி உறுதி என்பதைத் தெரிந்தபடியால்தான் அவருக்கு வாக்களியுங்கள் என்று முன்னர் கூறினேன்.

அவரிடம் தமிழ் மக்களின் வாக்குகள் கொஞ்சமாக இருந்தால்தான் சண்டையிட்டாவது தமிழர்களின் உரிமைகளை அல்லது அபிவிருத்திகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று சொன்னேன்.

எனினும், அடுத்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு பின்னர் பெருமளவில் மாற்றங்கள் ஏற்படும். எமது மக்களுக்கான அபிவிருத்தியைப் பெற்றுக்கொள்வதில் நீங்கள் விழிப்பாக இருக்கவேண்டும். மாற்று இனத்தவர்களுக்கு வாக்களிக்கக்கூடாது. பசில் ராஜபக்ஷ மஹிந்த ராஜபக்ஷ எல்லோரும் வன்னியில் ஒரு சிங்களவரைக்கொண்டுவருவதற்கு முயற்சி செய்கின்றார்கள். எனவே மக்கள் கவனமாக வாக்களிக்க வேண்டும். தமிழ் மக்கள் தமிழ் மகளின் பிரதிநிதிகளுக்குத்தான் வாக்களிக்கவேண்டும் -என்றார்.

கடந்த காலங்களில் மக்களின் பிரச்சினைகளுக்குச் சரியான தீர்வு பெற்றுக்கொடுக்கப்படவில்லை.

இந்த மாவட்டத்தின் ஊடாக நாடாளுமன்றம் மற்றும் மாகாண சபைக்குள் இருந்தவர்கள் அனைவருமே இந்த மக்களைப் பற்றிச் சிந்தித்ததில்லை. தாங்கள் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கின்றோம் என்று கூறி மக்களை உசுப்பேத்திவிட்டவர்கள். வன்னி மாவட்டம் தற்போது ஏனைய மதத்தவர்களின் கைகளுக்குச் சென்று கொண்டிருக்கின்றது என்பதை உணரவேண்டும். மன்னார் மாவட்டம் மாற்று இனத்தவர்களிடம் சென்று விட்டது. வவுனியாவில் நகர்ப் பகுதியை மாற்று இனத்தவர்கள் கைப்பற்றிவிட்டனர். திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களை விட்டுவிட்டோம். மட்டக்களப்பு மாவட்டமும் தமிழர்களின் கைகளிலிருந்து போய்விட்டது. எனவே வன்னி மாற்று இனத்தவர்கள் கைகளில் போகாமல் தடுப்பதற்கு தமிழர்கள் விழிப்பாக இருக்கவேண்டும். கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சரியாகச் செயற்படவில்லை என்ற காரணத்தை வைத்துக்கொண்டு மாற்று இனத்தவர்கள்இங்குவந்தார்கள். அமைச்சர்கள் உருவானார்கள். முஸ்லிம் மக்களின் குடியேற்றங்களை உருவாக்கினார்கள். - என்றார். (த-ரி3)

# மக்களுடைய ஆணையை மறந்ததால் வந்த வினை!

## சம்பிக்க ரணவக்க கூறுகிறார்

*கொழும்பு, ஜன.6*



மக்கள் ஆணையின்படி செயற்படாமையே தமது அரசு தோல்வி அடையக் காரணமாக அமைந்தது என்று நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டளி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஹோமாகமவில் நடந்த மக்கள் சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாம் எமக்குக் கிடைத்த மக்கள் ஆணையின்படி செயற்படவில்லை. எமக்கு வழங்கப்பட்ட ஆணையின் மூலம் ராஜபக்ஷ ஆட்சியின்போது அபிவிருத்தி என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட தேசிய கொள்ளைக்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுமக்கள் நம்பியிருந்தனர்.

எனினும் எமது பொலிஸ் அமைச்சரோ அல்லது நீதி அமைச்சரோ அதில் தலையிடவில்லை. தற்போது எவ்வளவுவேகமாகப்பணியாற்றுகிறார்கள் என்பது தெரிகிறது. ஆளுங்கட்சியாக இருந்த போதும் 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தோல்வி ஏற்பட்டது. அதற்குப் பிரதான காரணம் பொதுமக்கள் 2015 ஆம் ஆண்டு எமக்கு வழங்கிய மக்கள் ஆணையை மறந்து செயற்பட்டதும் மற்றும் ஊழல் மோசடியாளர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்காமையுமாகும். - என்றார். (எ)


# சுகாதார சீர்கேட்டுடன் 7 உணவகங்கள்

*மன்னார், ஜன.6*

மன்னாரில் சுகாதாரக் குறைபாடுகளுடன் செயற்பட்ட 7 உணவகங்களின் உரிமையாளர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நானாட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி தலைமையில், பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக, வங்காலை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள உணவு கையாளும் நிலையங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது சுகாதாரக் குறைபாடுகள் உள்ளதாக அடையாளம் காணப்பட்ட 7 உணவு கையாளும் நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (க-213)

# ஒளிராத வீதி விளக்குகள்



*முல்லைத்தீவு ஜன.6*

முத்துஐயன் கட்டுப்பகுதியில் பல வீதி விளக்குகள் ஒளிராத நிலையில் உள்ளதாகக் கூறப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள முத்துஐயன் கட்டுப்பகுதியில் பிரதேச சபையினால் பொருத்தப்பட்ட பல வீதி விளக்குகள் ஒளிராத நிலையில் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளார்கள்.

முத்துஐயன் கட்டு வலதுகரைப் பாடசாலை மற்றும் தட்டடையர் மலைப்பகுதிகளில் மக்கள் நடமாட்டம் அதிகமாக காணப்படும் பகுதிகளில் பொருத்தப்பட்ட வீதி விளக்குகளே ஒளிராத நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.


சம்மந்தப்பட்டவர்கள் இந்த நிலமையை மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

(ந-ரி3)

# ‘கடற்பாதையை’ மக்கள் மயப்படுத்துக!

*யாழ்ப்பாணம் ஜன.6*

**நயினாதீவு - குறிகாட்டுவான் இறங்குதுறை இடையே சேவையில் ஈடுபடும் ‘கடற்பாதை’ சேவையினை மக்கள் மயப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**



ஏனைய தீவுகளோடு ஒப்பிடுகையில் அதிகளவான பயணிகள் நாளாந்தம் செல்லும் இடமாக நயினாதீவு காணப்படுகின்றது.

இதுவரை காலமும் அரசால் நயினாதீவு மக்களுக்கென கடல்போக்குவரத்துக்காக இலவச படகுசேவை மேற்கொள்ளப்படவில்லை. இதுவரை தனியார் படகுச் சேவையே இடம்பெற்று வந்துள்ளன.

கடந்த 2013 முதல் கடல் பாதையொன்று வீதி அபிவிருத்தி அதிகார சபை மூலமாக சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றது. குறித்த கடல் பாதையானது வாகனங்களுடன் கட்டடப்பொருள்களை ஏற்றியிறக்கும் சேவையினையே மேற்கொள்கின்றது.

எனவே குறித்த சேவையில் ஈடுபடும் கடல்பாதையினை பொதுமக்களும் பயன்படுத்த உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுக்கவேண்டும் என மக்கள் கோருகின்றனர். நேர அட்டவணையினை இரு பாலத்துறைகளிலும் காட்சிப்படுத்துவதன் மூலமும், வாகனங்களை ஏற்றுவதற்கு மாத்திரமே கடல்பாதை எனும் நடைமுறையை நீக்குவதன் மூலமும், நயினாதீவு மக்களின் போக்குவரத்தை இலகுபடுத்தமுடியும் என மக்களால் கூறப்படுகிறது.

இதேவேளை “மக்கள் கடற்பாதையில் ஏறுவதற்கு நாங்கள் தடைவிதிப்பதில்லை. பெரும்பாலான மக்கள் தனியார் படகிலேயே பயணிப்பர். மிகக் குறைவானோரே கடற்பாதையில் பயணிக்க வருவர். அவர்களுக்கு நாம் எந்தத் தடையும் போடுவதில்லை அவர்களையும் ஏற்றியே செல்கிறோம். அதேவேளை கடந்த காலத்தில் ஏற்பட்ட கடல்வற்று காரணமாகவே நேர அட்டவணைக்கு ஏற்ப கடற்பாதையைச்செலுத்தமுடியவில்லை. எனினும் இனிவரும் காலத்தில் நேர அட்டவணையைக் காட்சிப்படுத்தி அதற்கேற்ப உரிய நேரத்தில் செலுத்த முடியும்” என வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் தெரிவித்தனர். (அ-ந)



## 200 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

*வவுனியா,ஜன.6*

வவுனியா வர்த்தக சங்கத்தின் “அனைவருக்கும் கல்வி” என்ற உதவித்திட்டத்தினூடாக பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வவுனியாவில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள 200 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வர்த்தக சங்கத்தின் தலைவர் சுஜன் சண்முகராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பொலிஸ் உயர் அதிகாரிகள் , சிவில் பாதுகாப்பு துறை அதிகாரிகள் , வவுனியா நகரசபைத் தலைவர், உபதலைவர் , உறுப்பினர்கள், வவுனியா தெற்கு பிரதேச சபை தலைவர், சுகாதார மருத்துவப் பணிமனை அதிகாரிகள், வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளர் , முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத் தலைவர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வவுனியா வர்த்தக சங்கத்தினர் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு இது போன்ற பல்வேறு செயற்றிட்டங்களை வவுனியாவில் கடந்த சில மாதங்களாக முன்னேடுத்து வருகின்றனர். (ஐ-ரி4)

## பதுளை சரஸ்வதி சாதனை

*யாழ்ப்பாணம் ஜன.6*

பதுளை சரஸ்வதி தேசியக் கல்லூரியின் 59 மாணவர்கள் பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கு தகுதி பெற்று பெரும் சாதனை படைத்துள்ளனர்.

அண்மையில் வெளியான க.பொ.த உயர்தரப்பரீட்சைப்பெறுபேறுகளின் அடிப்படையில், பதுளை சரஸ்வதி தேசிய கல்லூரியானது, ஊவா மாகாணத்தின் தமிழ் மொழிப் பிரிவில் பெரும் சாதனை படைத்துள்ளது.

உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் 7 பேரும், கணிதப் பிரிவில் 5 பேரும், வணிகப் பிரிவில் 14 பேரும், கலைப்பிரிவில் 10 பேரும், உயிரியல் தொழில்நுட்பப் பிரிவில் 13 பேரும், பொறியியல் தொழிநுட்பப் பிரிவில் 10 பேரும் பல்கலைக்கழகத் தகைமையைப் பெற்றுள்ளனர். இதனடிப்படையில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுள் 59 பேர் பல்கலைக்கழகத் தகைமையைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கணித, உயிரியல் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பப் பிரிவில் காணப்பட்ட பட்டதாரி ஆசிரியர் பற்றாக்குறையைதீர்க்கும்முகமாகமூன்று விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களை தொண்டர் அடிப்படையில் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கொழும்பு கிளையும், ஊவா தமிழ் அறவாரியமும் நியமித்து வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. நிரந்தர பட்டதாரி ஆசிரியர்கள் இல்லாத நிலையிலும் மேற்படி பெறுபேற்றினை இந்தக் கல்லூரி மாணவர்கள் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ந)

## குழிகளால் ஆபத்து

*சாவகச்சேரி,ஜன.6*

வீதிகளிலும், வீதியோரங்களிலும் நீர்க்குழாய்கள் பொருத்துவதற்காக வெட்டப்படும் குழிகளால் வாகன சாரதிகளும், பொதுமக்களும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நீர் விநியோகத்துக்காக குழிகள் வெட்டப்படுகின்றன. அவை தற்காலிகமாக மூடப்படுகின்றமையால் வேகமாக வாகனங்களில் வருவோர் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்களில் காயமடைகின்றனர்.

வெட்டப்படும் குழிகள் தொடர்பாக வீதி அபிவிருத்தி மேம்பாட்டு அதிகார சபை மற்றும் நீர் வழங்கல் அதிகார சபையினருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, அது தமது வேலையில்லை எனக் கூறி ஏனைய நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பதிலளித்தனர்.

இரு தரப்பினரும் தமது வேலையில்லை என்று கூறுவதால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு யார் பொறுப்பு என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (க-9)

## கார்த்திகை திருவிழா

*யாழ்ப்பாணம்,ஜன.6*

நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் இன்று திங்கட்கிழமை சுவர்க்கவாசலேகதாசி மற்றும் கார்த்திகைத் திருவிழா நடைபெறும்.

அன்றையதினம்பிற்பகல் 3 மணிக்குச் சிறப்பு அபிசேகம், பூசை வழிபாடுகள் இடம்பெறும். தொடர்ந்து சுவர்க்கவாயிலேகதாசி மற்றும் கார்த்திகைத் திருவிழா இடம்பெறும். (க-7)

## வதிவிட சான்றிதழ்களை சமர்ப்பிக்கவும்

*வடமராட்சி,ஜன.6*

வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் உள்ள ஓய்வூதியர்கள் வதிவிடச் சான்றிதழ்களை கிராம சேவகரிடம் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார்.

வதிவிடச் சான்றிதழ்களை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அந்தந்தப் பிரிவு கிராம சேவகர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் 2020ஆம் ஆண்டு மே மாதத்தில் இருந்து ஓய்வூதியக் கொடுப்பனவுகள் தற்காலிகமாக நிறுத்தப்படும் எனவும் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலதிகத் தகவல்களை பெற்றுக்கொள்ள தங்கள் பிரிவின் கிராம சேவகர்களிடம் தொடர்பு கொள்ளுமாறும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (ஐ)



## ஸ்கந்தா மாணவன் 2ஆம் நிலை

*யாழ்ப்பாணம் ஜன.6*

ஸ்கந்தவரோதயக்கல்லூரி மாணவன் இயந்திரவியல் தொழி நுட்ப பாடத்தில் யாழ். மாவட்டத்தில் இரண்டாம் நிலையைப் பெற்றுள்ளார்.

அண்மையில் வெளியான க. பொ.த உயர்தரப்பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் ஸ்கந்தவரோதய கல்லூரியைச் சேர்ந்த ஸ்ரீறஞ்சன் குகப்பிரியன் இயந்திரவியல் தொழிநுட்பப் பாடத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டாம் நிலையைப் பெற்றுள்ளார்.

தனது பெறுபேறு குறித்து கருத்துக் கூறிய மாணவன் குகப்பிரியன் “முதலில் எனது கல்லூரியின் அதிபர் ஆசிரியர்கள் மற்றும் எனது பாட ஆசிரியர் அல்வின் ஜென்ஸ் ஆகியோருக்கும் எனது பெற்றோருக்கும் எனது அன்பு கலந்த நன்றியைத்தெரிவித்துக்கொள்கிறேன். நான் படித்துப் பட்டம் பெற்று எனது பிரதேச மக்களுக்கு சேவை செய்வதே எனது எதிர்கால இலட்சியமாகும்.” என்றார். (அ-ந)

# சிறுபான்மைக் கட்சிகளை அழிப்பதற்கு அரசு முயற்சி

## சாடுகின்றது ஐ.தே.க.



**கொழும்பு, ஜன.6**

**சிறுபான்மைக் கட்சிகளின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இல்லாது செய்யவே அரசு புதிய அரசமைப்புத் திருத்தச் சட்டத்தைக் கொண்டுவர முயற்சிக்கின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது அனைவரும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிரச்சினைகள் உள்ளனவா? எனக்கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படியெல்லாம் கட்சியில் எந்தவொரு பிரச்சினையும் கிடையாது. நாம் ஐக்கிய தேசியக் கட்சியினராக ஒன்றிணைந்து சஜித் பிரேமதாசவின் தலைமையில் சிறப்பாகச் செயற்படுவோம்.

அதில் குழப்பங்கள் இல்லை. ஜனாதிபதித் தேர்தலில் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நாம் நினைவுப்படுத்தியவுடன்தான் அந்தத் தரப்பினர் இவ்வாறான கதைகளைக் கூறி வருகிறார்கள்.

நாம் இராணுவத்தினருக்கு எதிராக செயற்பட்டோம்என இந்தஅரசதரப்பினர், கடந்த காலங்களில் எம்மீது குற்றம் சுமத்தினார்கள். தற்போதும் இராணுவத்தினருக்கு பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. இவற்றையெல்லாம் இந்த அரசு நிவர்த்தி செய்யுமா என நாமும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

ஆட்சிக்கு வந்தவுடன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரத்ன ஆகியோரை கைது செய்தார்கள். இந்த அரசியல் பழிவாங்கலில் இருந்து மக்களை திசைத் திருப்ப, தற்போது பொருள்களின் விலைகளை தளர்த்தி வருகின்றனர். இதுதான் இவர்களது ஜனநாயகம். இந்த நிலையில் 19 ஆவது திருத்தச் சட்டத்தை மாற்றியமைக்கவும் அரசு முயற்சி செய்து வருகிறது.

அண்ணனிடம் அதிகாரம் இருப்பதை தம்பி விரும்பவில்லை. இதுதான் உண்மையாகும். இதன் ஊடாக சிறுபான்மையினக் கட்சிகளின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தையும் இல்லாது செய்யவே இந்த அரசு முயற்சித்து வருகிறது.

இது தொடர்பாக மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும். சர்வாதிகார ஆட்சியை நாட்டில் நிலைநாட்டவே இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவற்றுக்கு எதிராக நாம் அரசுக்கு தொடர்ந்தும் அழுத்தம் கொடுப்போம். அதில் எவ்வித மாற்றங்களும் இல்லை. இவர்கள் மக்களை முட்டாளாக்கும் முயற்சியில்தான் தொடர்ந்தும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் - என்றார். (எ)



## 184 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரனால் மாணவர்கள் 184 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள, ஒலுமடு, புலிமச்சிநாதிகுளம், அம்பகாமம், மன்னாகண்டல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன், ஓய்வுபெற்ற கிராம அலுவலர் பரம்சோதி தெய்வேந்திரம், சமூக ஆர்வலர் தவராசா காண்டீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-246)

## கடந்த அரசே காரணமாம்!



கொழும்பு, ஜன.6

கொழும்பு, ஷங்ரில்லா விடுதிக்கு அருகில் உள்ள 3 ஏக்கர் காணியை சிங்கப்பூர் நிறுவனத்துக்கு வழங்குவதற்கான ஒப்பந்தத்தைக் கடந்த அரசே கைச்சாத்திட்டது என அமைச்சரவை பேச்சாளர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தேசிய வளங்களை தனியார் நிறுவனங்களுக்கும், வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் வழங்குவது அரசின் நோக்கமல்ல. இந்தக் காணி சிங்கப்பூர் நிறுவனத்துக்கு ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திட்டமிட்ட வகையில் காடாக்கப்பட்டுள்ள தோட்டக் காணிகள் தொடர்பாக தோட்ட நிறுவனங்களுடன் பேச்சு முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. உரிய நடவடிக்கைகளை நிறுவனங்கள் மேற்கொள்ளாவிட்டால் அரசு மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளும். என்றார். (எ)

## தாயும் பிள்ளையும் தவறான முடிவு

*பதுளை ஜன.6*

தாயும் இரு பெண் பிள்ளைகளும் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்ய முயன்ற வேளையில் தாயும் ஒரு பெண் பிள்ளையும் சாவடைய ஒரு பிள்ளை மட்டும் தப்பியுள்ளார். இந்தச் சம்பவம் கொஸ்லந்தையைச் சேர்ந்த ஊவா மாவெல்கம என்ற கிராமத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் இடம்பெற்றுள்ளது.

ஊவா மாவெல்கம கிராமத்தைச் சேர்ந்த திலானி மன்ஜு என்ற 22 வயது நிரம்பிய தாயும் அவரது இரண்டு வயது நிரம்பிய மகளுமே கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். தற்கொலை செய்து கொண்ட பெண்ணின் மூன்றரை வயது நிரம்பிய மகள் கழுத்தில் சுருக்கிட்ட போதிலும் அவர் உயிர் தப்பியுள்ளார். மூவரும் வீட்டின் கூரைத் தடியில் சேலையினால் தூக்கிட்டு தொங்கியுள்ளனர். இந்த நிலையில் இருவர் இறந்துள்ளனர். ஒருவர் உயிர் தப்பியுள்ளார்.

தற்கொலைக்கான காரணம் இதுவரை அறியப்படவில்லை என கொஸ்லந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.பி.எம். பண்டார தெரிவித்ததோடு மேற்படி சம்பவம் குறித்து தாம் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம் எனத் தெரிவித்தார். (ந)



## சக்கரநாற்காலி கையளிப்பு

வவுனியா.ஜன.6

வவுனியா செட்டிக்குளம் பிரதேச செயலகத்தால் சிறப்புத் தேவையுடைய ஒருவருக்கு சக்கர நாற்காலி ஒன்று அண்மையில் வழங்கப்பட்டது.

செட்டிகுளம் அரசடிக்குளத்தைச் சேர்ந்த கனகரட்ணம் என்பவருக்கே இந்த உதவி வழங்கப்பட்டது.

நிகழ்வில் பிரதேச செயலாளர் கே. சிவகரன், மாவட்ட சமூக சேவை அலுவலர் செ.ஸ்ரீநிவாசன், கிராம சேவையாளர் போல் நேசராஜா, கணக்குகிளை அலுவலகர் கஜன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-222)

## சர்வமத அமைப்புகளுக்கான பயிற்சிப்பட்டறை



பதுளை ஜன.6

சர்வமத அமைப்பினருக்கான பயிற்சிப் பட்டறை அண்மையில் பதுளையில் இடம்பெற்றது. பதுளை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் தெரிவு செய்யப்பட்ட சர்வமத அமைப்புகளைச் சேர்ந்த 30 பேருக்கான "பன்மைத்துவம்" தொடர்பான பயிற்சிப் பட்டறை பதுளை "ரிவர் சைட்" உல்லாச விடுதியில் நடைபெற்றது. ஜி.ஏ.பிரபாத்குமாரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் பயிற்சிப்பட்டறையில் இலங்கை சமாதானப் பேரவையின் வேலைத்திட்ட செயலாளர் எஸ். ரசிகா மற்றும் பேரவையின் இணைப்பாளர் சமன் செனவிரட்ன சப்பிரகமுவ பல்கலைக்கழக விரிவுரையாளர் அருண் ஜயதிலக்க ஆகியோருடன் மதகுருமார் மற்றும் பேரவை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ந)

# யாழ். மாநகர பகுதிகளில் சிறப்பு டெங்கு கட்டுப்பாடு

*யாழ்ப்பாணம், ஜன.6*

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குட்பட்ட சில இடங்களில் சிறப்பு நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இந்த வாரம் முன்னெடுக்கப்படவுள்ளன என்று யாழ்ப்பாண மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினர் அறிவித்துள்ளனர்.

இதன்போது டெங்கு பெருகுவதற்கு ஏதுவான சூழல் காணப்படும் தரப்பினருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட நாவாந்துறை, ஜெ.87, ஜெ.88 கிராம அலுவர் பிரிவுகளிலும், வண்ணார் பண்ணை, ஜெ.104 கிராம அலுவர் பிரிவிலும், குருநகர் ஜெ.69 கிராம அலுவர் பிரிவிலும் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

எதிர்வரும் 7ஆம், 9ஆம், 11ஆம் திகதிகளில் இந்த நடவடிக்கைகள் இடம்பெறும். டெங்குத் தொற்றில் இருந்து விடுபடுவதை நோக்கமாகக் கொண்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. எனவே வழிபாட்டிடங்கள், சமய நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனங்கள், மற்றும் பொதுச் சந்தைகள் மயானங்கள் ஆகியவற்றின் சுற்றுப் புறத்தை சுத்தமாக வைத்திருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட திகதிகளில் உரிய தரப்பினர் அந்தப் பகுதிகளில் நின்று டெங்குத் தரிசிப்புக்கு வருபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-21)

# இலவச வகுப்புக்கள்

*குருநகர், ஜன.6*

குருநகர் பேகன் ஒஸ்லோ இணையத்தால் தரம் 3, 4, 5 ஆம் தரத்தில் கற்கும் மாணவர்களுக்காக வருடாந்தம் நடத்தப்படும் இலவச கற்பித்தல் வகுப்புக்கள் நாளை செவ்வாய்க் கிழமை மீண்டும் ஆரம்பமாகும்.

இந்த வகுப்புக்கள் யாழ். சென் ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையில் செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் மாலை 4 மணி தொடக்கம் மாலை 6 மணிவரையும், சனிக்கிழமைகளில் காலை 7 மணி தொடக்கம் காலை 9 மணிவரை நடைபெறும் என்று நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (க-51)

# முன்பள்ளி ஆரம்பம்

*குருநகர், ஜன.6*

குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள குருநகர் ஆவே மரியா முன்பள்ளி இன்று திங்கட்கிழமை கற்பித்தல் நடவடிக்கைக்காக மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று பாடசாலை நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.


இந்த முன்பள்ளி அருட்சகோதரிகளால் நடத்தப்படுகின்றது.

(க-51)

## மரண அறிவித்தல்

## கந்தையா யோகராஜா (செல்வம்)

**(ஓய்வு பெற்ற இ.போ.ச நிர்வாக உத்தியோகத்தர்)**



**தோற்றம்** 17.11.1956 **மறைவு** 05.01.2020

கரம்பைக்குறிச்சி. வரணியைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கு. இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா யோகராஜா 05.01.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கந்தையா மாணிக்கம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி குருசாமி மகேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற சுலோசனாவின் (ஓய்வு பெற்ற ஆசிரியர் - யாழ் இராமநாதன் கல்லூரி) அன்புக் கணவரும் கிருத்திகன் (தாதிய உத்தியோகத்தர் தெல்லிப்பளை. ஆதார வைத்தியசாலை). பிரியதர்ஷன் (விவசாய போதனாசிரியர் - முல்லைத்தீவு) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் வீணாவாகினி (வங்கி உதவியாளர் - இந்தியன் வங்கி). கல்யாணி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் க.செல்லத்துரை. காலஞ்சென்றவர்களான க.ஜெயவீரசிங்கம் (சிவம்). யோகேஸ்வரி (லீலா) மற்றும் சோதிமலர் (தேவி). ஜெயராணி (வசந்தி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரமேஸ்வரி. திருமதி உமாதேவி. திருமதி சுசீலாதேவி. செல்வநாயகம் காலஞ்சென்ற ராசலிங்கம். வ.ரவீந்திரராசா. ஐ.நாகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2020) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் (இணுவில்) இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் : மகன்கள்.**
**யோ.கிருத்திகன் - 077 870 8992**
**யோ. பிரியதர்ஷன் - 077 811 9636**

(CS 30434)(14.17)

## பதினொராம் ஆண்டு நினைவஞ்சலி



## ஆண்டி முருகையா

பிறப்பு
25.12.1935

இறப்பு
07.01.2009


நமது நல்வாழ்வு நலம்பெற
உலைமெழுகாய் தன்னையே உருக்கி
உழைத்த உயிர்த் தெய்வமே!
இறைவனடிகளில் உங்களை
- நாம் கண்டறிவோம்
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
பிரார்த்திக்கின்றோம்.

**மனைவி, மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**
**தியேட்டர் லேன்,**
**இணுவில் கிழக்கு, இணுவில்.**

# 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர்

## இராமச்சந்திரன் சிவகுமார் (சிவா/ மைந்தன்)



அன்னை மடியில்
06.08.1971

ஆண்டவன் அடியில்
24.12.2012

திதி : பூர்வபக்க ஏகாதசி

தெய்வத்தேவனே தேயாத வானிலவே !
தேடிப்புலம்புகின்றோம் தேம்பி அழுகின்றோம்
சேர்ந்து மகிழ்ந்திருந்த காலம் எல்லாம் மறைந்திடுமோ
உன் வார்த்தைகளை தேடுகின்றோம் வாஞ்சைக்குரியவனே

நீயற்ற வாழ்வு நீண்ட துன்ப காலம் ஐயா - நாம்
நிம்மதி இழந்தோம் நீண்டதூரம் போனதெங்கே ?
பாசமுடன் நீ வளர்த்த ஆசைமகள் வளர்ந்து - உன்
வழிகாட்டலின்றி வாடி நிற்கின்றாள்

எல்லாம் இருந்தும் ஏதும் அற்றவர்களாக
ஏங்கித் தவிக்கின்றோம் எங்கு ஐயா சென்றுவிட்டாய்
பாசமானவனே நீ ஓடி மறைந்து இன்றுடன்
ஏழாண்டுகள் சென்றுவிட்டதையா
பரிதவிக்கும் அம்மா, மனைவி, பிள்ளை உன்
உடன் பிறப்புக்கள், உறவுகள் எல்லாம்
உன்னைக் காணாது காத்துக் கிடக்கின்றனர்
எப்போ நீ வருவாய் ஐயா !

உன் ஆத்ம சாந்திக்காக அனுதினமும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி..... ஓம் சாந்தி..... ஓம் சாந்தி.....

உன் பிரிவால் துயருறும் :
**குடும்பத்தினர்.**

**12/02, தொட்டியடி,**
**விசுவமடு.**

(AKN 904)(14,17)

# கல்வி, பண்பாட்டில் தேசம் மிளிரட்டும்

## மணிவண்ணன் உரை

*யாழ்ப்பாணம், ஜன. 6*

கல்வியிலும் பண்பாட்டிலும் சிறந்த முறையில் தமிழ்த்தேசம் மிளிர வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கல்வி மேம்பாட்டுப் பிரிவின் ஊடாக வலி.கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. அங்கு உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையை மாறி மாறி ஆட்சி செய்துவந்த சிங்கள அரசுகள் தமிழ் மக்களின் பெரும் சொத்தாகக் கருதப்படும் கல்வியை அழித்து ஒழிப்பதன் மூலம் தமிழ் மக்களை அடிமைப்படுத்தி விடலாமென்று செயற்பட்டு வருகின்றன.

அதன் ஓர் அங்கமே தமிழர்களின் உயர் கல்வி வாய்ப்பைப் பறித்த தரப்படுத்தல் முறை.

எமது எதிர்காலச் சந்ததி சிறந்து விளங்குவதற்கு எமது சிறார்கள் கல்வியில் சிறப்பான நிலையை அடைய வேண்டும்.

தாயகத்திலே நடந்தேறுகின்ற போதைப்பொருள் கலாசாரம் வாள்வெட்டுக் கலாசாரம் என்பனவற்றிலிருந்து எமது தேசம் விடுபட்டு கல்வியில் சிறந்த பண்பட்ட தேசமாக மிளிர வேண்டும்.

அதற்கு எமது அரசியல் இயக்கம் தனது சக்திக்கும் அப்பாற்பட்டுச் செயற்படும் - என்றார்.

இந்த நிகழ்வில் வலி. கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் சிறிகுமரன் உட்பட கட்சி உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர். (த-ரி1)



# நள்ளிரவுக் கொள்ளை பணம், 12 பவுண் அபேஸ்

## கோவிலாக்கண்டியில் சம்பவம்

*சாவகச்சேரி, ஜன. 6*

*முகமூடி அணிந்து நள்ளிரவு வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் அங்கிருந்த தம்பதியை அச்சுறுத்தி 12 பவுண் தங்க நகைகளையும் 90 ஆயிரம் ரூபாவையும் அபகரித்துச் சென்றுள்ளனர் என்று முறையிடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.*

சம்பவம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு ஒருமணியளவில் தென்மராட்சி தெற்கு கோவிலாக்கண்டியில் இடம்பெற்றுள்ளது. இது பற்றி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். விசாரணை இடம் பெறுகின்றது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த-9)

# வவுனியாவில் சிரமதானம்



வவுனியா வர்த்தக சங்கம் ,பொலிஸ் திணைக்களம் ஆகியன இணைந்து வவுனியாவில் மாபெரும் சிரமதானப் பணியை கடந்த வியாழக்கிழமை முன்னெடுத்தன.

வவுனியா நகரப்பகுதியில் இருந்து ஆரம்பமாகிய சிரமதானப் பணி பொதுமருத்துவமனை, பேருந்து நிலையம், முதன்மை வீதிகள் போன்ற பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டன. டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் அடையாளம் காணப்பட்டு அழிக்கப்பட்டன.

பெருமளவான பொலிஸ் உத்தியோகத்தர்கள், வர்த்தக பிரமுகர்கள் கலந்து கொண்டு துப்புரவு பணியில் ஈடுபட்டனர். (ஐ-110)

# மகளிருக்கு பதக்கம்

சாவகச்சேரி ஜன.6

சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகள் இருவர் பதக்கங்களை பெற்றுள்ளனர்.


இலங்கைப்பாடசாலை மாணவர்கள் இடையே கண்டி சுவர்ணமாலா மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற அகில இலங்கை கர்நாடக சங்கீதப் போட்டியில் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகள் இருவர் பதக்கங்களைப் பெற்றுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டியில் தனி வாக்கியப் பிரிவில் மாணவி உ. சகானா வீணை இணைத்தல் போட்டியில் தங்கப் பதக்கத்தையும் புல்லாங்குழல் இசைத்தலில் மாணவி ச.ஆத்மிகா வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டனர். (ந-9)

# மருதங்குளத்தில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வு

## தடுத்து நிறுத்துமாறு விவசாயிகள் கோரிக்கை

*முல்லைத்தீவு, ஜன. 6*



முல்லைத்தீவின் புதுக்குடியிருப்பு மேற்கிலுள்ள மருதங்குளம் பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்ந்துகொண்டிருக்கின்றது என்றும் இதைத் தடுத்து நிறுத்துமாறும் மருதங்குளத்தின் கீழான நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மருதமடு குளத்தின் கீழ் 300 ஏக்கருக்கும் அதிகமான விவசாய நிலங்களில் நெற்செய்கை இடம்பெறுகின்றது.

கஷ்டப்பட்டு நிதி உதவிகள் பெற்று வயலுக்கு வாய்க்கால் கட்டப்பட்டுள்ளதால் அதனை மண்போட்டு மூடிவிட்டு அதன் மேலாக உழவு இயந்திரங்களைக் கொண்டுசென்று சட்டவிரோதமாக மணல் அகழ்ந்து செல்கின்றனர்.

இதனால் வயலுக்குத் தண்ணீர்கண்டு செல்ல முடியாத நிலையும் கட்டப்பட்ட வாய்க்கால் சேதமடையும் நிலையும் ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இந்தப் பகுதியில் கடந்த 10 வருடங்களாக மணல் அகழ்வு இடம்பெறும் நிலையில் தற்போது தீவிரமடைந்துள்ளது.

இதனால் காட்டுப் பகுதி பெரிய குளம் போன்று காட்சியளிக்கின்றது.

இவற்றைத் தடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொலிஸ்நிலையத்தில்முறையிட்டாலும் பயனில்லை.

அவர்கள் கண்டுகொள்வதில்லை.

இதேவேளை, குளத்தின் பழைய வான் பகுதியிலிருந்து 150 மீற்றர் தூரத்துக்குள் மணல் அகழ்வு சட்டவிரோதமான முறையில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. இதனால் வனங்களும் அழிக்கப்படுகின்றன. இதனைத் தகுந்த அதிகாரிகள் கவனத்தில் எடுத்து குளத்தையும் மக்களையும் பாதுகாக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுமட்டுமன்றி, மருதமடுக் குளத்தின் கீழான விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று சம்பவ இடத்துக்குப் புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் உப தவிசாளர் க.ஜெனமேஜயந் சென்று பார்வையிட்டுள்ளார். (த-ரி3)

# உரிமை வழங்குமாறு கோரி பெண் பணியாளர் ஊர்வலம்

*வவுனியா,ஜன. 6*




வவுனியா வர்த்தக நிலையங்களில் பணிபுரியும் பெண் பணியாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கக் கோரி, விழிப்புணர்வு ஊர்வலம் வவுனியாவில் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட உள்ளூராட்சிப் பெண்கள் ஒன்றியம், பொது அமைப்புக்ளின் ஏற்பாட்டில் ஊர்வலம் இடம்பெற்றது.

வவுனியாபழையபேருந்து நிலையத்தின் முன்பாக ஆரம்பமான ஊர்வலம், கண்டிவீதி வழியாகச் வவுனியா நகரசபை மற்றும் மாவட்ட செயலகம் வரை இடம்பெற்றது.

அங்கு மனுக்கள் கையளிக்கப்பட்டன.

ஆணுக்குப் பெண் சமத்துவம் வழங்கப்பட வேண்டும், அடிக்காதே அடிக்காதே பெண்ணை அடிக்காதே, வேண்டாம் வேண்டாம் வன்முறை வேண்டாம் போன்ற கோசங்களை எழுப்பி பெண்கள் ஊர்வலமாகச் சென்றனர்.

"கடந்த மாதம் வவுனியா வர்த்தக நிலையம் ஒன்றில் பணிபுரிந்த பெண் ஊழியர் ஒருவர் தாக்கப்பட்டிருந்தார். இதற்கு நீதி கிடைக்க வேண்டும். மருத்துவ சேவைகள், சேமலாபநிதி, வேலை நேரம், சுகாதார விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

பெண்களுக்கான பாதுகாப்பு மற்றும் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்" என்று ஊர்வலத்தில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர். (க-110)

# ஐ.தே.கட்சிக்கு இனி எல்லாம் தோல்வியே!



கொழும்பு, ஜன.6
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக யார் தெரிவானாலும் அதன் தோல்வி உறுதியாகிவிட்டது.
அதனால் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தேர்தலை எதிர்கொள்ள ஆர்வமாக உள்ளது எனத் தெரிவித்துள்ளார் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ.

“முன்னாள் அமைச்சர் சஜித் பிரேமதாஸ போன்ற தூரநோக்கு இல்லாத தலைவர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இதற்கு முன்னர் உருவானதில்லை.
ஐக்கிய தேசியக் கட்சி உள்ளூராட்சித் தேர்தலை காலம் தாழ்த்தி நடத்திய போதும் , அவர்களின் கோட்டை என்று சொல்லப்படும் இடங்கள் கூட மொட்டின் வசமாகின.
அதேபோல் எப்போது, எந்தத் தேர்தல் நடந்தாலும் ஐ.தே.க கட்சியின் தோல்வி உறுதியாகிவிட்டது. உட்பூசல்கள் காரணமாக ஐ.தே.க மூன்று பிரிவுகளாக காணப்படுவதால் , அந்தக் கட்சி தேர்தலை எதிர்கொள்ளும் நிலையில் இல்லை” எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# மாணவர்கள் மதிப்பளிப்பு



வவுனியா,ஜன.6
வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் தரம் ஐந்து புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.
இந்த நிகழ்வு நேற்று முன்தினம் பாடசாலையின் அக்குவைனஸ் கேட்போர் கூடத்தில் ஆரம்பப்பிரிவின் பதில் அதிபர் அருட்சகோதரி யசோதா தலைமையில் இடம் பெற்றது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட மேலதிக செயலர் த. திரேஸ்குமார், வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தின் பங்குத்தந்தை அருட்பணி எம். ஜெயபாலன், வவுனியா தெற்கு கோட்டக்கல்விப்பணிப்பாளர் சீ. மரியநாயகம் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

# வவுனியாவில் டெங்கு ஒழிப்பு



வவுனியா, ஜன.6
வவுனியா தமிழ் மகா வித்தியாலய வளாகத்தில் நேற்று டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.
வவுனியா மாவட்டப் புகைப்படக் கலைஞர்களால் இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.
வவுனியா புகைப்படக் கலைஞர் சங்கத்தின் செயலாளர் பொன்.
சுபாஸ்சிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த டெங்கு ஒழிப்புச் செயற்பாடு, வவுனியா பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கெ.சிவரஞ்சன் மேற்பார்வையில் இடம்பெற்றது. (எ-110)

# வவுனியாவில் ஆடை வங்கி

வவுனியா, ஜன.6
வவுனியா வைத்தியசாலையின் விடுதியில் தங்கியுள்ள நோயாளர்கள் மற்றும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்களின் ஆடைத் தேவையை நிறைவு செய்யும் நோக்குடன் இலவச ஆடைவங்கியொன்றுதிறக்கப்படவுள்ளது.
பூந்தோட்டம் முதியோர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த ஆடை வங்கி எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா பொது வைத்தியசாலையில் திறக்கப்படவுள்ளது.
இந்த வங்கியில் புதிய ஆடைகள் மற்றும் தம்வசம் வைத்துள்ள பாவனைக்கு மேலதிகமான நல்ல நிலையில் உள்ள ஆடைகளைப் பொதுமக்கள் வைப்புச் செய்து உதவ முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-110)

# வர்ணமயமாகும் தரிப்பிடங்கள்

மன்னார், ஜன. 6
மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள பயணிகள் தரிப்பிடங்கள் தூய்மையாக்கப்பட்டு வர்ணம் பூசுதல் மற்றும் படம் வரையும் நடவடிக்கைகள் நேற்று முன்தினம் நடைபெற்றன.
மாந்தை மேற்கு பிரதேச செயலர் எஸ்.கேதீஸ்வரன் தலைமையில், அடம்பன் பொலிஸாரின் அனுசரணையுடன் இவை இடம்பெற்றன. மாந்தை மேற்கு பிரதேச இளைஞர்கள் வர்ணம் பூசி படம் வரையும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இந்தப் பிரிவில் 10 பயணிகள் தரிப்பிடங்கள் தூய்மையாக்கி வர்ணம் பூசப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (த-56)

# பொறியியல் பீட மாணவர்கள் கிளிநொச்சியில் கண்காட்சி




கிளிநொச்சி, ஜன.6
யாழ்ப்பாணம் பல்கலைக் கழகப் பொறியியல் பீட மாணவர்களால் வருடாந்தம் நடத்தப்படும் கண்காட்சி கிளிநொச்சி வளாகத்தில் இன்று திங்கட்கிழமையும், நாளை செவ்வாய்க்கிழ்மையும் நடைபெறவுள்ளது.
காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை கண்காட்சி நடைபெறும். யாழ்ப்பாணப் பல்கலைக் கழக தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார்.
இலவச மருத்துவ முகாம், குருதிக் கொடை முகாம், பாடசாலை மாணவர்களுக்கான பல்கலைக் கழக மற்றும் தனியார் கற்கை நெறிகள் பற்றிய விளக்கம், மாணவர்களுக்கான பயிற்சிப்பட்டறை போன்றன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-6)

# காணிகளை உடனடியாக துப்புரவாக்க அறிவுறுத்தல்

## இல்லாவிட்டால் சட்ட நடவடிக்கை

கிளிநொச்சி, ஜன.6
நீண்ட காலப் பராமரிப்பு இன்றிக் காணப்படும் காணிகளின் உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று கரைச்சிப் பிரதேச சபை தெரிவித்துள்ளது.
கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் நீண்டகாலமாகப் பராமரிப்பு இன்றிக் காணப்படும் காணிகளில், கலாசாரப் பிறழ்வான நடவடிக்கைகள், போதைப் பொருள் பாவனை, சட்டவிரோதச் செயற்பாடுகள், நுளம்பு மற்றும் விசஜந்துக்களின் பெருக்கம் என்பன காணப்படுகின்றன என்று மக்களின் தொடர்ச்சியான முறைப்பாடுகளை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.
காணி உரிமையாளர்கள் உடனடியாகக் காணிகளைத் துப்புரவாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் காணிகள் பிரதேச பையின் நிதியில் துப்புரவு செய்யப்பட்டு, அதற்கான செலவுகள் உட்படக் காணியின் இன்றைய சந்தைப் பெறுமதியின் 2 வீதமும் உரிமையாளர் அல்லது பராமரிப்பாளரிடம் இருந்து அறவிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-6)

# பொலிஸ் காவலரண் முறிகண்டியில் தேவை

## கிராம அமைப்புக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன.6
முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட முதன்மை வீதியின் திருமுறி கண்டிப் பகுதியில் பொலிஸ் காவலரண் அமைக்கப்பட்ட வேண்டும் என்று கிராம அமைப்புக்கள் கோரிக்கை விடுக்கின்றன.
ஏ9 வீதியில் அமைந்துள்ள முதன்மையான ஆலயமாக திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலயம் காணப்படுகின்றது.
ஆலயத்துக்கு நாள்தோறும் பல நூற்றுக்கணக்கான மக்கள் சென்று வழிபாடு மேற்கொள்கின்றனர். இங்கு ஏதாவது சிக்கல், முரண்பாடு இடம்பெற்றால் மாங்குளம் பொலிஸார்தான் வரவேண்டும்.
அது சாத்தியப்படாதுள்ளது.
கிளிநொச்சியில் எல்லைக் கிராமங்கள் காணப்படுகின்றன.
இந்தக் கிராமங்களின் பாதுகாப்புக்கும் பொலிஸாரின் கண்காணிப்புத் தேவையாகவுள்ளது என்று தெரிவிக்கின்றனர். (த-ரி3)

# வீதியில் இறந்த கன்று: அகற்றிய இளைஞர்கள்

வவுனியா, ஜன.6
கன்றுக்குட்டி ஒன்று வீதி விபத்தில் இறந்து மூன்று நாள்களாகத் துர்நாற்றம் வீசிய நிலையில், இளைஞர்கள் அதை அகற்றி இலகுவான போக்குவரத்துக்கு வழியேற்படுத்தினர்.
வவுனியா புதியகற்பகபுரம் பகுதிக்குச் செல்லும் பிரதான வீதியின் அருகே கன்றுக்குட்டி இறந்த நிலையில் காணப்பட்டது.
அதை யாரும் அகற்றாத நிலையில், அந்த வீதியில் போக்குவரத்துச் செய்யும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.
புதிய கற்பகபுரம் இளைஞர்களின் முயற்சியால் கன்றுக்குட்டியின் சடலம் நேற்று முன்தினம் அகற்றப்பட்டது. (த)

# உங்கள் குணாதிசயங்களை கண்டறியும் ஜப்பானிய சோதிடம்



(தொடர்ச்சி)

உங்கள் பெயரை ஆங்கிலத்தில் எழுதிக்கொள்ளுங்கள். அதில் மூன்றாவதாக வரும் எழுத்துக்கான விளக்கம்தான் உங்களின் குணாதிசயம்! உதாரணமாக ஆங்கிலத்தில் Mathusha ஆக இருந்தால் 'Mathusha' வில் வரும் 't'யைதான் தெரிவு செய்ய வேண்டும்!

O அதிகம் அன்பு காட்டுவார்கள். மற்றவர்களுக்குக் கற்றுத் தருவதில் ஆர்வம் கொண்டவர்கள். ஆய்வுகளை மேற்கொள்வதில் அலாதிப் பிரியம் இவர்களுக்கு உண்டு.

P எல்லா விஷயங்களிலும் முதன்மையாக இருக்க விரும்புவார்கள். பிடிவாதக்காரர்கள். சுற்றியுள்ள வர்களை எப்பொழுதும் சந்தோஷமாக வைத்திருக்க விரும்புவார்கள். சுயநலம் உண்டு. நல்ல நகைச்சுவை உணர்வுகொண்டவர்கள்.

Q உண்மையாகவும், நேர்மையாகவும் வாழ நினைப்பவர்கள். நட்பாகப் பழகவும், அறிவுரைகள் கேட்கவும் சிறந்த நபர்கள். எந்த நேரத்திலும் எந்த சூழ்நிலையிலும் எதையும் விட்டுக் கொடுக்கமாட்டார்கள். மற்றவர்கள் ஒரு பாதையில் சென்றால் இவர்கள் வேறு பாதையில் செல்ல விரும்புவார்கள். கூச்ச சுபாவம் இருக்கும்.

R நல்ல ஞானம் உடையவர்கள். இரக்க குணம் அதிகமாக இருக்கும். மற்றவர்களின் கஷ்டங்களைப் போக்குபவராக இருப்பார்கள். பிடித்தவர்களுக்கு எந்த எல்லைக்கும் சென்று உதவுவார்கள். முன்கோபம் அதிகம்.

S நம்பகத்தன்மை கொண்டவர்கள். எந்த இடத்தில் இருந்தாலும் அந்த இடத்தின் நடுநிலையாக இருப்பார்கள். பணக்காரர்களாக ஆசைப்படுவார்கள். அதனால் பணம் சம்பாதிப்பதிலும் அதை சேமிப்பதிலும் இவர்களை மிஞ்ச ஆள்கள் இல்லை.

T இருவருக்கு இடையே பிரச்சினை ஏற்பட்டால் அதைத் தீர்த்து வைப்பதில் இவர்களது பங்கு முக்கியமாக இருக்கும். அதிர்ஷ்டத்தை விட உழைப்பை அதிகம் நம்புவார்கள். இவர்களது வெகுளித்தனமும், உதவி செய்யும் குணமும் மற்றவர்களை ஈர்க்கும். புதுமையை விரும்பும் இவர்கள் பழைய விஷயங்களில் ஈடுபாடு இல்லாமல் இருப்பார்கள்.

U கடினமான உழைப்பாளிகள். சொகுசாகவும், வசதியாகவும் வாழ விரும்புவார்கள். இவர்களுக்கு எதை எப்பொழுது செய்ய வேண்டும் என்று தெளிவாகத் தெரியும். புதிய புதிய விஷயங்களில் அதிக கவனம் செலுத்துவார்கள். வாழ்க்கையில் அடுத்த நிலைக்குச் செல்ல விரும்பும் நபரைப் பிரியவும் தயங்கமாட்டார்கள்.

V உண்மையான மனிதர்களாக இருப்பார்கள். ஞாபக சக்தி அதிகம். கடின உழைப்பாளியான இவர்கள், அவ்வப்போது கிசுகிசுக்களிலும் சிக்குவார்கள். மற்றவர்களைச் சார்ந்து வாழ்ந்தாலும், அவர்களை மற்றவர்கள் சார்ந்து வாழ்ந்தாலும் அதற்கு ஏற்றாற் போல் நடந்துகொள்வார்கள்.

W மனத் தள்ளாட்டத்துடனேயே காணப்படுவார்கள். சிக்கலுக்குள் மாட்டிக்கொண்டோமோ என்ற பயம் எப்பொழுதும் இருக்கும்.

X எந்தவொரு பிரச்சினைகளுக்குள்ளும் வர விரும்பமாட்டார்கள்.

Y கவனத்துடன் செயல்படுபவர்கள். இவர்களில் பலர் பணக்கார வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்க விரும்புவார்கள். சொந்த இடத்தில் இருக்கத்தான் விரும்புவார்கள். மற்றவர்களுடன் எளிதில் சேர்ந்து விடமாட்டார்கள்.

Z இலக்கை நோக்கிப் பயணிப்பவர்கள். அலுவலகத்தில் சிறப்பான ஆளாக நிர்வாகத்தினரால் பார்க்கப்படுவார்கள். நம்பிக்கையும் ஒற்றுமைக் குணமும் கொண்டவர்கள். இவர்களிடமிருந்துதான் ஒரு வேலையை எப்படி செய்து முடிக்க வேண்டும் என்பதைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

# செய்வினை பாதிப்பில் இருந்து காக்கும் விரதம்



பொதுவாக எல்லாவகையான செய்வினைகளிலிருந்து வரும் பாதிப்பிலிருந்து நம் குடும்பத்தையும், தொழிலையும் காப்பாற்றிக் கொள்வதற்கு ஒரு சுலபமான துர்க்கை விரத வழிபாடு உள்ளது.
வீட்டில் துர்க்கை அம்மனின் படத்துக்கு முன்பு நல்லெண்ணைதீபம்ஏற்றிவைத்து, குங்குமத்தைநீரிலோ அல்லது பன்னீரிலோ கரைத்து ஒரு பாத்திரத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.
உதிரிப்பூக்களை ஒரு தாம்பாளத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அதன்பின்பு அந்த பூக்களை குங்குமம் கரைக்கப்பட்ட தண்ணீரில் தொட்டு துர்க்கை அம்மனின் திருவுருவ படத்துக்கு அர்ச்சனை செய்ய வேண்டும். இந்த பூஜையை தினம்தோறும் இரவு 7 லிருந்து 8 மணிக்குள் செய்யலாம். தினமும் செய்ய முடியாதவர் விரதம் இருந்து வாரத்தில் இரண்டு முறை தொடர்ந்து செய்து வரலாம்.
இதன் மூலம் நமக்கு முன்னேற்றத்தில் இருந்த தடைகள் எல்லாம் படிப்படியாக கண்டிப்பாக குறையும். ஆனால் முழு மனதுடன் அந்த துர்கையை பரிபூரணமாக நம்பி பூஜை செய்வது அவசியம். செய்வினையின் பாதிப்பால் தொடர்ந்து தோல்வியில் அவதிப்பட்டு வருபவர்களுக்கு இந்த விரத பூஜை முறை நல்ல வழிகாட்டியாக அமையும்.



## தினம் ஒரு சிந்தனை

# ஆனந்தம் ஆரம்பம்

ஒவ்வொரு மனிதனும் தான் செய்கின்ற எல்லாச் செயல்களுக்கும் 'ஒரு பதில் விளைவு' இருக்கின்றது என்பதை அழுத்தம் திருத்தமாக அறிய வேண்டும். இப் பதில் விளைவு, செயல்கள் எப்படியோ அதற்கேற்றாற்போலவே பலனைப் பொழிகின்றன. ஒரு விதத்தில் ஆன்மிகமும் ஆன்மிகத்தை விதைக்கின்ற மதங்கள் போதிப்பதும் இந்தக் கருத்தையேதான்.
உங்களின் நல்ல செயல்களுக்கும் தீய செயல்களுக்கும் மிகச் சரியான பலன்களைத் தவறாமல் கொடுப்பது எது? கேட்டால் இறைவன் என்று அடித்துச் சொல்வீர்கள்! சரி, அது எங்கிருந்து கண்காணிக்கும்? வானத்திலிருந்தா? இல்லை பக்கத்திலேயே நின்று கொண்டா? அப்படியென்றால் உயிர் என்பது என்ன? தெய்வம் அல்லாத தனிப்பொருள்தானா எம்முடைய உயிர்?
நம்பிக்கை வையுங்கள். தெய்வம்தான் எமக்குள் உயிராகவும் ஆழ்நிலை மனமாகவும் விளங்குகிறது.
அங்கிருந்துதான் எம்முடைய சகல செயல்களும் அவனுடைய ஏட்டில் பதிவாகிப் பலனாய்த் திரும்புகிறது. செயல்களைச் சீரமைத்துக் கொண்டு வாழ்வதன் மூலமே இறைவனின் அருளைப்பெறலாம். தீயசெயல்களால் பலன் துன்பம் என்பதை மனதில் கரைத்து விடுங்கள். செயல் சுத்தத்தின் மூலம் வாழ்வில் பெறமுடியாதது ஒன்றுமில்லை. உங்களின் சந்ததிக்கும் நல்ல எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்கும் வல்லமை புண்ணியங்களுக்கு உண்டு. செயல்களுக்கும் ஏற்ற விளைவுகள் உண்டு என்பதை அறிந்திருந்தாலும் அதன்படி நடக்க மறுக்கின்றோம். உங்களின் கட்டளைக்குட்பட்டவர்களில் ஒருவர் சிறு தவறு செய்துவிட்டால் தேவையின்றி அதைப் பெரிதுபடுத்தி அந்த நபரை ஓங்கி அடித்தவிடுகிறீர்கள். அவமானத்தில் தலைகுனிந்த அந்த நபருடைய வருத்தம் அந்த நிமிடமே உங்களின் பாவக்கணக்கில் சேர்க்கப்படுகிறது. காலமும் நேரமும் கனியும் போது அதே அடியும் அவமானமும் உங்களுக்குத் தவறாமல் வந்து சேரும். இந்த இறை நியதி யாரையும் விட்டதில்லை.
இதைக் கவனியுங்கள். 'கத்தியெடுத்தவனுக்குக் கத்தியாலே சாவு' என்ற கருத்தைக் காதில் வாங்கியிருப்பீர்கள். ஏன்? அப்படி நடந்தவற்றையும் நிச்சயமாகப் பார்த்திருப்பீர்கள். இதனைப் போலவே சகல காரியங்களுக்கும் அதற்கேற்ற விளைவுகள் உண்டாகின்றன என்பதை அழுத்தமாக நம்புங்கள். இந்தக் கருத்து உங்களுக்கு ஆழ்மனதில் அழுத்தமாகப் பதிந்துவிட்டால் எல்லாச் செயல்களின் போதும் ஒரு கவனம் தோன்றும். இந்தக் கவனம்தான் தீயசெயல்கள் தோன்றாமல் விளைவுகளைச் சிந்திக்கச் செய்து தீயதை மலமாக்கி உமிழ்கிறது.
ஆக பிறவிகளைக் கடந்தாலும் விளைவுகள் விடாது என்பதை நம்மால் அறிய முடிகீறது. இந்த உணர்வுதான் நம்மை ஆனந்த நிலையில் நிறுத்தக்கூடிய சக்தி. இவ்வுணர்வுகள் விழிப்புணர்ச்சிகளாக மாறும் எல்லாச் செயல்களிலும் கவனத்தோடு 'இது சரியா?' என்ற சுய ஆய்வு நடக்கும். பிறகு வரும் விளைவுகள் நல்லனவாக அமைவதால் வாழ்வும் காயங்களின்றி, துன்பங்களின்றி விடுதலையாகும். 'விளைவறிந்த விழிப்பு நிலை' என்று எம்முடைய ஒவ்வொரு செயலையும் பிறருக்குத் தீங்கு நேராதபடி பாதுகாத்தலே விளைவறிந்த விழிப்பு நிலை. இந்த விழிப்பு நிலையே ஆனந்தத்தின் ஆரம்பமாக அமைகிறது.

## ரஞ்சனுக்கு...

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க நேற்று மாலை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணைகளில் அவர் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், வெளிநாடு செல்வதற்கு நீதிமன்ற தடையுத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. நுகேகொட, கங்கொடவில நீதிவான் முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்ட நிலையிலேயே அவருக்குப் பிணை வழங்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் கைது செய்யப்பட்டிருந்தார். மேல் மாகாண தென் பிராந்திய குற்றவியல் பிரிவின் அதிகாரிகளால் மாதிவெலயில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்தே அவர் கைது செய்யப்பட்டதுடன், அனுமதிப் பத்திரமில்லாத துப்பாக்கியொன்று, துப்பாக்கி ரவைகள் மற்றும் சில சட்டவிரோத ஆவணங்களும் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டன.

நுகேகொடை நீதிவான் நீதிமன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட தேடுதல் ஆணையின் அடிப்படையில் இந்தத் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட சோதனை உத்தரவின் பிரகாரம் மேல் மாகாண தென் பிராந்திய குற்றவியல் பிரிவினர் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவு, ஊழல் மோசடிப் பிரிவு, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு உட்பட துறைசார் அதிகாரிகள் உள்ளடங்கிய குழுவொன்றே நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் இல்லத்தில் சோதனை நடவடிக்கைகளுக்காகச் சென்றது.

சந்தேகத்துக்கிடமான இறுவட்டுக்கள், மடிக்கணினி, துப்பாக்கி, துப்பாக்கி ரவைகள் 127 மற்றும் சந்தேகத்துக்கிடமான ஆவணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த ஆவணங்கள், சொத்துக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்பில் மேல் மாகாண தென் பிராந்திய குற்றவியல் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குற்றப்புலனாய்வுப் பிரிவு, ஊழல் மோசடி பிரிவு, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு உள்ளிட்ட பிரிவுகளின் விசாரணைகளில் தலையீடு செய்துள்ளாரா? விசாரணைகளுடன் தொடர்புபட்டுள்ளாரா? விசாரணைகள் தொடர்பில் அதிகாரிகளுடன் தொடர்பை பேணியுள்ளாரா? என்ற கோணத்தில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. (ஒ.5,22,24)

## கடல் அலையில்...

சேர்ந்த இராமசாமி மாணிக்கராசா (வயது-36) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறையில் ஒரு மரணசடங்கில் கலந்து கொள்ள அவர் வந்துள்ளார். இறுதிக் கிரியைகள் முடிவடைந்த பின்னர் மதியமளவில் கடலில் குளிக்கச் சென்றுள்ளார். இதன்போதே அவர் கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார். அவரைக் காப்பாற்ற முயன்ற இன்னொருவரும் கடல் அலையில் சிக்குண்டு இழுத்துச் செல்லப்பட்டுள்ளார். பின்னர் அவர் காப்பாற்றப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்ட மாணிக்கராசாவை மீனவர்கள் நீண்ட தேடுதலின் பின்னர் சடலமாக மீட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை தொண்டைமானாறில் சுழியில் சிக்குண்டு இளைஞர் ஒருவர் உயிரிழந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ.5,26,160,173)

## கிணற்றுக்குள்...

நேற்றுக் காலையிலிருந்து காணாததால், உறவினர்கள் அவரைத் தேடியுள்ளனர். இதன்போது வீட்டுக்கு அண்மையில் உள்ள விவசாயக் கிணற்றில் அவரது சடலம் கண்டறியப்பட்டது. மூதாட்டி கிணற்றுக்குள் தவறி விழுந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. வவுனியாப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஒ.ந.110)

## கூட்டமைப்பு...

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய கொள்கை விளக்க உரையை அடியோடு நிராகரித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களை வெளியிடத் தொடங்கிவிட்டார்கள். தனது ஆட்சிக் காலத்தில் ஒற்றையாட்சியையும் புத்தசாசனத்தையும் பாதுகாத்தே தீருவேன் என்று ஜனாதிபதி கோத்தாபய தெரிவித்துள்ளமையில் என்ன தவறு இருக்கின்றது?

அவர் நாட்டின் தலைவராக இருக்கின்றபடியால் ஒற்றையாட்சியைப் பாதுகாத்தே தீர வேண்டும். அதேவேளை, சிங்கள பௌத்த மக்களின் வாக்குகளால் மட்டும் ஜனாதிபதியாகத் தெரிவான அவர், புத்தசாசனத்தையும் பாதுகாத்தே தீர வேண்டும்.

தமிழ் மக்களின் வாக்குகளால் கோத்தாபய ஜனாதிபதியாகத் தெரிவாகவில்லை. வெறும் சிங்கள பௌத்த மக்களின் வாக்குகளால் மட்டுமே அவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார் என்பதைக் கூட்டமைப்பின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

சமஷ்டி வேண்டும் என்று ஒற்றைக்காலில் நிற்கும் கூட்டமைப்பினர் ஒற்றையாட்சியை விரும்பமாட்டார்கள் என்பது உண்மைதான். பிரபாகரனால் பெற முடியாத சமஷ்டியை எப்படி இவர்களால் பெற முடியும்?

இந்த நாட்டில் பெரும்பான்மையாக சிங்கள மக்களே இருக்கின்றார்கள். அவர்களின் கொள்கையையும், கலாசாரத்தையும் தமிழ், முஸ்லிம் மக்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதன்மூலமே இன நல்லிணக்கத்தை இந்த நாட்டில் ஏற்படுத்த முடியும்.

இந்தநிலையில், நாட்டைப் பிளவுபடுத்தும் வகையில் இன வன்முறையைத் தூண்டும் வகையில் கருத்துக்களை வெளியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அரசு உடன் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் என்றார். (ஒ.5,22)

## கடற்படை...

வித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு மதுபோதையில் கடற்படை முகாமுக்குள் புகுந்து இரண்டு சந்தேக நபர்களும் கடற்படையினர் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாகவும், கடற்படையினரும் பதிலுக்குத் தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் கடற்படையினர் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர். பொலிஸார் சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்தனர். அவர்களில் ஒருவர் பொலிஸ் பாதுகாப்புடன் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். மற்றையவரை பொலிஸார் தடுத்து வைத்துள்ளனர். (ஒ.5,ரி3)

## திடீரெனக்...

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ்ப்பாணம் இ.போ.ச பஸ் நிலையப் பணியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று மாலை திடீர் பணிப்புறக்கணிப்பில் ஏனைய பணியாளர்கள் குதித்தனர். இதனால் சகல பஸ்களும் சேவையில் ஈடுபடவில்லை. பெண் பயணிகள் உள்ளிட்ட சகலரும் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாமல் பஸ் நிலையத்தில் அந்தரித்தனர்.

தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு நேற்றுப் பஸ் ஒன்று வந்துள்ளது. அந்தப் பஸ்ஸுக்கு வழித்தட அனுமதி இல்லை என்று கூறப்படுகின்றது. இது தொடர்பில் தென்னிலங்கை பஸ்ஸின் நடத்துநருடன், யாழ். பஸ் நிலையத்தைச் சேர்ந்த இ.போ.ச ப் பணியாளர் முரண்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. தெற்கிலிருந்து வந்த பஸ்ஸின் நடத்துநர் தனது பையிலிருந்த பணத்தைக் காணவில்லை என்று பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்து பொலிஸார், யாழ்ப்பாணம் பஸ் நிலையப் பணியாளரைக் கைது செய்துள்ளனர். இதனையடுத்து கைது செய்யப்பட்ட பணியாளரை விடுவிக்குமாறு கோரி, யாழ்ப்பாணம் பஸ் நிலையப் பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கான சேவை மற்றும் உள்ளூர் சேவைகள் யாவும் திடீரென நிறுத்தப்பட்டன. மாலை நேரம் என்பதால், வேலை முடிந்து வீடு செல்வதற்கு பெண் பயணிகள் உட்பட நூற்றுக்கணக்கானோர் பஸ்ஸுக்காக காத்திருந்தனர். திடீரென இ.போ.ச சேவைகள் இடை நிறுத்தப்பட்டதால் பயணிகள் அந்தரித்தனர். சில பயணிகள், தமது ரிக்கெட் பணத்தை மீளத் தருமாறு நடத்துநர்களிடம் கேட்டுள்ளனர்.

பயணிகள் மீது சீறிப் பாய்ந்த, தூசண வார்த்தைகளால் பேசியும், அவர்களைத் தாக்கவும் நடத்துநர்கள் முற்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பஸ் நிலையத்துக்கு வருகை தந்து நிலைமைகளை ஆராய்ந்தார்.

கைது செய்யப்பட்ட பணியாளர் தாக்குதல் நடத்தியதாகவும், கைப்பேசியைக் காணவில்லை என்று செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாகவே அவரைக் கைது செய்ததாகவும் குறிப்பிட்டார். "அவர் பணியில் இருந்ததாகக் கூறுகின்றீர்கள். ஆனால் அவர் மதுபோதையில் காணப்படுகின்றார்" என்று பொலிஸ் பொறுப்பதிகாரி, போராட்டத்தில் ஈடுபட்ட இ.போ.ச. பணியாளர்களிடம் கூறினார்.

இதன் பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது. (ஒ.5,105)

## குமார்...

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"குமார் பொன்னம்பலம் சிறந்த மனித உரிமை செயற்பாட்டாளர். தமிழ்த் தேசிய விடுதலைக்காக இறுதிவரை குரல் கொடுத்தவர். 1990 மற்றும் அதற்கு முந்திய காலப் பகுதிகளில் இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைகளுக்கு எதிராக ஓய்வில்லாமல் உழைத்தவர். தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடுகின்றார்கள் என்பதனை அவர் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டதுடன், அதை சர்வதேச அரங்கில் நியாயப்படுத்தும் செயற்பாடுகளை, முழுமையாகவும் தீவிரமாகவும் முன்னெடுத்தவர்.

அவரது படுகொலையுடன் தொடர்புடையவர்கள் இன்று வரை தண்டிக்கப்படவில்லை. அது தொடர்பான முழுமையான விசாரணை கூட நடத்தப்படவில்லை. இன்றுள்ள தலைமைகள் கூட அதனை வலியுறுத்தவில்லை. ஏனெனில் அவரது அழிவு இன்றிருக்கக் கூடிய பலருக்கு வாய்ப்பைக் கொடுத்திருக்கிறது.

அவர் மறையாமல் இருந்திருந்தால் ஜனநாயாக அரங்கிலே விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளுக்கு வலுச் சேர்க்கும் ஒருவராக நிச்சயம் இருந்திருப்பார். ஜனநாயக குரலும் விடுதலை புலிகளின் பேச்சு மேசைக் குரல்களும் ஒன்றாக இருக்கின்ற போது தமிழர்களுக்கான விடிவு சாத்தியமாகியிருக்கும். அதன் மூலம் பௌத்த பேரினவாத வன்முறைகளை ஓரளவுக்கு முடிவுக்கு கொண்டு வரக்கூடிய சூழ்நிலையை நாம் உருவாக்கியிருக்க முடியும். முள்ளிவாய்க்கால் அழிவு நடைபெறாமல் தடுத்திருக்க முடியும். இன்று போர் முடிந்து 10 ஆண்டுகளாகியும் விடுதலை பெறமுடியாமல் நாம் தவித்து கொண்டிருக்கிறோம்.

அவரது ஆத்மா சாந்தியடைவதற்காக தமிழ் தேசத்துக்கான அங்கீகாரத்துக்காக எல்லோரும் குரல் கொடுக்க வேண்டும். அந்த ஒன்றுபடுதலினூடாக நிச்சயமாக எங்களுடைய தேசத்தின் விடிவை சாத்தியமாக்கிக் கொள்ள முடியும்"என்றார். (ஒ.5,110)












# இன்றைய நாள்

**மேடம்:** முக்கியமான செயல் எளிதாக நிறைவேறும். தொழில், வளர்ச்சி பெற முக்கியஸ்தரின் உதவி கிடைக்கும். பணப்பரிவர்த்தனை அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும்.

**இடபம்:** உறவினர்களிடம் விரக்தியுடன் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் தேவை. நிலுவைப்பணம் வசூலாகும். ஒவ்வாத உணவைத் தவிர்க்கவும்

**மிதுனம்:** மனதில்உறுதிநிறைந்திருக்கும். எதிரியால் தொந்தரவு விலகும். தொழில், வியாபாரம் வளர்ச்சி காண கூடுதலாகப் பணிபுரிவீர்கள். கூடுதல்வருமானம்கிடைக்கும். அறப்பணி செய்து மகிழ்வீர்கள்.

**கடகம்:** அண்டை வீட்டார் அன்பு பாராட்டுவர். எதிர்கால வாழ்வில் நம்பிக்கை கொள்வீர்கள். தொழில், வியாபாரம் செழிக்கும். தாராள பணவரவு கிடைக்கும். ஒற்றுமையும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும்.

**சிம்மம்:** மனதில் குழப்பம் ஏற்படலாம்.அனுபவத்தை பாடமாகக் கருதி செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் உருவாகும். செலவுக்கேற்ற பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** சிலர் பயனற்ற வகையில் பேசுவர். சொந்தப்பணியில் அக்கறை காட்டுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் குறுக்கிட்ட தடைகளைச் சரி செய்வீர்கள். சீரான பணவரவு கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் தேவை.

**துலாம்:** பெரியோர்களின் சொல்லுக்கு மதிப்புத் தருவீர்கள். தாமதமான பணி புதிய முயற்சியால் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் மூலதனம் செய்வீர்கள். உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும்.


**விருச்சிகம்:** மனதில் புத்துணர்வு ஏற்படும்.குடும்பத்தினர் ஆதரவாக இருப்பர். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும்.வெகுநாள்களாகத் தேடிய பொருள் கிடைக்கும்.


**தனுசு:** குடும்பத் தேவைகளில் கவனம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட தன்மை இருக்கும்.வரவை விட செலவு அதிகரிக்கும். உணவு கட்டுப்பாடு நல்லது.

**மகரம்:** முன்யோசனையுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் அனுகூலம் பாதுகாக்கப்படும். சிக்கனம் அவசியம். தாய்வழி உறவினரால் நன்மை உண்டு.

**கும்பம்:** இஷ்ட தெய்வ அருளால் நன்மை பெறுவீர்கள். செயல்கள் சிறப்பாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும்.

**மீனம்:** மனதில் சஞ்சலம் உருவாகலாம். பணிகளை நிறைவேற்றுவதில் தாமதம் இருக்கும். தொழில்,வியாபார வளர்ச்சிக்கு நண்பரின் ஆலோசனை உதவும். சீரான பணவரவு கிடைக்கும்.












ஆஸ்திரேலியாவில் காட்டுத் தீ தீவிரமடைந்துள்ளது. சுமார் 15 மில்லியன் ஏக்கர் நிலப்பகுதி தீயில் எரிந்து சாம்பராகியுள்ளது. பல்லாயிரம் வனவிலங்குகள் உயிரிழந்துள்ளன. இதனால் ஆஸ்திரேலியாவில் தற்போது அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளது.



# பூதாகரமாகிறது சுலைமான் சாவு

தெஹ்ரோன், ஜன. 6

ஈரானின் இராணுவத் தளபதிகளில் ஒருவரான சுலைமான் கொல்லப்பட்டுள்ளமை உலகெங்கும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது. மூன்றாம் உலகப்போரை நோக்கி இந்த விவகாரம் பூதாகரமாகி வருகின்றது என்கின்றனர் வல்லுநர்கள்.

ஈரானின் குவாட்ஸ் படையின் தளபதிதான் சுலைமான். ஈரானின் மிகப்பெரிய இராணுவச் சக்தியாக அவர் கருதப்படுகின்றார்.

ஈராக் மீதான ஈரானின் படையெடுப்பின் போதும், அதன் பின்னரான ஈரானின் சில இராணுவத் திட்டங்களின்போதும் சுலைமான் ஈரான் இராணுவத்தின் முதுகெலும்பாக இருந்துள்ளார்.

அதுமட்டுமல்லாமல்ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புக்கு எதிரான போரின் தந்திரராக அவர் செயற்பட்டிருந்தார். இவர் அமெரிக்காவின் ஏவுகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டமை மத்திய கிழக்கில் பெரும் போர்ப் பதற்றத்தைத் தோற்றுவித்துள்ளது.

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்திருந்த போதிலும் ஈரான் அமெரிக்காவுக்கு அடிபணியவே இல்லை. இதற்கு சுலைமானும் முதன்மைக் காரணம். இதனால் சுலைமானைக் கொன்றால்தான் ஈரானைப் பழிவாங்கலாம் என்ற எண்ணத்தில் அவர் மீது அமெரிக்கா தாக்குதல் தொடுத்துள்ளது என்பது பொதுவான குற்றச்சாட்டு.

சுலைமானின் கொலைக்காக அமெரிக்காவுக்குத் தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளது ஈரான்.

ஈரானுக்கு ரஷ்யா நிச்சயம் ஆதரவு வழங்கும். அமெரிக்காவுக்கு இஸ்ரேல் நிச்சயம் ஆதரவு வழங்கும். இது இன்னொரு போர் முனையாகவே அமையும் என்கின்றனர் நிபுணர்கள். (ம)


# வெளிநாட்டுப் பயணங்களை கைவிட்டார் மொரிசன்

சிட்னி, ஜன. 6

ஆஸ்திரேயாவில் காட்டுத் தீயினால் ஏற்பட்டுள்ள நெருக்கடியால், இந்தியப் பயணத்தை ஆஸ்திரேலியப் பிரதமர் ஸ்காட் மொரிசன் தள்ளி வைத்துள்ளார்.

இதுகுறித்து ஆஸ்திரேலிய பிரதமர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், 'ஆஸ்திரேலியாவில் மீட்புப் பணி நடவடிக்கையை நெருக்கமாகக் கவனித்து வருவதால் இந்திய மற்றும் ஜப்பான் பயணத்தை ஆஸ்திரேலியப் பிரதமர் ஒத்திவைத்துள்ளார்.

இந்தியாவும் ஜப்பானும் இதுவரை செய்துள்ள ஏற்பாடுகளை நாங்கள் மிகவும் பாராட்டுகிறோம். மேலும், வரும் மாதங்களில் சுற்றுப்பயணம் தொடர்பான மறுசீரமைக்கப்பட்ட திகதியை நாங்கள் எதிர்பார்க்கிறோம்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



# ஈரான் தவிடுபொடியாகும்

## 52 இடங்கள் இலக்கு என்று மிரட்டுகிறார் அதிபர் ட்ரம்ப்



வொஷிங்டன், ஜன. 6

அமெரிக்காவை ஈரான் பதற்றத்துக்கு உட்படுத்தினாலோ அல்லது தாக்கினாலோ அல்லது தாக்குவதற்கு முனைந்தாலோ ஈரானின் 52 இடங்கள் துரித கதியில் அமெரிக்காவால் தாக்கப்படும் என்று எச்சரித்துள்ளார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.

ஈரானின் இராணுவப் பிரிவொன்றின் தளபதி சுலைமான் அமெரிக்காவால் கொல்லப்பட்டதை அடுத்து, நாளுக்கு நாள் பதற்றம் தீவிரமாவதை அடுத்து இவ்வாறு தெரிவித்துள்ளார் ட்ரம்ப்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈரானில் 52 முக்கியமான இடங்களை அமெரிக்கா குறிவைத்துள்ளது.

அமெரிக்கர்களைத் தாக்கினாலோ அல்லது அமெரிக்க சொத்துக்களைச் சேதப்படுத்தினாலோ ஈரானிய கலா சாரத்துக்கும், ஈரானுக்கும் மிக முக்கியத்துவம் வாய்ந்த 52 இடங்களை அதிவேகமாகச் செயல்பட்டு அழித்துவிடுவோம். அமெரிக்காவுக்கு எந்தவிதமான அச்சுறுத்தலும் அளிக்காதீர்கள் - என்றார். (ம)

## வாழ்த்துக்கள்






**கடந்த 26.12.2019 அன்று கண்டியில் இடம்பெற்ற சர்வதேச ரீதியான கராத்தே தொடரில் இஸ்ன்றியூ றொக்கிறியூ (Isshinryu Rokuryu world karote Association )** கழகத்தின் கட்டைக்காட்டுப் பயிற்சி நிலையத்தில் கராத்தே ஆசிரியர் சிடொய்ன் P.**செல்வராசா** அவர்களினால் **பயிற்சிபெற்ற மாணவர்கள் 8 பேர் பங்குபற்றி 5 தங்கப் பதக்கங்களையும் 3 வெள்ளிப் பதக்கங்களையும் கைப்பற்றினர்.** அவர்களுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.


# வீனஸ்

**விசேட வைத்தியசாலை**

**Venus Speciality Hospital (Pvt) Ltd**

136, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**021 222 4172 / 021 222 8470**

**2020 ஆம் ஆண்டு புதுவருடத்தை முன்னிட்டு "வீனஸ் இன் விசேட சலுகைகள்"**

- 01.01.2020 இல் இருந்து எமது மக்களுக்கான விசேட சலுகையாக அனைத்து வைத்திய நிபுணத்துவ சேவைகளுக்கும் யாழ் நகரிலேயே மிகக் குறைந்த கட்டணமாக **1100/=** மட்டுமே அறவிடப்படும்.
- தற்போது எம்மால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சர்வதேச தரம் வாய்ந்த (International Standard) மொடியுலர் சத்திர சிகிச்சைக் கூடத்தில் (Modular Operation Theatre) அனைத்து சத்திர சிகிச்சைகளுக்கும் **விசேட சலுகைக் கட்டணம் (Discount) வழங்கப்படும்.**
- வார்ட் (Word) அனுமதிகள், சத்திர சிகிச்சைகள் அனைத்திற்கும் **Admission Fees இலவசம்.**
- வார்ட் (Word) அனுமதிக்கான அறை வாடகைகள் (Room Charges), AC, Non AC, Luxury Room என்பவற்றுக்கு **விசேட கழிவுகள்** வழங்கப்படும்.

**மேற்குறித்த சலுகைகள் "2020" புதுவருட சலுகைகளாக குறிப்பிட்ட காலத்திற்கு எமது நிர்வாகத்தால் வழங்கப்படும் என்பதனை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.**

**வைத்திய நிபுணத்துவ சேவைகள் (Channel Specialist Services)**

| | |
|---|---|
| 01. பொது வைத்தியம் | 12. நரம்பியல் சிகிச்சை |
| 02. பொது சத்திர சிகிச்சை | 13. புற்று நோயியல் சிகிச்சை |
| 03. கண் வைத்தியம் | 14. நீரிழிவு நிபுணத்து வைத்தியம் |
| 04. என்பு முறிவு நெறிவு வைத்தியம் | 15. சிறுநீரக, சனனி தொகுதி வைத்தியம் |
| 05. நரம்பியல் அறுவை சிகிச்சை | 16. ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை |
| 06. தோல வைத்தியம் | 17. சுவாச நோய் சிகிச்சை |
| 07. மன நல சிகிச்சை | 18. குழந்தை இருதய நோய் சிகிச்சை |
| 08. மூட்டு வாதவியல் வைத்தியம் | 19. அகஞ்சுரப்பியல் வைத்தியம் |
| 09. காது, மூக்கு, தொண்டை வைத்தியம் | 20. முக சீரமைப்பு வைத்தியம் |
| 10. மகப்பேற்று பெண் நோயியல் வைத்தியம் | 21. இரைப்பை, குடல் வைத்திய சிகிச்சை |
| 11. இதய நோய் வைத்தியம் | |

**அடிப்படை மற்றும் நவீன மருத்துவ சேவைகள்**

| | |
|---|---|
| 01. 24 மணிநேர வெளிநோயாளர் பிரிவு OPD | 07. இயன் மருத்துவ பிரிவு |
| 02. 24 மணிநேர வார்ட் அனுமதி | 08. அவசர சிகிச்சைப் பிரிவு E.T.U |
| 03. நவீன "மொடியுலர் (Modular)" சத்திர சிகிச்சைக் கூடம் | 09. எண்டஸ் கோப், கொலனஸ்கோப் பிரிவு |
| | 10. பற்சிகிச்சை நிலையம் |
| 04. மருத்துவ ஆய்வுகூட வசதி | 11. ஈ.சி.ஜி |
| 05. "X" கதிர் பட பிரிவு | 12. ECHO Cardiogram |
| 06. அதி தீவிர சிகிச்சைப் பிரிவு ICU | 13. E.T.T |



HONDA

**மீண்டும் மானிப்பாயில் றஞ்சிற் மோட்டோர்ஸ்**

**(றஞ்சிற் றிப்பியறிங் & சேவிஸ் சென்டர்)**

**யாழ் மக்களுக்காக றஞ்சிற் மோட்டோர்ஸ் HONDA இணைந்து வழங்கும் பண்டிகைக்கால மாபெரும் சலுகைகள்**

01.12.2019 - 15.01.2020 வரை எம்மிடம் மோட்டார் சைக்கிளினை கொள்வனவு செய்து குலுக்கல் முறையில் சோபா செற்றினை பெற்றிடும் வாய்ப்பினை பெற்றிடுங்கள்

**01.12.2012 முதல் கொண்டாவுடன் சேவை முகவராக இணைகின்றார்கள் றஞ்சிற் மோட்டார்ஸ் நிறுவனத்தினர்**

**எமது சேவைகள்**

- HONDA மோட்டார் சைக்கிள் விற்பனை
- HONDA அசல் உதிரிப்பாக விற்பனை
- HONDA சேவிஸ் & மெக்கானிக்

[மோட்டார் சைக்கிள் விற்பனைக்குப் பிந்திய சிறப்பு சேவைகள், இலவச சேவைகள் மற்றும் உத்தரவாத சேவைகள்]



AJA2272(18/17)

**பண்டிகைக் கால சலுகைகள்**

விலைக்கழிவு தெரிவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்கு 15000/- வரை

**லீசிங் மூலம் விசேட சலுகைகள்**

- SLS தலைக்கவசம்
- ஜக்கெற்
- காப்புறுதி
- பதிவுக் கட்டணம்
- இலவச சேவைகள் 05
- இரண்டு வருட உத்தரவாதம்

**காசு மூலமான சலுகைகள்**

- SLS தலைக்கவசம்
- காப்புறுதி ($3^{ம்}$ நபர் காப்புறுதி)
- இலவச சேவைகள் 05
- இரண்டு வருட உத்தரவாதம்
- சிறப்பு பரிசில்கள்

**சிறப்புசலுகைகள்**

எம்மிடம் பழைய மோட்டார் சைக்கிளைக் கொடுத்து புதிய மோட்டார் சைக்கிளினைப் பெற்றிடும் வசதி

(நிபந்தனைக்குட்பட்டது)

**Ranjit Motors**

(RRSC Motors Engineers)

**Sales & Parts**

No- 311/A, Jaffna Road, Manipay.

இல- 311/A, யாழ் வீதி, மானிப்பாய்.

021 492 7627, 021 225 5228

**Service & Parts**

No- 14 Suthumalai Road, Manipay

இல- 14 சுதுமலை வீதி, மானிப்பாய்.

021 492 7337, 021 222 3111

Mobile: 077 310 7549, 076 833 9898

E.Mail: rrscmanipay@gmail.com

F.Book: Honda Ranjit Motors



# வெற்றிபெற்றது ஞானமுருகன்!

*யாழ்ப்பாணம், ஜன. 6*

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணி வெற்றிபெற்றது.

குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஞானமுருகன் அணியை எதிர்த்து காளியம்பாள் அணி மோதியது. ஞானமுருகன் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# யங்ஹென்றிஸ் அணி அபாரவெற்றி

*யாழ்ப்பாணம், ஜன. 6*

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி வெற்றிபெற்றது.

குறித்த ஆட்டத்தில் யங்ஹென்றிஸை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதியது. இரண்டு அணிகளும் ஆட்டநேர முடிவில் தலா ஒரு கோலைப் பதிவுசெய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வைத்து வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் யங்ஹென்றிஸ் வெற்றிபெற்றது. (ம-23)



# லபஸ்சாக்னே ஆஸியுடைய எதிர்காலம்!!!

## பொண்டிங் வாழ்த்து

ஆஸ்திரேலிய அணியின் எதிர்கால அணித்தலைவர் லபஸ்சாக்னே இவ்வாறு வாழ்த்துத் தெரிவித்துள்ளார் அந்த அணியின் முன்னாள் தலைவர் பொண்டிங்.

நியூசிலாந்துக்கு எதிராக லபஸ்சாக்னே இரட்டைச் சதமொன்றை விளாசியதை அடுத்தே பொண்டிங் இவ்வாறு புகழ்ந்துள்ளார்.

பொண்டிங் மேலும் தெரிவித்ததாவது:

டிம் பெய்ன் டெஸ்டில் இருந்து ஓய்வு பெறும் வயதை எட்டவில்லை. கடந்த வாரம் மெல்போர்னில் நடைபெற்ற போட்டியில் அவருடைய சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார். தற்போது டிராவிஸ் ஹெட் துணைத் தலைவராக உள்ளார். அடுத்த 12 முதல் 18 மாதங்களில் மார்னஸ் லபஸ்சாக்னேவும் தலைவர் பதவிக்கு தகுதியானவர் என்ற பேச்சு மெல்ல மெல்ல தொடங்கும் அளவிற்கு அணியில் அவரை நிலைநிறுத்திக் கொள்வார். தற்போதைய கேப்டன் அணியில் இருந்து விலகும்போது அவர் சரியான நபராக இருப்பார் - என்றார். (ம)

# பொங்கல் விழாவும் விளையாட்டுக்களும்

*யாழ்ப்பாணம், ஜன. 6*

கோட்டைக்காடு மல்லாகம் சைவ வாலிபர் சங்க சனசமூக நிலையம் சிறி முருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம், இளைஞர் கழகம் ஆகியன இணைந்து நடத்தத் திட்டமிட்ட அமரர் செல்லப்பா சுந்தரலிங்கம் ஞாபகார்த்தமான பொங்கல் விழாவும் கிராமிய விளையாட்டுப் போட்டிகளும் எதிர்வரும் 15ஆம் திகதி இடம்பெறவுள்ளன.

மறுநாள் 16ஆம் திகதி வியாழக்கிழமை மாலை குழந்தைவேல் அரங்கில் பட்டிப்பொங்கல் விழாவும், கிராமிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கலும் இடம் பெறவுள்ளன. (ம-39)

*** *** ***

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் பொங்கல் விழாவை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகளை நடத்தவுள்ளது. இதன்படி, யாழ் மாவட்ட ரீதியில் தெரிவு செய்யபட்ட 16 அணிகளிடையான தாச்சி போட்டி எதிர்வரும் 10ஆம் திகதி மின்னொளியில் இடம்பெறவுள்ளது.

அத்துடன் கபடி போட்டியும் நடைபெறவுள்ளது. மற்றும் 11ஆம் திகதி காலை 7 மணிக்கு பண்டத்தரிப்பு சந்தியில் இருந்து வடமாகாண ரீதியிலான சைக்கிளோட்டப் போட்டி ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

12ஆம் திகதி காலை 6.30 மணிக்கு சித்திரமேழி சந்தியில் இருந்து மாபெரும் மரதன் ஓட்ட போட்டியும் பொங்கல் தினத்தன்று காலை 8.30 மணி முதல் காங்கேசன்துறை வெளிச்சவீட்டருகே பட்டம் விடும் போட்டியும் மாலை 2 மணிமுதல் இளவாலை வாலிபத்திடலில் சறுக்கு மரம் ஏறுதல், தலகணைச் சண்டை, கயிறு இழுத்தல், முட்டி உடைத்தல் முதலான பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளும், இரவு 7 மணி முதல் கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ம-23)

# இன்றைய மோதல்கள்

*யாழ்ப்பாணம், ஜன. 6*

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இன்று இடம்பெறவுள்ளன. பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

# ஆஸ்திரேலிய அணி வலுவான நிலையில்

நியூசிலாந்துக்கு எதிரான முதல் இரண்டு டெஸ்ட் ஆட்டங்களையும் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி, தற்போது நடைபெற்றுவரும் மூன்றாவது ஆட்டத்திலும் வலுவான நிலையில் உள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 454 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி நேற்றுமுன்தின இரண்டாம் நாள் முடிவில் இலக்குகளை இழக்காமல் 63 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்றுத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அந்த அணி 251 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது.

பிலிப்ஸ் அதிகபட்சமாக 52 ஓட்டங்களையும், லாதம் 49 ஓட்டங்களையும், பன்ரெல் 34 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் லயன் 5 இலக்குகளையும், ஹசில்வூட் 3 இலக்குகளையும், ஸ்ராக் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸை நேற்று ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணி இலக்குச் சரிவில்லாமல் 40 ஓட்டங்களை இதுவரை பெற்றுள்ளது. இதுவரையில் ஆஸ்திரேலிய அணி 243 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது. (ம)






## வேகப்பந்து வீச்சை வழிநடத்த ஆர்வம்!

ஸ்ரெய்ன் வெளிப்படை


ரி20 உலகக்கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்க அணியை வழிநடத்த ஆர்வமாக உள்ளேன் என்று தெரிவித்தார் தென்னாபிரிக்கா அணியின் வேகப்பந்து வீச்சாளர் டேல் ஸ்ரெய்ன்.

இதுகுறித்து ஸ்ரெய்ன் மேலும் தெரிவித்ததாவது: “என்னுடன் கடைசியாக அவர்கள் நடத்திய கலந்துரையாடலை வைத்து, இங்கிலாந்துக்கு எதிரான ரி20 தொடரில் நான் இடம் பெறுவேன் என்பது தெரிய வந்தது. எனக்கு இரண்டு வாரங்கள் சிறப்பான ஓய்வு கிடைத்துள்ளது. அதன்பின் அணிக்கு நேராக திரும்புவேன். ஒருநாள் போட்டியிலும் வலம் வருவேன். ஆனால் எத்தனை போட்டிகளில் விளையாடுவேன் என்று தெரியாது. ஆனால் உறுதியான டி20 கிரிக்கெட்டில் இருப்பேன்.

வீரர்கள் அறையில் என்னை போன்ற அனுபவ வீரர்கள் இருப்பது முக்கியமானது. ரபாடா (வயது 24) அணியின் பந்து வீச்சு குழுவை மிகவும் இளம் வயதில் வழிநடத்திச் செல்கிறார். அவரைத் தொடர்ந்து வரும் வீரர்கள் அவரை விட இளமையாக இருக்கிறார்கள். இதனால் அனுபவம் மிக்க பந்து வீச்சாளர் ஒருவர் தேவை. அப்போது அவர் தனிநபராக மட்டும்தான் அங்கு இருக்கவில்லை என்பது அவருக்கும் தெரியும்” என்றார். (ம)

நான்கு நாள் டெஸ்ட்டுக்கு

# விராட் கோலி கடும் எதிர்ப்பு



டெஸ்ட் ஆட்டங்களை நான்கு நாள்களாகக் குறைக்கும் திட்டத்துக்குக் கடும் எதிர்ப்புக் காட்டியுள்ளார் இந்திய அணியின் தலைவர் விராட் கோலி.

இந்தியாவில் நேற்று இடம்பெற்ற இலங்கை இந்திய அணிகளுக்கு இடையிலான ரி20 ஆட்டத்துக்கு முன்னதாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

என்னைப் பொறுத்தவரைக்கும், டெஸ்ட் போட்டி நடத்தப்படும் நாட்களை மாற்றக்கூடாது. டெஸ்ட் போட்டிகளை பிங்க் பந்தில், பகலிரவுப் போட்டியாக நடத்துவதே டெஸ்ட் போட்டியை வர்த்தகரீதியாக நகர்த்துவதற்காகவும், பொழுதுபோக்கு அம்சத்தைக் கூட்டுவதற்காகவும் என நான் நினைக்கிறேன்.

பொழுதுபோக்கு அம்சங்கள் இருக்கலாம். ஆனால் பாரம்பரிய டெஸ்ட் போட்டியைப் பாழ் படுத்துதல் கூடாது. ஆதலால், எனக்கு 4 நாட்கள் டெஸ்ட் போட்டியில் நம்பிக்கை இல்லை. என்னைப் பொறுத்தவரை, பகலிரவு டெஸ்ட் போட்டியே மிகப்பெரிய மாற்றம், இதற்கு மேல் பாரம்பரிய டெஸ்ட் போட்டியில் மாற்றம் செய்யக்கூடாது.


இப்படியே சென்றால், 4 நாட்கள் டெஸ்ட் போட்டியை சில ஆண்டுகள் கழித்து, 3 நாள்கள் நடத்தலாம் என்று ஆலோசனை கேட்பீர்கள். என்றோ ஒருநாள் டெஸ்ட் போட்டியே காணாமல் போய்விடும். உங்களைப் பொறுத்தவரைக்கும் ஓட்டங்கள் எனும் எண்ணிக்கை, பொழுதுபோக்கு மட்டும்தான். பாரம்பரிய போட்டியைப் பாதுகாக்க வேண்டியதில்லை. இதுபோன்ற ஆலோசனைகளை நான் ஆதரிக்கவும் மாட்டேன், வரவேற்கவும் மாட்டேன். பாரம்பரிய டெஸ்ட் போட்டிக்கு இந்த ஆலோசனை சரியானது இல்லை. கிரிக்கெட் போட்டி உலகில் எவ்வாறு பரிணமித்தது, தொடங்கியது என்பதை அறிய வேண்டும், 5 நாட்கள் நடக்கும் டெஸ்ட் போட்டிதான் உயர்ந்தது. ரி20 போட்டி என்பது காலத்தின் மாற்றத்தால் புதிதாக உருவானது. இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம் அறிமுகப்படுத்தும் 100 பந்துகள் கிரிக்கெட் பற்றியும் பேச முடியும். ஆனால் என்னைப் பொறுத்தவரை என்னை மற்றொரு போட்டியில் ஈடுபடுத்தி பரிசோதிக்க விரும்பவில்லை' - என்றார். (ம)

## கடாபி கழகத்தை வென்றது மட்ரிட்!

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வெற்றிபெற்றது ரியல் மட்ரிட்.

ரியல்மட்ரிட்டை எதிர்த்து கடாபி மோதியது. ஆட்டத்தின் 34 ஆவது நிமிடத்தில் கடாபி வீரர் டேவிட் 'ஒன்கோலை' பதிவுசெய்து சொந்த அணிக்குப் பேரதிர்ச்சியை வழங்கினார். முதல் பாதியில் வேறேதும் மாற்றங்கள் நிகழவில்லை. முதல் பாதியின் முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் ரியல்மட்ரிட் அணி முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதியின் 53ஆவது நிமிடத்தில் வரானே, 90ஆவது நிமிடத்தில் மோட்ரிச் கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது மட்ரிட். (ம)



## இர்பான் ஓய்வு!

அனைத்து வகையான ஆட்டங்களில் இருந்தும் ஓய்வை அறிவித்தார் இந்திய அணியின் சகலதுறை வீரர் இர்பான் பதான்.

கடந்த 2012ஆம் ஆண்டு நடந்த ரி20 உலகக்கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்கா அணிக்கு எதிராக இர்பான் பதான் இறுதியாக விளையாடினார். அதன் பின்னர் இந்திய அணியில் இடம்கிடைக்கவில்லை. இந்த நிலையில் தேசிய அணிக்குத் திரும்பாமலேயே ஓய்வை அறிவித்தார். (ம)



# மலிங்கவிடம் இருந்து கற்கவில்லை பும்ரா இப்படி வெளிப்படைப் பேச்சு




பந்துவீச்சு முறைமைகள் குறித்து மலிங்கவிடம் இருந்து ஏதும் கற்கவில்லை - என்று தெரிவித்துள்ளார் இந்திய வேகப்பந்து வீச்சாளர் பும்ரா.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் மலிங்காவிடம் இருந்து ஜோர்க்கர் பந்து வீச்சு முறையைக் கற்றுக் கொண்டேன் என்று ஏராளமான ரசிகர்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அது உண்மையல்ல. அவர் போட்டியின் போது ஏதும் எனக்கு கற்றுத் தரவில்லை. அவரிடம் இருந்து மனநிலையை எப்படி வைத்திருக்க வேண்டும் என்று கற்றுக் கொண்டேன்.

மாறுபட்டசூழ்நிலைகளைஎப்படிக்கையாள வேண்டும். கோபப்படாமல் இருப்பது எப்படி, வீரர்களுக்கு எதிராக எப்படித் திட்டம் தீட்ட வேண்டும் என்பதைக் கற்றுக் கொண்டேன் - என்றார். (ம)

# 6 பந்துகளில் 6 சிக்சர்கள்!



ஒரே ஓவரில் 6 சிக்ஸர் அடித்த வீரர்கள் வரிசையில் உலகின் 7ஆவது வீரராக நியூஸிலாந்தின் லியோ கார்டர் இடம் பெற்றுள்ளார்.

நியூஸிலாந்தில் சூப்பர் ஸ்மாஷ் ரி20 போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் கான்டர்பரி கிங்ஸ், மற்றும் நார்தன் நைட்ஸ் அணிகளுக்கும் இடையே நேற்று லீக் ஆட்டம் நடந்தது. இதில் கான்டர்பரி கிங்ஸ் அணியின் இடதுகை பேட்ஸ்மேன் லியோ கார்ட்டர் ஒரே ஓவரில் 6 சிக்ஸர்கள் அடித்து புதிய மைல்கல்லை எட்டினார்.

நார்த்தன் நைட்ஸ் அணியின் சுழற்பந்துவீச்சாளர் ஆன்டன் டெவ்சிச் வீசிய பந்தில் தொடர்ச்சியாக 6 சிக்ஸர்களை லியோ கார்டர் விளாசினார். லியோ கார்டர் 29 பந்துகளில் 70 ரன்கள் சேர்த்து தனது அணியை 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்தார்.

உலகளவில் சர்வதேச மற்றும் உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளில் இதுவரை 6 பேட்ஸ்மேன்கள் மட்டுமே ஒரு ஓவருக்கு 6 சிக்ஸர்கள் அடித்துள்ளனர். அதில் கேரி சோபர்ஸ், ரவி சாஸ்திரி, ஹெர்சலே கிப்ஸ், யுவராஜ் சிங், வோர்செஸ்டர்ஷையர் அணி வீரர் ராஸ் வொய்ட்லி, ஆப்கானிஸ்தான் வீரர் ஹஸ்ரத்துல்லா ஜஜாய் ஆகியோர் இருந்தனர். இப்போது 7வது பேட்ஸ்மேனாக லியோ கார்டரும் இணைந்துள்ளார். (ம)

# எஸ்பன்ஜோல் பார்சா ஆட்டம் சமநிலையில்!

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில், நேற்று நடைபெற்ற எஸ்பன்ஜோல் மற்றும் பார்சிலோனா அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

ஆட்டத்தின் 23ஆவது நிமிடத்தில் லோபஸ் எஸ்பன்யோலின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். வேறெந்த மாற்றமும் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாவது பாதியில் பார்சிலோனா பலம் காட்டியது. அந்த அணியின் சார்பான சுவாரஸ் 50ஆவது நிமிடத்திலும், விடால் 59ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவுசெய்தனர். இதையடுத்து 2:1 என்று முன்னிலை பெற்றது பார்சிலோனா. லீ 88ஆவது நிமிடத்தில் பதிவுசெய்த கோலால் ஆட்டத்தை சமநிலையில் முடித்தது எஸ்பன்ஜோல்.

எஸ்பன்ஜோலை பார்சிலோனா வீழ்த்தும் என்றே கருதப்பட்டது.. ஆனால் ஆட்டத்தை சமநிலையில் முடித்தமையே எஸ்பன்ஜோலுக்குக் கிடைத்த தார்மீக வெற்றியாகப் பார்க்கப்படுகிறது. (ம)

**WANTED EMPLOYEES FOR VENUS SPECIALITY HOSPITAL**

1. Receptionist (Female)
2. IT Information Technology STAFF
3. Marketting Manager
4. Experienced Nurses (Minimum 3yrs)
5. Trainee Nurses
6. Male Attendant

**Past Experience plus point for Salary Scale**

Candidates Visit to
"Venus Speciality Hospital"
136, Palaly Road, Kandarmadam, Jaffna.
(Near Damro)
021 222 4172, 021 222 8470

2020 புதுவருடத்தை முன்னிட்டு "வீனஸ்" இன் மக்களுக்கான சலுகையாக அனைத்து வைத்திய நிபுணர் சேவைகட்கும் மிகவும் குறைந்த கட்டணமாக 1100/= மட்டுமே அறவிடப்படும்.

● உங்கள் வைத்திய தேவைகளுக்கான எங்கள் சேவையை இலகுவாகப் பெற்றிடுங்கள்

**நீங்களும் எமது முகவராக வாய்ப்பு!**

● எமது நிறுவனத்தின் வடமாகாணத்திற்கான தேங்காய் கொள்வனவு நிலையத்தில் நீங்களும் நிரந்தர முகவராக முடியும்.

● உங்களது தோட்ட தேங்காய்களுக்கு நீங்களே தரகு கட்டணம் உழைக்க முடியும்.

● உங்கள் பகுதியில் மாதாந்தம் 10.000 தேங்காய்களுக்கு மேல் கொள்வனவிற்காக ஒழுங்கு செய்து தர முடியுமாயின் நீங்களும் எமது முகவரே!

● இலகுவான முறையில் அதிகபணம் சம்பாதிக்கும் அரிய வாய்ப்பு

தொடர்புகளுக்கு:
தேங்காய் கொள்வனவு பகுதி
JNS EXPORT (PVT) LTD
0760086185
(cs 30443)

## மரண அறிவித்தல்

### திருமதி அனுசுயா சிவகுருநாதன்



தோற்றம் 28.07.1950 — மறைவு 03.01.2020

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், கொல்லங்கலட்டி, வெள்ளவத்தை, கொழும்பை வதிவிடங்களாகக் கொண்ட திருமதி அனுசுயா சிவகுருநாதன் 03.01.2020 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரட்ணம் - நல்லநாயகியம்மாள் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சிவகுருநாதனின் (இளைப்பாறிய மின் பொறியியலாளர் இலங்கை மின்சார சபை) அன்பு மனைவியும், வஜீவனின் அன்புத் தாயாரும், புவனேந்திரனின் (ஓய்வுபெற்ற வைத்திய கலாநிதி) அன்புச் சகோதரியும், விஜயலக்சுமி புவனேந்திரனின் (ஓய்வுபெற்ற வைத்திய கலாநிதி) மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2020) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் பப்பாச்சி அந்தியகால சேவை இல.38, மகாத்மாகாந்தி வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.38, மகாத்மா காந்தி வீதி,
யாழ்ப்பாணம்.
(CS/30430)(11,17)

தகவல் :
குடும்பத்தினர்.

076 894 5260 (சகோதரன்), 071 291 4496

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**

அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.